பக்கங்கள்: 30 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 14 ஞாயிற்றுக்கிழமை 31.10.2021 கதிர் 360

### இனி இது ரகசியம் அல்ல!

'தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்கு, படக்கு என்று அடிக்குமாம்!' – என்பார்கள்.

தமது இனத்துக்காகக் கூடக் கவலைப்படாத அரசியல்வாதிகள், தங்களின் சொந்த விடயம் என்றால் கிளர்ந்து எழுந்து விடுவார்கள் போலும்.

பக்கம்02

# விகிதாசாரத் தேர்தல் முறைமையை உரிய வடிவில் பின்பற்ற வலியுறுத்து



## தமிழ்,முஸ்லிம் தரப்புகள் ஒன்றுபட்டுக் கோரிக்கை

நாடாளுமன்றத்தினதும், மாகாணசபைகளினதும், உள்ளூராட்சி மன்றங்களதும் கட்சி அங்கத்துவ எண்ணிக்கை தொகுப்பு, வாக்காளர்கள் கட்சிகளுக்கு அளித்த வாக்கு ஆணையை அதிகபட்சமாக பிரதிபலிக்க வேண்டும். அதற்கேற்ப விகிதாசாரத் தேர்தல் முறைமை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

தமிழ், முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் நேற்றுக் கொழும்பில் கூடி இவ்வாறு தீர்மானித்தன. 2

## நெடியகாட்டில் 13 பேர் கைது! வன்முறைக்குழு எனச் சந்தேகம்

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம்,ஒக்.31

வல்வெட்டித்துறை நெடிய காட்டுப் பகுதிக்கு அண்மையில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்த 13 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 5வாள்கள், 2 மோட்டார் சைக்கிள் செயின்கள், 6 சரைகள் கஞ்சா மற்றும் ஒரு கிராம் 650 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் என்பன கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.


இந்தக் கைது நடவடிக்கை நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்றது.

பழைய வீடொன்றில் வன்முறைக் கும்பல் ஒன்று வன்முறைக்கு தயாராகி வருவதாக பொலிஸாருக்குக் 2

## இலங்கையின் மீது உரிய நடவடிக்கை சர்வதேச குற்றவியல் மன்று எடுக்கலாம்

### நீதியரசர் விக்கினேஸ்வரன் நம்பிக்கை

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை ஸ்தாபித்த ரோம் சாசனத்தில் இலங்கை கையொப்பம் இடவில்லை என்ற போதிலும், ஏன், எவ்வாறு, எதற்காக இலங்கை தொடர்பாக பாதிக்கப்பட்ட 200 பேர் முறைப்பாடு செய்துள்ளார்கள் என்பதை 200 பேரின் சாட்சியங்களி அடிப்படையி லும் மற்றைய சாட்சியங்களின் அடிப்படையிலும் நோக்கி, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இலங்கை தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும் என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நீதியரசருமான க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். 30



## ஜனாதிபதி கோட்டாபய குழுவினர் கிளாஸ்கோவை சென்றடைந்தனர்



ஐக்கிய இராச்சியத்தின் ஸ்கொட்லாண்ட் – கிளாஸ்கோவில் நடைபெறவுள்ள COP: 26 ஐக்கிய நாடுகள் அமைப்பின் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்வதற்காகப் புறப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கிளாஸ்கோ நகரைச் சென்றடைந்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக பிரிவு இதனை 2

## காரை பிரதேச சபைக்கு கூட்டமைப்பு உறுப்பினர் பெயர் பரிந்துரைப்பு

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம்,ஒக்.31

காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் உயிரிழந்தமையினால் ஏற்பட்ட உறுப்பினர் வெற்றிடத்திற்கு நாகராசா என்பவரின் பெயர் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற உத்தியோகத்தரான நாகாராசா கடந்த 2018ஆம் ஆண்டு காரைநகர் பிரதேச சபையில் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் பட்டியல் உறுப்பினராக இணைக்கப்பட்டிருந்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள உறுப்பினர் வெற்றிடத்திற்கே நாகராசாவின் பெயர் தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கத்தினால் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. 2

## தரம் 10,11,உயர்தர வகுப்புக்கள் நவம்பர் 08 ஆம் திகதி ஆரம்பம்

### தனியார் வகுப்புகள் 50 வீத மாணவருடன் 16 இல்!

கொழும்பு, ஒக்.31

எதிர்வரும் நவம்பர் 08 ஆம் திகதி தரம் 10,11 மற்றும் உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனக் கல்வியமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

நாட்டில்கொரோனாத்தொற்றை அடுத்து கல்விச் செயற்பாடுகள் முற்று முழுதாக முடங்கியிருந்தன. தற்போது கொரோனா தொற்றின் வீதம் குறைவடைந்த நிலையில் ஆரம்பப் பாடசாலை செயற்பாடுகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் நாடளாவிய ரீதியில் கல்விப்பொதுதராதர சாதாரணதரம் மற்றும் உயர்தர மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி முதல் 50 சதவீத மாணவர் கொள்ளவுடன் பிரத்தியேக வகுப்புக்களை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

## தமிழ் மக்களாட்சி செயற்குழுவின் பணிகள் ஆரம்பம் என்று அறிவிப்பு

### திருகோணமலையில் நேற்று ஊடக மாநாடு



தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கருத்தொருமிக்க வைக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் மக்கள் கருத்துக்களை பெற்று, அவற்றினை முன்னிறுத்தி, தமது பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தமிழ் 30

## மஹிந்தானந்தவை ஏசினார் மஹிந்தர்!

விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயை தொலைபேசியில் தொடர்பு கொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவரைக் காட்டமாக ஏசினார் என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சேதன உரத்தை தாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என சீன தூதுவரிடம் 30

## வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றத்தின் 31ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று

வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றத்தின் 31ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

யாழ் முஸ்லிம் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் 'வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் – தமிழ் மக்களுக்கான தார்மீகக் கடமை' எனும் தொனிப்பொருளில் இம்முறை நினைவு கூரப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ் மாநகர சபையின் முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா மற்றும் யாழ்ப்பாண மாநகர சபையின் உறுப்பினர்கள், முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் போது முஸ்லிம்கள் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தங்கள் கட்சிகள், கொள்கைகள், கோட்பாடுகள், அணிகள் போன்றவற்றை எல்லாம் மறந்து தமிழ் முஸ்லிம் கட்சிகளின் - அதாவது தமிழ்ப் பேசும் மக்களின் கட்சிகளின் - நேற்றைய ஒன்று கூடலைப் பார்த்தபோது எனக்கு இந்த எண்ணம் தான் மனதில் தோன்றியது.

சிறுபான்மையினரின் எதிர்காலத்தை நாசமாக்கும் இருபதாவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் கூட நாடாளுமன்றுக்கும், பிற அரசியல் கட்டமைப்புகளுக்கும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் முறைமை குறித்து ஒன்றுபட்டுக் குரல் எழுப்ப, வேறுபாடுகளைப் புறம் ஒதுக்கி, வீழ்ந்தடித்து ஓடி வந்து விட்டனர்.

சிறுபான்மையினருக்குத் தீர்வு ஒன்றை ஒன்றுபட்டு வகுப்போம், வாருங்கள் என்று கூப்பிட்டுப் பாருங்கள். தீர்வு முயற்சி வண்டியை ஒவ்வொரு மாடும் ஒவ்வொரு திசைக்கு இழுக்கும். ஆனால் இந்த விடயத்துக்கு ஒன்றுபட்டு, ஒன்றுபட வந்துள்ளனர்.

தப்பித் தவறி பழைய தொகுதி வாரித் தேர்தல் முறைமை முழுமையாக மீண்டும் நடைமுறைக்கு வருமானால், நேற்றைய கொழும்புக் கூட்டத்துக்கு - ஒன்று கூடலுக்கு - வந்த பல தலைவர்களின் தலைகள் அரசியலில் காணாமல் போயிருக்கும். பல அரசியல் கட்சிகளின் அந்தஸ்து காற்றில் கரைந்திருக்கும்.

தாங்கள் தொடர்ந்து அரசியல் செய்வற்கு - அரசியலில் நிலைத்திருப்பதற்கு - பதவிகளைத் தக்க வைத்து, மக்கள் பிரதிநிதிகளாகக் காட்டிக் கொள்வதற்கு - தங்கள் தரப்புகளின் வலுவைத் தக்க வைத்துக் கொள்வதற்கு - தேர்தல் முறைமை முக்கியம். அதனால் முரண்பாடுகளைத் துறந்து ஒன்றிணைவு.

ஆனால், தமது இன மக்களின் தீர்வுக்காக ஒரு மேசையில் இருந்து பேசுங்கள் என்றால் முன்வர மாட்டார்கள். அவரோடு ஒரு மேசையில் இருந்தால் தங்களுக்குத் தீட்டுப்பட்டு விடும், இவரோடு சேர்ந்திருந்து கலந்துரையாடினால் எங்களின் தரத்தின் கரட் குறைந்து விடும், அவர் துரோகி என்பதால் அவருடன் சரிசமமாக அமர்ந்து பேச ஏதும் இல்லை என்றெல்லாம் தத்துவங்கள் பிளப்பார்கள்.

இப்போது விவகாரம் தங்கள் கழுத்துக்குச் சேர்த்துக் கத்தி என்பதால் விழுந்தடித்து வந்து விட்டார்கள்.

இதுதான் அரசியல். நாங்கள்தான் புரிந்து கொள்ள வேண்டும்.

★ ★ ★

'அமுல்பேபி அண்ட் கோ'வின் ஏற்பாட்டில் இயங்கிய தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று ஊழியர்களுக்கு வேதனம் கொடுக்கப்படாத நிலையில் இழுத்து மூடப்படும் கட்டத்தில் இருப்பதாக வேறு சில ஊடகங்களில் செய்தி கசிந்துள்ளது.

இரண்டு விடயங்கள்.

ஒன்று - ஓர் ஊடகம் இழுத்து மூடப்படுவது என்பது வேதனைக்குரிய விடயம். எந்த வழியிலாவது, கஷ்டப்பட்டு அதனைத் தொடர்வதற்கு ஊழியர்கள் முயல வேண்டும். இது எனது விநயமான வேண்டுகோள்.

அடுத்தது - இப்போது கிராமத்துக்கு ஒரு வேலைத்திட்டம் என்று கிராம சேவையாளர் பிரிவு ஒவ்வொன்றுக்கும் தலா முப்பது லட்சம் ரூபா வேலைத்திட்ட நடவடிக்கைகள், அமுல் பேபி அண்ட் கோவின் சொந்த நிதி போல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு பகிரப்படுகின்றன. அந்தக் கணக்கில் தேறும் கமிஷனுடன் ஒப்பிடுகையில் இந்த ஊழியர்களின் சம்பளப்பணம் அல்லது நிலுவைத் தொகை - அந்த ஊடகத்தை நடத்துவதற்கான செலவினம் - வெறும் ஜுஜூபி என்றுதான் எனக்குத் தோன்றுகின்றது.

சித்தப்பா - பெறாமகன் கொடுக்கல் - வாங்கல் சுமுகமாகுமானால், 'தலைநகரம்' - 'மூலதனம்' - தப்பிப் பிழைக்கும்.

இன்னொரு விடயமும் இங்கு குறிப்பிடப்பட வேண்டும் என்ற நினைக்கிறேன்.

நன்றி மறப்பது நன்றன்று. அது ஊடகத்துறையில் மிக மிக முக்கியமானது என்பது என் கணிப்பு.

அமுல்பேபி அண்ட் கோ முதலில் மாகாண சபைத் தேர்தலில் நின்று, அதில் காலூன்றியமையால்தான் நாடாளுமன்றத்தில் சபாநாயகர் கதிரையில் அமரும் வரை இன்று நிலைமை - சந்தர்ப்பம் - உயர்வு கிட்டியது.

அந்த மாகாண சபைத் தேர்தலில் அமுல்பேபி அண்ட் கோ வெற்றி பெறுவதற்கு முனைப்பாக நின்று பங்களித்தது வடக்கின் இப்போதைய மூத்த தொலைக் காட்சி நிறுவனம்தான். அமுல்பேபி அண்ட் கோவுக்கு வடக்கு மாகாண சபைத் தேர்தல் சமயம் அந்தத் தொலைக்காட்சியும் அதன் நிறுவுநரும் அளவுக்கு மீறி பச்சாதபப்பட்டு, விழுந்தடித்துப் பணியாற்றியமை பார்த்து நான் ஆச்சரியப்பட்டேன்.

ஆனால், குறுகிய காலத்திலேயே அமுல்பேபி தானே ஒரு தொலைக்காட்சி சேவையைத் தொடங்கி இந்த நிறுவுநருக்கும் அவரின் நிறுவனத்துக்கும் கொடுத்த தொல்லையையும் - சில்லெடுப்பையும் - பார்த்து விசனித்தேன். தார தம்மியம் பார்க்காமல் உதவி செய்ததால் வாங்கிக் கட்டும் அவலம் அந்த நிறுவுநருக்கு.

கேட்டால் ஒவ்வொரு நியாயம் சொல்லுவார்கள்.

ஆயிரம் மலர்கள் மலரட்டுமே. புதிய தொலைக்காட்சி சேவை ஊடகங்கள் வரக் கூடாது, வளரக் கூடாது என்பது என் கருத்தல்ல. இருப்பதற்கு உரிய மரியாதையையும் நன்றியுணர்வையும் வெளிப்படுத்தி செயற்பட்டிருந்தால், இத்தகைய நெருக்கடி வந்திருக்காதோ என்னவோ?

இப்போதும் கூட காலம் கடந்து விடவில்லை என்று நான் நினைக்கிறேன். போட்டி மனப்பான்மையை மறந்து ஒன்றித்துச் செயற்பட்டால் எல்லா ஊடகங்களும் நிமிர்ந்து நிற்க முடியும்.

மக்கள் சிந்தனைக்கும் தகவலுக்கும் உதாரணமாக கொசுறுத் தகவல் ஒன்று.

யாழ். குடாநாட்டில் நான்கு, ஐந்து பத்திரிகைகள். யாழ்.நகரிலிருந்து சில டசின் கிலோ மீற்றர் தொலைவில் உள்ள தீவுப் பகுதிக்கு தலா ஐம்பது, நூறு பத்திரிகைகளுடன் ஐந்து மோட்டார் சைக்கிள்கள் செல்லுகின்றன. வீண்விரயம். தமிழகத்தில் பல டசின் பத்திரிகைகள். கொழும்பிலும் அப்படித்தான். ஆனால் அங்கெல்லாம் இப்படி இல்லை. ஒரே 'ரூட்'டில் பல பத்திரிகைகளை ஒருவரே விநியோகம் செய்வார். வீண் வீம்புத்தனச் செலவு குறைவு.

இங்குதான் - வடக்கில்தான் - இந்தப் போட்டி, பொறாமை எல்லாம். ஒரு 'தீஸிஸ்' எழுதும் அளவுக்கு போட்டியும், பொறாமையும்,கழுத்தறுப்பும் உள்ளன. அதில் முன்னணியில் நிற்பவை நிர்வாகங்கள்.

நாங்கள் யாழ்ப்பாணத்து நண்டுகள் அல்லவா? (நண்டுக் கதை தெரிந்தவர்கள் புரிந்து கொள்வார்களாக!)

-- மின்னல் --

## நெடிய காட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தகவல் கிடைத்ததாகக் கூறப்படுகின்றது.

அதன் அடிப்படையில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து வீட்டைச் சுற்றிவளைத்துச் சோதனையிட்ட போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர்கள் 13 பேரும் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இளைஞர்கள் மட்டுமன்றி பல குடும்பஸ்தர்களும் இருக்கின்றனர் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

## வடக்கு முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியேற்றப்பட்டமை தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்காக ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு 90ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து அனுப்பப்பட்ட முஸ்லிம்கள் இழந்த சொத்துக்கள் மீள வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது போன்ற தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன.

## காரை பிரதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேநேரம் காரைநகர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் உயிரிழந்தமையினால் விரைவில் மீண்டும் தவிசாளர் தேர்வு இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

## விகிதாசாரத் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ் முஸ்லிம் கட்சிகளான தமிழ் தேசிய கூட்டமைப்பு (தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட்),

தமிழ் முற்போக்கு கூட்டணி (ஜனநாயக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய முன்னணி, மலையக மக்கள் முன்னணி), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் நேற்றுக் கொழும்பில் சந்தித்து தேர்தல் முறை தொடர்பில் ஒன்றுபட்டு செயற்படத் தீர்மானித்தன.

இந்தச் சந்திப்பில் மனோ கணேசன் எம்.பி., ரவூப் ஹக்கீம் எம்.பி., செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., சி.சிறிதரன் எம்.பி., த.சித்தார்த்தன் எம்.பி., இராதாகிருஷ்ணன் எம்.பி., வேலுகுமார் எம்.பி., உதயகுமார் எம்.பி., கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி., ரிஷாட் (சட்டத் துறைச் செயலாளர், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ்), மதியுகயாஜா(இ.தொ.கா), எஸ்.தவராஜா (ஈ.பி.டி.பி) ஆகியோர் பங்கு கொண்டனர்.

கொழும்பில் தமிழ், முஸ்லிம் கட்சிகளின் இந்த மாநாட்டில் தேர்தல் சீர்திருத்தம் தொடர்பில் எட்டப்பட்ட பொது நிலைப்பாடு வருமாறு:-

01.பலமான நிறைவேற்று ஜனாதிபதி முறைமை, 20 ஆம் திருத்தத்தின் மூலம் மேலும் பலமாக்கப்பட்ட பின்னணியில், நாடாளுமன்ற, மாகாணசபை, உள்ளூராட்சி தேர்தல்கள், அனைத்து மாற்று அரசியல் கொள்கைகளை முன்னெடுக்கும் கட்சிகளினதும் மற்றும் அனைத்து சமூக குழுவினர்களினதும் பிரதிநிதித்துவங்களுக்கு வழிவகுக்கும் வண்ணம், முழுமையான விகிதாசார முறைமையின்படியே நடத்தப்பட வேண்டும். இதன் மூலம் நாடாளுமன்றமும், மாகாண சபைகளும், உள்ளூராட்சி மன்றங்களும் தமது பன்மைத்தன்மை வாய்ந்த பிரதிநிதித்துவம் மூலம் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையைக் கண்காணித்து, சமநிலை படுத்தும் நிறுவனங்களாக ஜனநாயகத்தின் பேரில் செயற்பட முடியும்.

02. நாடாளுமன்றத்தினதும், மாகாண சபைகளினதும், உள்ளூராட்சி மன்றங்களினதும் கட்சி அங்கத்துவ எண்ணிக்கைத் தொகுப்பு, வாக்காளர்கள் கட்சிகளுக்கு அளித்த வாக்கு ஆணையை அதிகூடச்சமாகப் பிரதிபலிக்க வேண்டும். வெற்றி பெறும் கட்சி, அளிக்கப்பட்ட வாக்குகளில் தாம் பெற்ற வாக்குகளின் விகிதாசாரத்தை விட, அதிக விகிதாசார எண்ணிக்கையில் ஆசனங்களை எடுத்து கொள்வது தவிர்க்கப்பட வேண்டும். வாக்கு விகிதாசாரமும், சபை அங்கத்தவர் எண்ணிக்கை விகிதாசாரமும், சாத்தியமானளவில் ஒன்றை ஒன்று ஒத்துப் போக வேண்டும். இந்நிலைமையை விகிதாசார தேர்தல் முறைமையின் கீழ் மட்டுமே உறுதிப்படுத்த முடியும்.

03.உள்ளூராட்சி, மாகாணசபைகள், நாடாளுமன்றம் ஆகிய மூன்று மட்ட தேர்தல்களுக்குமான சீர்திருத்தங்கள், தெரிவுக்குழுவினால் ஒரே வேளையில் தயாரி செய்யப்பட்டு, ஒரே சட்டமூலத்தின் மூலம் அரசமைப்புத் திருத்தமாகக் கொண்டு வரப்பட வேண்டும்.

04. ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல்களை, முன்னுரிமை கொடுத்து, விகிதாசார முறையின் கீழ் நடத்த அரசாங்கம் உடனடியாக முன்வர வேண்டும். - இத்தகைய பொது நிலைப்பாடே எட்டப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி கோட்டா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்துள்ளது.

காலநிலை மாற்றம் மற்றும் அதற்கு முகங்கொடுத்து செயற்படுவதற்காக நாடுகள் திட்டமிடும் வழிமுறைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்படும் ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாடு, இன்று (31ஆம் திகதி) தொடக்கம் நவம்பர் 12 வரை, கிளாஸ்கோ நகரில் நடைபெறுகின்றது. நவம்பர் 01 மற்றும் 02ஆம் திகதிகள், உலகத் தலைவர்களின் மாநாட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில், 197 நாடுகளின் அரச தலை வர்கள், அரச பிரதிநிதிகள், புத்திஜீவிகள், வர்த்தகர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சுமார் இருபத்தையாயிரம் பேர் கலந்து கொள்கின்றனர். பிரிட்டனில் இடம்பெற்ற மாநாடுகளில், இதுவே மிகப்பெரிய மாநாடாகக் கருதப்படுகிறது.

சுற்றாடல் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர, சூரியசக்தி, காற்று மற்றும் நீர் மின்சார உற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே, சுற்றாடல் துறை அமைச்சின் செயலாளர் டொக்டர் அனில் ஜாசிங்க ஆகியோரும் ஜனாதிபதியுடன் இவ்விஜயத்தில் இணைந்து கொண்டுள்ளனர்.




# பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் நாடாளுமன்றத்தை சுற்றிவளைப்பர்!

## அதற்குரிய காலம் வந்துவிட்டது என்கிறார் சஜித்



நாடு முழுவதிலும் இருந்து விவசாயிகள் தலைநகரில் ஒன்று திரண்டு நாடாளுமன்றத்தை சுற்றி வளைக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு மேல் வரம்பற்ற விதமாக அதிகாரத்தைக் கொடுத்ததன் விளைவுகளை மக்கள் தான் அனுபவிக்க வேண்டியிருப்பதாக கூறிய எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கம் அந்த அதிகாரத்தால் உந்துதல் அடைந்து, களத்தில் உள்ள பிரச் சினைகளை அரசாங்கம் மறந்து விட்டதாகவும் அவர் கூறினார்.

எந்த அரசாங்கத்துக்கும் வரம்பற்ற அதிகாரம் வழங்கப் படக்கூடாது எனக் கூறிய எதிர்க் கட்சித் தலைவர், கரும மாற்றத் தேவையான பெரும்பான்மைப் பலத்தை மட்டும் கொடுத்தால் போதும் என்றும் அவர் கூறினார்.

பக்கமுனை பிரதேசத்தில் 41 விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் இணைந்து முன்னெடுக்கும் தொடர் உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தரமான உரங்களை உரிய காலத்தில் வழங்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாகவே விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித் தலைவரிடம் தெரிவித்தனர். தற்போதைய அரசாங்கத்தைத் தவிர, முந்தைய ஒவ்வொரு அரசாங்கமும் விவசாயிகளுக்குத் தேவையான உரம் மற்றும் அது தொடர்பான இடுபொருள்களை அதிகமாகவோ அல்லது குறைவாகவோ வழங்கியுள்ளன. ஆனால், தற்போதைய அரசாங்கம் விவசாயிகளை முற்றாகவே மறந்து விட்டது. விவசாய சமூகம் மற்றும் விவசாயம் தொடர்பான முடிவுகள் தனிமையில் எடுக்கப்படாமல், அதைப் பற்றி அறிந்தவர்களுடன் கூட்டாகக் கலந்துரையாடலின் மூலமே எடுக்கப்பட வேண்டும் என்று கூறிய அவர், தற்போதைய அரசாங்கம் அவ்வாறு செய்யாததன் விளைவை விவசாயிகளும், முழு நாடுமே அனுபவிக்க நேரிட்டுள்ளதாகக் கூறினார்.

மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன, பொலன்னறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிங்ஸ் நெல்சன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிட்னி ஜயரத்ன உட்பட பிரதேச மக்கள் பிரதிநிதிகள், விவசாயிகள் என பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# சுகாதாரத் தொண்டர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்!

## டக்ளஸிடம் ஜனாதிபதி உறுதி



நீண்ட நாள்களாக நிரந்தர நியமனம் இன்றிக் கடமையாற்றி வருகின்ற வடக்கு சுகாதாரத் தொண்டர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு உறுதியளித்துள்ளார்.


இது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையிலான சந்திப்பின் போதே குறித்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் தொண்டர் விவகாரத்தை கடந்த காலங்களில் சில அரசியல் தரப்புக்கள் குறுகிய அரசியல் நோக்குடன் கையாண்டமையால் ஏற்பட்ட குளறுபடிகள் காரணமாக இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

இந்நிலையில், இந்த விடயத்தை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு சென்ற கடற்றொழில் அமைச்சர், சேவை மூப்புக் கவனத்தில் கொள்ளும் வகையில் மீண்டும் புதிதாக நேர்முகத் தேர்வுகள் வெளிப்படைத் தன்மையுடன் நடத்தப்பட்டு நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்துரையாடி சுகாதாரத் தொண்டர்களுக்கான நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தன்னுடைய செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாங்கல்யா
லக்ஷ்மி நாராயணா
இல:- 266 பலாலி வீதி.
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
திருமண சேவை
077 197 1667
077 316 4796

மணமகன் விவரம்

பிறந்த திகதி - 1989.02.27 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - விசாகம் 3
கி.பா - 54 செவ் - 11 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை உயர்பதவி மணமகள்

பிறந்த திகதி -1991.11.01 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பூரம்
கி.பா - 16 செவ் / சூரி 5
தகைமை - BSc தொழில் - T.O அரசசேவை
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகள்

பிறந்த திகதி - 1981.05.24 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - உத்தராடம்
கி.பா - 25 செவ் - 2 இல்
தகைமை - BSc தொழில் - UK PR
எதிர்பார்ப்பு - UK+ Ceylone பட்டதாரி மணமகள் தேவை

பிறந்த திகதி - 1990.05.17 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - திருகோணம்
கி.பா - 27 செவ் -12 இல்
தகைமை - Chartered Accountant
தொழில் - UK PR
எதிர்பார்ப்பு - UK or Ceylone மணமகள்

பிறந்த திகதி - 1993.03.25 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அச்சுவினி
கி.பா - 46 செவ் 8 இல்
தகைமை - IT தொழில் - Station master
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகள்

பிறந்த திகதி - 1967.08.31 மதம் - இந்து
ஜாதி - K பகுதி நட்சத்திரம் - சித்திரை 4
கி.பா - 19 செவ் - 5 இல்
தகைமை - Civil Eng தொழில் - Australia PR
எதிர்பார்ப்பு - படித்த மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1984.12.01 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அச்சுவினி
கி.பா - 67 செவ் - 12 இல்
தகைமை - Building Eng (UK) தொழில் - UK, PR
எதிர்பார்ப்பு - பட்டதாரி UK or Ceylone மணமகள் தேவை

பிறந்த திகதி -1992.05.16 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - விசாகம் 4
கி.பா - 32 செவ் - 4இல்
தகைமை - Computer Eng தொழில் - USA, PR Company
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகள்

மணமகள் விவரம்

பிறந்த திகதி - 1992.11.26 மதம் - இந்து
ஜாதி - K பகுதி நட்சத்திரம் - மூலம்
கி.பா - 76 செவ் 7 இல்
தகைமை - G.C.E A/L
தொழில் - Company
எதிர்பார்ப்பு - அரச சேவை தனியார் மணமகன்

பிறந்த திகதி - 1991.03.05 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - சுவாதி
கி.பா - 18 செவ் 7 இல்
தகைமை - Business management
தொழில் - Bank Officer
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச உயர் பதவி மணமகன்

பிறந்த திகதி - 1994.05.14 மதம் - இந்து
ஜாதி - K பகுதி நட்சத்திரம் - மிருகசீரிடம்
கி.பா - 42 செவ் - 12 இல்
தகைமை - BA தொழில் - Company
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரசசேவை மணமகன்

பிறந்த திகதி - 1991.11.23 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - ரோகிணி
கி.பா - 21 செவ் / சூரி 10 இல்
தகைமை - IT Diploma தொழில் - Company (Jaffna)
எதிர்பார்ப்பு - வெளிநாடு, உள்நாடு அரச சேவை மணமகன்


பிறந்த திகதி - 1975.11.08 மதம் - இந்து
ஜாதி - V சைவம் பெண் நட்சத்திரம் - பூராடம்
கி.பா - 30 செவ் - 8 இல்
தகைமை -B.Sc, M.Sc தொழில் - NGO Company
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரசorதனியார்சைவபோசனமணமகன்

பிறந்த திகதி - 1996.01.29 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - பூராடம்
கி.பா - 18 செவ் - 10இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - UK, Australia பட்டதாரி மணமகன் (Doctor, Eng)

பிறந்த திகதி -1993.02.27 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - பரணி
கி.பா - 25 செவ் -3 இல்
தகைமை - BSc MSc தொழில் - Australia PR
எதிர்பார்ப்பு - பட்டதாதி Australia மணமகன் தேவை

பிறந்த திகதி - 1988.09.27 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - ரேவதி
கி.பா - 51 செவ் - 5 இல்
தகைமை - .BA தொழில் - அரச சேவை
எதிர்பார்ப்பு - அரசசேவை பட்டதாரி மணமகன்

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.



ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
காலைக்கதிர்
தொலைபேசி
021 222 3000



Personal English Classes



K Ganesh (BA.Pera)
இந்த தனி வகுப்புகளில் படிக்கும் போது பேச்சு பயிற்சிகளும் இடம்பெறும்.
Grade 7-
GCE OL AL
பட்டதாரிகள் ,
தொழில்புரிவோர்
Spoken Grammar
கற்கமுடியும்.
077 766 8725
நீராவியடி, யாழ்ப்பாணம்



இறைச்சிக் கோழி விற்பனை
புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A
பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# சந்தி சிரிக்கும் ஆட்சி

தென்னிலங்கையில் பௌத்த, சிங்களப் பேரினவாதத்தைத் தூண்டி, அந்த அரசியல் உணர்வெழுச்சியில் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சி அதிகாரத்தைப் பிடித்தாராயினும், அவரின் ஆட்சி முறைமையில் பல புதிய விடயங்களை மக்கள் எதிர்பார்த்தனர்.

ஓர் இராணுவக் கட்டுக்கோப்புப் பாணிக்குள் பழகி வந்தவர் என்பதனால் அவரது ஆட்சி முறைமையில் இராணுவக் கட்டுக்கோப்புப் பண்பு பின்பற்றப்படும் எனப் பலரும் எதிர்பார்த்தனர். ஓர் ஒழுங்கும், ஒழுக்கமும், கட்டுப்பாடும் இராணுவப் பண்பில் அமையும் என மக்கள் நம்பினர்.

எதிர்பார்த்தபடி சிவில் ஆட்சி முறைமை பல விடயங்களில் இராணுவ மயப்படுத்தப்பட்டது. சிவில் அதிகாரிகள் செய்ய வேண்டிய பல பணிகள், கடமைகள் இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

நாட்டை பேரிடருக்குள் ஆழ்த்திய கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்கான செயலணியின் தலைவராக இராணுவத் தளபதி நியமிக்கப்பட்டார். சுகாதார அமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சுப் போன்ற முக்கிய கட்டமைப்புகளின் செயலாளர்களாக முன்னாள் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். முன்னாள், இந்நாள் படை அதிகாரிகள் சிவில் நிர்வாக சேவையைக் கைப்பற்றினர்.

சிவில் நிர்வாகம் படைமயமாக்கப்படும் பேராபத்து நடந்ததே தவிர, நாட்டின் அரசியல் – அரசாட்சி – ஓர் ஒழுங்கான கட்டுக் கோப்புக்குள் – ஒழுக்கத்துக்குள் – வரவேயில்லை. மாறாக, அவை சீர்கெட்டிருப்பதுதான் மிச்சம்.

அமைச்சரவை என்பது கூட்டுப் பொறுப்பில் இயங்க வேண்டியது. அமைச்சரவையில் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுவதாகக் கூறப்படும் அமைச்சரவைத் தீர்மானத்தை அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள பங்காளிக் கட்சிகளின் தலைவர்களே – அமைச்சரவை உறுப்பினர்களே – பகிரங்க வெளியில் வைத்து, பிய்த்து உதறும் கேவலம் இங்கு அரங்கேறுகின்றது. ஆனால், இராணுவக் கட்டுக் கோப்புப் பாணிக்கு புகழ்பெற்ற' ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அது குறித்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முடியாது மலைத்துப் போய்ப் பார்த்திருக்கின்றார்.

அரசாங்கத்தின் கூட்டுப் பொறுப்பைத் தூக்கிக் கடாசிவிட்டு, சிலர் தம்பாட்டில் முடிவுகளை எடுத்து, அவற்றை அமைச்சரவைத் தீர்மானங்களாகக் காட்டி, தம்மிஷ்டப்படி அரசாட்சியைக் கொண்டு நடத்துகின்றார்கள் என்று அரசுக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் – அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் – செய்தியாளர்கள் மாநாடு கூட்டிப் பகிரங்கமாகப் பொது வெளியில் அமைச்சரவையை நாறடிக்கும் விதத்தில் பேசுகின்றார்கள். ஆனால் அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்க வக்கற்றவராகப் பார்த்து, செயலிழந்து, மூச்சிழந்து நிற்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

கெரவலப்பிட்டிய மின் நிலையப் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்குக் கை மாற்றும் தீர்மானம் அமைச்சரவையில் முறையாக விவாதித்து முன்னெடுக்கப்பட்டதல்ல என்பதைப் பகிரங்க வெளியில் விலாவாரியாகப் போட்டுடைத்திருக்கின்றனர் அமைச்சர்கள் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல போன்றோர்.

ஜனாதிபதி கோட்டாபய தமது அமைச்சரவையைக் கொண்டு நடத்தும் சீத்துவத்துக்கு இந்தப் பகிரங்கக் குற்றச்சாட்டு ஒரு நல்ல நற்சான்றிதழ்.

அது மட்டுமல்ல, இந்தப் பங்குக் கைமாறல் ஒப்பந்தத்தை ரத்துச் செய்யக் கோரி ஜே.வி.பி., கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித், வண. ஆனந்த முருத்தெட்டுவ தேரர் போன்ற தரப்பினர் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்குக்கு இந்த அமைச்சர்களின் பொது வெளியிலான கருத்துகள் நல்ல ஒப்புதல் வாக்குமூல சாட்சியங்களும் கூட.

கோட்டாவின் ஆட்சி முறைமை சந்தி சிரிக்கின்றது என்பது மட்டும் உண்மை.

# முல்லைத்தீவு வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு திறப்பு



இலங்கையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு இல்லாது இயங்கிய ஒரே ஒரு வைத்தியசாலையாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை இதுவரை காணப்பட்டுள்ளது.

இந்நிலையில் நீண்ட கால தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக பல்வேறு கொடையாளர்களின் 4 கோடி ரூபா நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு கடந்த வெள்ளிக்கிழமை உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு கட்டடத்தை இலங்கை உணர் அழியியல் சங்கத் தலைவர் பேராசிரியர் மாகொழுகம திறந்து வைத்தார்.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் க.வாசுதேவா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் இலங்கை உணர் அழியியல் சங்கத் தலைவர் பேராசிரியர் மாகொழுகம, முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் மு.உமாசங்கர், அரச மருத்துவ சங்க பிரதிநிதிகள் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை வைத்தியர்கள், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர், தாதிய உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# 2020 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயக அறிக்கை சபாநாயகரிடம் கையளிப்பு



2020ஆம்ஆண்டுக்கானகணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையை கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பி.சி.விக்ரமரட்ன சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளித்தார்.

இதன்போது நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக மற்றும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

அரசமைப்பின் 148 ஆவது சரத்தின் கீழ் நிதி தொடர்பான முழுமையான கட்டுப்பாடு நாடாளுமன்றத்துக்குக் காணப்படுகிறது.

இந்தச் செயற்பாட்டை வினைத்திறனாக முன்னெடுப்பதற்கு அரசமைப்பின் 154ஆவது சரத்தின் கீழ் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளுக்கு அமைய 2020 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை இவ்வாறு கையளிக்கப்பட்டது.

இதற்கமைய அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், அதிகாரசபைகள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள், உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள், வெளிநாட்டு உதவித் திட்டங்கள் உள்ளிட்ட ஒன்பது பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்படும் கணக்காய்வுகள் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் என சபாநாயகர் அலுவலகம் அறிவித்துள்ளது.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவுசெய்தல் – 2022

கீழே குறிப்பிட்டுள்ள வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு யாழ் பல்கலைக்கழகத்துடன் தம்மை பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள்/உற்பத்தியாளர்கள்/ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 2021 டிசம்பர் 04ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**1. பாவனைபொருட்கள் காகிதாதிகள்**

1.1 எழுதுபொருட்கள், காகிதாதிகள். **(Toner, Cartridge ,Printer Ribbon,Printer paper,etc...)**
1.2 வெட்டும் கருவிகள், மட்பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்.
1.3 சுகாதாரசேவைவழங்கல்:- தும்புதடி, விளக்குமாறு, கால்துடைப்பங்கள், ஹார்ப்பிக், விம், சுத்திகரிப்பு மற்றும் மெதுகூட்டல் பொருட்கள் முதலியன.
1.4 மழைக்கோட்டுக்கள், சேற்றுசப்பாத்துக்கள், குடைகள், சப்பாத்துக்கள் முதலியன.

**2. புத்தகம், புத்தகம் கட்டுதல், அச்சிடுதல்.**

2.1 அச்சிடுதல், புளொக்செய்தல், ரப்பர் முத்திரைகள், திகதிமுத்திரைகள்.
2.2 புத்தகங்கள், பருவவெளியீடுகள் ஏனைய வெளியீடுகள்.
2.3 புத்தகங்களையும், பருவவெளியீடுகளையும் கோர்த்தல்.

**3. தளபாடங்கள் அலுவலக இயந்திரங்கள்**

3.1 அலுவலகதளபாடம் - மரம் உருக்கு - கணினிமேசை, கதிரைகள்.
3.2 அலுவலகஉபகரணங்கள் (இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதி பண்ணும் இயந்திரங்கள், நிழற்பிரதி இயந்திரங்கள், தொலைநகல் கருவிகள் முதலியன).
3.3 தீயணைப்புசாதனங்களும், பாதுகாப்பு சாதனங்களும்.

**4. கட்டிட பொருட்கள் / பராமரிப்பு பொருட்கள் மற்றும் கருவிகள்**

4.1 சகலவகையானகட்டடநிர்மாணபொருட்கள்.
a. பெயின்டுகள் வாணிஸ், தொடர்பானபொருட்கள்.
b. கட்டிட நிர்மாண தேவைகளுக்கான அனைத்துவிதமான பொருட்களும். (மணல், கிரவல், மற்றும் கல் தொடர்பானவை)
c. இயந்திரகருவிகளும் உதிரிப்பாகங்களும்.
d. பைப்புகள், பைப் இணைப்புகள்.
e. மரங்கள் - தீராந்தி,பனைமரம், சலாகைகள்.
f. பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ் உற்பத்திகள்.
g. அலுமினியம் பொருத்துகள், மட்பாண்டப் பொருள்கள் கண்ணாடிப் பொருட்கள், கண்ணாடிகள்.
h. குளியலறைபொருத்துகள், சுவர், தரைமாபிள்கள்.
i. ஈரத் தடைப்பொருட்கள்.
j. கழிவுநீர் சீராக்கி தொகுதி பராமரிப்புக்கான பொருட்கள்.
k. குடிநீர் சீராக்கி தொகுதி பராமரிப்புக்கான பொருட்கள்.

**5. மின்னியல் பொருட்கள்**

மின்சாரசாதன உபகரணங்களும் மற்றும் உதிரிப்பாகங்களும்.

**6. ஆய்வு கூட பொருட்கள் / சாதனங்கள்.**

6.1 ஆய்வு கூடச் சாதனங்கள்
6.2 ஆய்வு கூட இரசாயனபொருட்களும் கண்ணாடிச் சாதனங்களும்.

**7. வாகனபராமரிப்பு**

7.1 டயர் ரியுப்புகள், பற்றரிகள்.
7.2 மோட்டார் உதிரிப்பாகங்கள், துணைஉறுப்புகள்.
7.3 மோட்டார் வாகனம் திருத்துதல்
7.4 மோட்டார் வாகன உள்ளக வேலைகள்.

**8. பொதுசேவைகள் வழங்கல்கள்**

8.1 ஆயுர்வேதமருந்துகள் உட்பட மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
8.2 விளையாட்டு மற்றும் நலன்புரிபொருட்கள்.
8.3 புடவைகள், ஜவுளிகள், ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைத்துணிகள்.
8.4 தோட்டவேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள் கருவிகள், இயற்கைஉரம், பூங்கன்றுகள் மற்றும் செடிகள்.
8.5 அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் - தட்டச்சு இயந்திரங்கள், புகைப்படபிரதிபண்ணும் இயந்திரங்கள், தொலைநகல், கணனி, தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், மின் தட்டச்சு இயந்திரங்கள் போன்றவற்றின் திருத்தவேலைகள்.
8.6 உருக்கு, மரத் தளபாட திருத்த வேலைகளும் மெருகூட்டல் வேலைகளும்.
8.7 கதிரைகள் பின்னுதல்.
8.8 உடைகள் கதவு ஜன்னல் திரைச்சீலைகள் தைத்தல்.
8.9 உடைகளைச்சலவைசெய்தல்.
8.10 சுத்திகரிப்பு சேவை வழங்கல்.
8.11 பாதுகாப்பு சேவை வழங்கல்.
8.12 பொதிகள் பரிமாற்று / சுங்க தீர்வைகள் சேவை.
8.13 நிகழ்வுகள் நிர்வகிப்பு சேவை.
8.14 உணவு வழங்கல் சேவை.
8.15 வீடியோ மற்றும் புகைப்பட சேவை.
8.16 வாடகை அடிப்படையில் ஒலி மற்றும் ஒளி உபகரணங்கள் வழங்கல்.
8.17 பயண முகவர் சேவை.
8.18 மோட்டார் வாகனங்கள் வாடகைக்கு வழங்குதல் (Passenger van-with A/C & without A/C, passenger bus, lorry, tractors with trailer, etc.
8.19 இயந்திரங்கள் வாடகைக்கு வழங்குதல். (JCB, excavator, compressor, pay loader, etc.)
8.20 தற்காப்பு உபகரணங்கள்
8.21 தீயணைப்பு கருவிகள்

**9. எந்திரவியல் சேவைகள்.**

9.1 பெயர்ப் பலகைகள் வரைதலும் பிளாஸ்ரிக் பெயர்ப் பலகைகள் செய்தலும்.
9.2 மின்மோட்டார், நீரிறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், திருத்துதல் மற்றும் மீளமுறுக்குதல் (Rewind) உட்பட
9.3 ஜெனரேட்டர்கள் திருத்துதல்.
9.4 குளிரூட்டி, வாகன குளிரூட்டி திருத்துதல்.
9.5 குடிசார் எந்திரவியல் வேலைகள், கட்டிடங்கள், வீதிகள், ஏனையநிர்மாணங்கள் நிர்மாணித்தலும் திருத்தவேலைகளும்.
9.6 மின்சார இணைப்புவேலைகள்.
9.7 நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள் மற்றும் திருத்தவேலைகள்.
9.8 இரும்பு,அலுமினியம் எள்பவற்றிலான கட்டிடம் சார்ந்தபொருத்துக்கள் செய்தலும் பொருத்தலும்.
9.9 கட்டிடங்கள் / கட்டிடசேவைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய (இயந்திர சாதனங்களுக்கான) உசாத்துணைசேவைகள்.
9.10 மின்சார உசாத்துணை சேவைகள்.
9.11 நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்கல் /பொருத்துதல் / தச்சுவேலை.
9.12 எந்திரவியல்சார் வரைதலும் நீலப் பிரதிசெய்தலும்.
9.13 கறையான் / பீடைகள் ஒழிப்புவேலைகள்.
9.14 தொழிலாளர் வழங்கல் (திறன் சார், திறன் சாரா, மற்றும் காவலாளிகள்)
9.15 பராமரிப்பு வேலைக்கான கணியஅளவுச் சிட்டை (B.O.Q.) தயாரித்தல்

**10. மின்னணு பொருட்கள்.**

10.1 கணினி மற்றும் கணினி உபகரணங்கள் உட்பட மின்னியல் பொருட்கள்.
10.2 தகவல்தொழில்நுட்ப வன்பொருள் மென்பொருட்களிற்கான வழங்கலும், சேவைகளும் பராமரிப்புகளும்.
10.3 தொடர்பாடல் சாதனங்களுக்கான உபகரணங்கள் வழங்கலும், சேவைகளும் பராமரிப்புகளும்.
10.4 தொலைபேசி உபகரணங்களும் கையடக்கதொலைபேசிகளும் வழங்கல்.
10.5 கணனிவலைப்பின்னல் ஸ்தாபித்தலும் அதற்கானஉபகரணங்களும்.

**பதிவு தொடர்பான நிபந்தனைகள்.**

1. வழங்குநர்களாக பதிவு செய்பவர்கள் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்தல் வேண்டும். ஒவ்வொரு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **'வழங்கல்கள் சேவைகளுக்கான பதிவுசெய்தல் 2022'** எனக் குறிப்பிட்டுபதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

* பதிவுகளுக்கான விண்ணப்பங்கள் மற்றும் வைப்பு சிட்டை பிரதி என்பவற்றினை **நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்** என முகவரியிடல் வேண்டும்.

2. ஒவ்வொருவழங்கல் / சேவைகளிற்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும். ஒவ்வொருவிண்ணப்பப் படிவத்துடனும் பதிவுக்கட்டணமாக ரூபா 2,000/ = இனை **கணக்கு இல. 162 - 1 - 001 - 6 - 0000880 மக்கள் வங்கி** யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், எனும் பெயரில் வைப்பிலிட்டு வைப்பு சீட் டின் பிரதியை இணைக்கவும்.

3. கம்பனி தவிர்ந்த ஏனைய நிறுவனங்கள் தங்கள் வியாபார பதிவுபத்திரத்தில் குறிப்பிட்ட வியாபாரத்தின் பொது தன்மைக்கு ஏற்ற வழங்கல் /சேவைக்கு மட்டுமே பதிவினை மேற்கொள்ள முடியும். வியாபாரத்தின் பொது தன்மையுடன் தொடர்பற்ற வழங்கல்/சேவைக்கு பதிவினை மேற்கொள்ளும் விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் இன்றி நிராகரிக்கப் படும்.

4. விலைமனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்து விலைமனுக்கள் கோர பல்கலைக்கழகத்திற்கு உரிமை உண்டு.

5. கோரப்படும்போது விலைமனுக்களை சமர்ப்பிக்கதவறும் அல்லது உரியநேரத்திற்கு பொருட்கள் / சேவைகளைவழங்க தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராதபொருட்கள் / சேவைகளை வழங்கும் எந்தவொருவழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

6. விண்ணப்பதாரரின் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர், கட்டிடக்கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களையும் CIDA பதிவு இலக்கம் மற்றும் தரம் ஆகியவற்றையும் குறிப்பிடுக. (எந்திரவியல் சேவைகள் இலக்கம் 9.5, 9.6, 9.7, 9.8, 9.9, 9.10 மற்றும் 9.16 இற்குமட்டும்)

7. சேவைகளை / வழங்கல்களுக்கான கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவுசெய்யும் பெயரிலேயே வழங்கப்படும். அத்துடன் வழங்குநர்கள் தங்கள் வியாபார பெயரிலேயே வங்கி கணக்கினை வைத்திருக்க வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு உதவி நிதியாளர் (வழங்கல்) உடன் தொடர்புகொள்ளவும். தொ.பே.இல. 0212226519.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

## வழங்குனர்கள் மற்றும் சேவையாளர்களை பதிவுசெய்தல் - 2022

01. தனிப்பட்டதகவல்கள்
   1.1 முழுப்பெயர் :..................................................................................
   1.2 தே.அ.அ. இல :..................................................................................
   (தேசியஅடையாளஅட்டையில் உள்ளபடி)
   1.3 விலாசம்:..................................................................................
   ..................................................................................
   1.4 நிரந்தரதொலைபேசி இல:........................கைத் தொலைபேசி இல:........................
   தொலைநகல்:.........................................

02. வியாபாரதகவல்கள்
   2.1 முயற்சியாண்மை நிறுவனத்தின் பெயர்:................................................
   2.2 வியாபார பதிவு இல:..................................................................
   (வியாபார பதிவு சான்றிதழ் பிரதியை இணைக்கவும்)
   2.3 பெறுமதிசேர் வரி (VAT) இல:...........................................................
   (VAT இல காணப்படின், பெறுமதிசேர் வரி (VAT) பதிவு சான்றிதழ் பிரதியை இணைக்கவும்',
   CIDA பதிவு இலக்கம்............ தரம்................. காலாவதி திகதி...............
   2.4 விலாசம்:..................................................................................
   ..................................................................................
   2.5 நிரந்தர தொலைபேசி இல:......................கைத்தொலைபேசி இல:..............................
   தொலைநகல் :.............................................
   (குறைந்த பட்சம் இரண்டு தொலைபேசி இலக்கங்களை குறிப்பிடவும்)
   2.6 மின்னஞ்சல் முகவரி:..................................................................
   2.7 மாவட்டம்:..................................................................................
   2.8 பிரதேசசெயலர் பிரிவு:..................................................................

03. மேலதிகவிபரங்கள்
   3.1 வங்கியாளரின் பெயர் :..................................................................
   3.2 கிடைக்கக்கூடிய கடன் வசதிகள் :.......................................................
   3.3 ICTADபதிவு இல :..................................................................
   (எந்திரவியல் சேவை 9.5 9.9 இற்குமட்டும்.) ICTADபதிவு இல்லாதுவிடின் ரூபா 200,000.00 (இருநாறுஆயிரம் மட்டும்) க்குஉட்பட்ட வேலைகளுக்கு கூறுவிலை சமர்ப்பிக்கமட்டுமே தகுதியுடையவராவார்.

04. வழங்கல் சேவைகளுக்கானவிபரங்கள்.

| தொடர் இல | சேவைகள் /வழங்கல்கள் |
|---|---|
| | |
| | |
| | |

05. வழங்கப்படும் பொருட்கள் பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கவேண்டும்

நான்/நாங்கள் மேற்படி பதிவு நிபந்தனைகளுக்கு இணங்குகின்றேன்/ இணங்குகின்றோம்.

கையொப்பம் :................................

பெயர் :................................ திகதி :....................................

# விவசாய நடவடிக்கைகளுக்கு 600 ஏக்கர் காணிகள் விடுவிப்பு

திருகோணமலை - மூதூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இறால்குழி கிராமத்தில் ஏனைய காடுகள் விடுவிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 600 ஏக்கர் அளவிலான விவசாயம் செய்வதற்கான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன எனத் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள தெரிவித்துள்ளார்.

இறால்குழி பிரதேசத்தில் பயிர் செய்கைக்கு அனுமதி வழங்கப்பட்ட காணிகளில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஒருங்கிணைப்புக்குழு தலைவருமாகிய கபில அத்துகோரல தலைமையில் நடைபெற்றது.

பல வருட காலமாக விவசாயம் செய்யப்படாமல் இப்பிரதேசம் கைவிடப்பட்டதாக காணப்பட்டது. முன்னர் இந்தப் பிரதேசங்களில் பயிர்ச்செய்கை மேற்கொண்டோம் எனவும், அதன் பின்னர் வனஜீவராசிகள் திணைக்களம் உட்பட ஏனைய திணைக்களங்கள் பிரதேசத்துக்குள் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கவில்லை என்று பிரதேச விவசாயிகள் முன்னர் தெரிவித்தனர்.

எனவே இந்தப் பிரதேசத்தில் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கான அனுமதியை தந்து உதவுமாறு இப்பிரதேச விவசாயிகள் தமது கவனத்துக்குக் கொண்டுவந்தமையை அடுத்து இந்தப் பிரதேசத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டதாக இதன்போது அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பயிர் செய்ய முடியுமான ஒவ்வொரு பிரதேசத்திலும் உற்பத்தியை மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கியுள்ளார். அதற்கிணங்க திருகோணமலை மாவட்டத்தில் பயிர் செய்ய முடியுமான பிரதேசங்கள் இனங்காணப்பட்டு, விடுவிக்கப்பட்டு அப்பிரதேசங்களில் உற்பத்தி முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் இதன்போது அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினுடைய வேலைத் திட்டத்துக்கு அமைய பயிர் செய்ய முடியுமான பிரதேசங்களை இனங்கண்டு அவற்றின் பயிர் செய்யவுள்ள தடையை நிவர்த்தி செய்து மக்களுக்கு பயிர் செய்வதற்கான அனுமதி வழங்குவதற்கான பொறிமுறை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் கபில அத்துகோரல தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் மாவட்டத்தினுடைய உற்பத்தி அதிகரித்து மேலதிகமாக உற்பத்திகளை வெளிமாவட்டங்களுக்கு விற்பனைக்கு விடக்கூடியதாக அமையும். இதன் காரணமாக மக்களின் வாழ்வாதாரம் சிறப்பாக அமைந்து வருமான மட்டம் உயர்வடையக் காரணமாக அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில், மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம். முபாரக், பிரதேச அரசியல்வாதிகள் கிராம அபிவிருத்திச் சங்கம், விவசாய சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# மாத்தறை புதிய நீதிமன்ற வளாகம் பிரதமரால் திறந்து வைக்கப்பட்டது

மாத்தறை புதிய நீதிமன்ற வளாகம் மற்றும் வலஸ்முல்ல மாவட்ட நீதிமன்ற கட்டட திறப்பு விழாவில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை அலரி மாளிகையிலிருந்து சூம் தொழில்நுட்பம் ஊடாக இணைந்து கொண்டார்.

மாத்தறை கொடவில பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட நீதிமன்ற வளாகத்தை திறந்துவைத்து அலரி மாளிகையிலிருந்து இணைய தொழில்நுட்பம் ஊடாக பிரதமர் அதன் நினைவு பலகையை திறந்துவைத்தார்.

1,286.5 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மாத்தறை புதிய நீதிமன்ற வளாகம், சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம், ஓர் உயர் நீதிமன்றம், நான்கு மாவட்ட நீதிமன்றங்கள், இரண்டு நீதிவான் நீதிமன்றங்கள் மற்றும் ஒரு தொழிலாளர் தீர்ப்பாயம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

நீதிமன்ற வளாக திறப்பு விழாவுடன், சட்டத்தரணிகள் சங்க கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டு விழாவும் இடம்பெற்றது. வெள்ளிக்கிழமை திறந்துவைக்கப்பட்ட வலஸ்முல்ல மாவட்ட நீதிவான் நீதிமன்ற கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக அரசாங்கம் செலவிட்ட தொகை 66.7 மில்லியன் ரூபாவாகும்.

மாத்தறை நீதிமன்ற திறப்பு விழாவில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, நீதி அமைச்சர் அலி சப்றி, வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும, இராஜாங்க அமைச்சர் காஞ்சன வீரசேகர, நாடாளுமன்ற உறுப்பினர்களான நிபுன ரணவக்க, வீரசுமன வீரசிங்க, கருணாதாச கொடிதுவக்கு மற்றும் நீதி அமைச்சின் செயலாளர் மாயாதுன்ன மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மாத்தறை சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# இரத்தினபுரியில் கண்டுபிடிக்கப்பட்ட உலகின் பெரிய நட்சத்திர நீலக்கல் டுபாய்க்கு அனுப்பப்பட்டுள்ளது



இரத்தினபுரி மாவட்டத்தில் கடந்த ஜூலை மாதம் 28 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்ட உலகின் மிகப் பெரிய நட்சத்திர நீலக்கல் டுபாய் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் - டுபாயில் நடைபெறும் சர்வதேச இரத்தினம் மற்றும் நகை கண்காட்சியில் இந்த நட்சத்திர நீலக்கல் காட்சிப்படுத்தப்படவுள்ளமைக்காகவே அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் கஹவத்தை பிரதேசத்தில் கடந்த 28 ஆம் திகதி, கிணறு தோண்டிக் கொண்டிருந்த போது இந்த நட்சத்திர நீலக்கல் கண்டுபிடிக்கப்பட்டது. 510 கிலோ கிராம் எடையுடைய இக்கல் 10 கோடி டொலர் பெறுமதியுடையது என்று கணிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
தீபாவளி SALE
திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்
இந்தியன் செலக்ஷனின்
தீபாவளி விசேட தள்ளுபடி
இம்முறை தீபாவளியை இந்தியன் செலன்ஷனுடன்
கொண்டாட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
இடம் :- யாழ் வீரசிங்கம் மண்டபம்
காலம் :- 22.10.2021 - 07.11.2021 வரை
ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்
பட்டுச்சாறிகள் கொட்டன் சாறிகள், சல்வார்கள்
சல்வார் துணிகள், டொப் வகைகள் சிறுவர்,
சிறுமியருக்கான ஆடைத் தெரிவுகள்
மற்றும்ஆண்,பெண் இருபாலருக்குமான
ஆடைத் தெரிவுகள்



அரச சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும் சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாகவும்
இந்தியன் செலக்ஷனின் தீபாவளி மலிவு விற்பனை நடைபெறும் என்பதனை
மகிழ்ச்சியோடு வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்

வீட்டுடன் காணி தேவை
கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி ஆகிய இடங்களில் நல்ல சுற்றாடலில் வீட்டுடன் 2 பரப்புக் காணி அல்லது 2 பரப்புக்காணி தேவை. காணி உரிமையாளர் மட்டும் தொடர்பு கொள்ளவும். தரகர் தேவையில்லை.
077 1971667

*Jaffna College Institute of Technology*
*Calls for the following courses*

Computer Certificate Courses *( 3 – 4 months Part time)*

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.

# மன்னார் ஈச்சளவக்கைக் குளத்தில் 2 லட்சம் இறால் குஞ்சுகள் விடப்பட்டன



மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் (மெசிடோ) மற்றும் மீன்பிடி அமைச்சும் இணைந்து மன்னார் ஈச்சளவக்கை குளத்தில் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக என 2 லட்சம் இறால் குஞ்சுகள் விடும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கொரோனாத் தொற்று காலத்தில் கிராம மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் அதேவேளை நன்னீர் மீன்பிடித் தொழிலை ஊக்குவிப்பதற்காகவும் மேற்படி செயற்திட்டம் மெசிடோ நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றுக்கான இறால் குஞ்சுகளை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிறாடொ, மீன்பிடி அமைச்சின் மன்னார் மாவட்ட இணைப்பாளர், தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள், மன்னார் மெசிடோ நிறுவன ஊழியர்கள் மற்றும் ஈச்சளவக்கை நன்னீர் மீன்பிடி சங்கத்தின் அங்கத்தினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதேநேரம் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்ட குளங்களில் இறால் குஞ்சுகளை விடுவதற்கான ஏற்பாடுகள் மெசிடோ நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பொது அறிவு வாராந்தம் ஒரு பரீட்சை

இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம்.
பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் இப்பகுதியில் பத்து பொதுஅறிவு வினாக்கள் இடம்பெறும். கேள்விக்குரிய உங்கள் பதில்கள் அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை பிரசுமாகும்.
சனிக்கிழமை காலை 8 மணிக்கு முதல் **Kalaikkathiredu@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு உங்கள் விடைகளை அனுப்பி வையுங்கள்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகிய வற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

1. பாடசாலை ஒன்றில் மாணவர்கள் வட்டமாக சம தூர இடைவெளியில் நிற்கின்றனர் அவர்களில் 6 ஆம், 18 ஆம் மாணவர்கள் நேர் எதிரே காணப்படுகின்றனர் எனின் வட்டமாக நிற்கின்ற மொத்த மாணவர்கள் எத்தனை பேர்?
2. கடிகாரம் ஒன்று பிற்பகல் 12.25 நேரத்தை வெளிப்படுத்தும் போது இரு கடிகார முற்களுக்கும் இடையிலான கோணம் யாது?
3. முதன்முதலில் பத்மஸ்ரீ விருதைப் பெற்றவர் யார்?
4. சூரிய உதயத்தை முதலில் எந்த நாட்டவர்கள் பார்ப்பார்கள்?
5. புவியலின் தந்தை எனப்படுபவர் யார்?
6. பண்டிகைக் காலத்தை முன்னிட்டு குறித்த பொருளின் விலையை 25 சதவீதத்தால் குறைத்ததன் காரணமாக 3, 600 ரூபாவுக்கு மேலதிகமாகப் பத்து கிலோவாக குறித்த பொருளை வாங்க முடிந்தது எனின் விலைக் குறைப்புக்கு முன்னர் ஒரு கிலோ பொருளின் விலை யாது?
7. 30 மாணவர்கள் தோற்றி கணித வினாப் பத்திரத்தில் மாணவர் ஒருவர் பெறக் கூடிய உயர்புள்ளி 50 ஆகும் இவற்றின் இடை 49 எனின் இம் முப்பது மாணவர்களில் ஒருவர் பெறக் கூடிய குறைந்தபட்சப் புள்ளி யாது?
8. மாணவர்களுக்கு இரண்டு கைகளாலும் எழுத பயிற்சி அளிக்கும் நாடு யாது?
9. உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றில் பி பிரிவில் முதலிடம் பெற்ற அணி எது?
10. அமும் அதிசயச் சுவர் எந்த நாட்டில் உள்ளது?

பெயர் :- ..............................................
முகவரி :- ..........................................
தொலைபேசி இலக்கம்:- ....................
அடையாள அட்டை:- ..........................
மின்னஞ்சல் முகவரி:- ........................

## 24.10.2021ஆம் திகதி பிரசுரமான பொது அறிவு வினாக்களுக்கான விடைகள்

1. இலங்கை
2. ஷகிப் அல் ஹசன்
3. 170, 161
4. அழ. வள்ளியப்பா
5. தீபவம்சம்
6. பரராஜ சேகரம்
7. 4
8. பல
9. ஆபிரிக்கா கண்டம்
10. பெங்களூர்




**மணமகள் விபரம்**

பிறந்த திகதி :- 1984.09.04
மதம்:- இந்து
ஜாதி :-வேளாள்
நட்சத்திரம்: - மூலம்
தகைமை:- MSc in Chemistry UK Permanent Residence
எதிர்பார்ப்பு: - உள்ளூர் படித்த மணமகள்

பிறந்த திகதி :-1983.12.31
மதம்:-இந்து
ஜாதி :-வேளாளர்
நட்சத்திரம்: -அனுசம்
தகைமை:- B.Com QA Technician Canada Divorce
எதிர்பார்ப்பு: -இலங்கை விவாகரத்தான மணமகள்

பிறந்த திகதி :-1986.10.29
மதம்:-இந்து
ஜாதி :-வேளாளர்
நட்சத்திரம்: -கேட்டை
தகைமை:- B.Com Banker
எதிர்பார்ப்பு: -படித்த அரச தொழில் நுஷ வெளிநாடு

பிறந்த திகதி :-1994.03.05
மதம்:-இந்து
ஜாதி :-வேளாளர்
நட்சத்திரம்: -கேட்டை
செவ்:- 2ல் சூரி/ செவ்
தகைமை:-Diploma in Medical administration
எதிர்பார்ப்பு: கனடா யாழ்ப்பாணத்து படித்த மணமகள்

**மணமகன் விபரம்**

பிறந்த திகதி :- 1990.11.07
மதம்:- இந்து
ஜாதி :-வேளாளர்
நட்சத்திரம்: - திருவாதிரை
தகைமை:- Haves Techician Machine Operator
எதிர்பார்ப்பு:- கனடா அழகிய உள்ளூர் பெண்

பிறந்த திகதி :-1990.01.01
மதம்:- இந்து
ஜாதி :-வேளாளர்
நட்சத்திரம்: - சதயம்
தகைமை:- A/Level UK Courier Service
எதிர்பார்ப்பு:- யாழ்ப்பாணத்து அழகிய பெண்

பிறந்த திகதி :-1982.11.08
மதம்:-இந்து
ஜாதி :-வேளாளர்
நட்சத்திரம்:-ஆயிலியம்
தகைமை:- BA, Masters 1st Semester UK Software Engineering
எதிர்பார்ப்பு:- கனடா படித்த யாழ்ப்பாண பெண்

பிறந்த திகதி :-1981.11.10
மதம்:-இந்து
ஜாதி :-வேளாளர்
நட்சத்திரம்:-அச்சுவினி
தகைமை:-B.Eng Electrical and Electronic Engineer
எதிர்பார்ப்பு:-உள்ளூர் அரச தொழில் பெண்

0776505097
0778876969

தலைமை அலுவலகம் ;
கனடா
001416661855

# RADIANT DAWN

**A Sunday Supplement in English to Kalaikkathir**

**Page I** **Sunday the 31st of October 2021**




**We welcome students' articles in word for publication**

**-Editor-**

**kalaikkathiredu@gmail.com**


## ANNIE Grade - 3



Hello, my name is Annie . I'm nineyears old . I've got a dog.I can ski and sing. I can't swim . Every Monday I play football with my brother at home. Every Tuesday I sing songs with my friends at school. On Wednesday I read a book . On Thursday I can ride a bike . Every Friday I do my homework.

**Say TRUE or FALSE. Ring T or F.**

| | | |
|---|---|---|
| 1. Annie can swim. | T | F |
| 2. Annie sings songs. | T | F |
| 3. She reads a book on Wednesday. | T | F |
| 4. Annie can't ski. | T | F |
| 5. She has got a cat. | T | F |
| 6. She is 9 years old. | T | F |
| 7. She rides a bike on Monday. | T | F |
| 8. Annie plays football with her sister. | T | F |
| 9. Annie has got a dog. | T | F |
| 10 She has a brother. | T | F |

Answers :- 1 - F / 2 - T / 3 - T / 4 - F / 5 - F / 6 - T / 7 - F / 8 - F / 9 - T / 10 - T

**Write the day of the week**

1. Reading a book. -----------------------------
2. Does homework. -----------------------------
3. She plays football. -----------------------------
4. She rides a bike. -----------------------------
5. She sings songs. -----------------------------

**Grade 4 and 5 Reading Comprehension.**

## STEAM ENGINES



The steam engine to pull the passenger train was built nearly 200 years ago. It took two hours to,travel 40 kilometres. The early steam trains burned coal to boil water and make steam .Trains have changed a lot over time. They use different sorts of power to help them travel faster and use less fuel.

Some trains use diesel and some use electricity. Trains that use diesel fuel have large heavy engines than that use less fuel than other powers. In many cities , passenger trains run on electricity. Some electric trains run underground through tunnels. One of the fastest trains in the world is called the bullet train. It is a Japanese electric train . It can run at 300 kilometres per hour.

**Answer these questions.**

1. When was the first steam engine built?

---------------------------------------------------------------------

2. Some trains use diesel fuel and some use electricity.
   (a). True. (b) False

3. What type of trains use diesel oil?

---------------------------------------------------------------------

4. Electric trains run underground through............
   (a) mines ( b)tunnels ( c) caves.

5. Which is the fastest train in the world?

---------------------------------------------------------------------

## WHAT DOES ANA DO EVERY MORNING



It was a Thursday morning in April. Ana got up early . She was going to wear her lucky blue skirt to school. She really liked that skirt. She had a new shirt to match it, and new shoes ,too. After Ana got dressed , she went into the kitchen , where she could smell bacon. Anna's father was making bacon and toast. Ana loved bacon in the morning.

Ana's mother was getting ready for work. Ana's mother was a teacher at Ana's school. Ana is in Grade 2 there and her mother teaches in Grade 4. Ana was excited about going to school. Her class was going to take a test to see how much they had learned so far that year.Ana couldn't wait to go to school. Ana sharpened her new pencil for the test . She was going to do her best on that test. Ana loved school and liked to make good grades.

Ana's classmates arrived.Ms. Brown called roll and then she started the test. Ana tried to remember all the things her teacher had taught her that year, and tried very hard to do everything right on the test. The test took over an hour. After the test was over, the class played outside for a long time. Then they ate lunch , they watched a funny movie, and then drew pictures until it was time to go back home. It was a great day.

Answer these questions.

1 What Grade was Ana in ?

2. What did Ana like to eat in the morning?

3. Why was Ana excited about going to school?

4.What did Ms. Brown do before the test?

5. What did the children do after taking the test?

**Say ' True ' or ' False' . Ring either ' T ' or ' F '**

| | | |
|---|---|---|
| 1. Ana's lucky colour is blue. | T | F |
| 2. Ana loved sandwich in the morning. | T | F |
| 3.Ana's mother teaches in Grade 2. | T | F |
| 4. Ana's mother made the becon for Ana. | T | F |
| 5.Ana sharpened her new pencil for the test. | T | F |
| 6. Ms. Brown is Ana's teacher. | T | F |
| 7. The test took over two hours. | T | F |
| 8. Ana's classmates watched a funny movie. | T | F |
| 9. They did not draw pictures after the test. | T | F |
| 10. The children didn't eat their lunch. | T | F |

Answers :- 1- Grade - 2 / 2 - bacon / 3 - She was gogjng to have a test / 4- she called roll / 5 - they played for a long time /
1 - T / 2 - F / 3 - F / 4 - F / 5 - T / 6 - T/ 7 - F / 8 - T / 9 - F / 10 - F

**Lack of money is the root of all the evils - Mark Twain**

# "No Chance" of stopping climate change at COP26



British Prime Minister Boris Johnson, visits the Colosseum during the G20 summit on October 30, in Rome. British Prime Minister Boris Johnson, visits the Colosseum during the G20 summit on October 30, in Rome. UK Prime Minister Boris Johnson believes "there is no chance of getting an agreement next week to limit climate change to 1.5 degrees," he said during an interview with British broadcaster ITV on Saturday.

Johnson spoke to media outlets in Rome ahead of the G20 summit and answered questions on his hopes for the COP26 UN Climate Summit in Glasgow due to begin on Sunday.

"Where we stand today, there is no chance of stopping climate change next week," Johnson said. "If everybody gets their act together, what we could do is get an agreement that means COP26 in Glasgow is a way station that allows us to end climate change and keep alive that dream of 1.5 degrees."

Six years have passed since the landmark climate agreement in Paris that saw world leaders pledge to limit global temperature rise to 1.5 degrees Celsius.

"We have a moment now when we can try to take some of the nebulous commitments in Paris, solidify them into hard fast commitments to cut emissions, to cut use of coal and so on," Johnson told ITV. "We want those leaders – more than a hundred of them – coming to our country really to focus on the commitments that they can make."

Speaking inside the ruins of Rome's ancient Coliseum, Johnson drew a comparison to the fall of the Roman Empire and the climate challenge facing the world today.

"You could not have a more vivid metaphor for the risks that humanity is running," Johnson said. "The Romans thought that they were going to on forever, they thought their empire was going to flourish forever, and then, Wham!"

"The lesson is: things can go backwards," he said. "Unless we halt that massive growth in temperatures, that's the risk we run."



# Sri Lanka PM has not sought audience with Pope

Sri Lanka Prime Minister Mahinda Rajapaksa never sought an audience with Pope Francis during his visit to the Vatican, the foreign ministry said after the head of the country's Catholic church Archbishop Malcolm Cardinal Ranjith claimed the visit was an attempt to mislead the Vatican about the 2019 Easter attack probe.

"At no stage has the Prime Minister requested nor received an invitation to visit the Vatican for an audience with His Holiness the Pope," the foreign ministry said in a statement on Wednesday (08).

The ministry said both the Prime Minister and the Foreign Minister will visit Bologna, Italy, to take part in an international event which was to be attended by the Prime Minister of Italy and other dignitaries from Italy and other European countries.

"The Prime Minister of Sri Lanka was scheduled to deliver the keynote address at the opening session of the international symposium which will be held in one of Europe's oldest seats of learning, the University of Bologna," the statement said.



# President Rajapaksa leaves for Scotland

Sri Lankan president Gotabaya Rajapaksa departed for Scotland on Saturday, heading a high level delegation to the UN Climate Change Conference of the Parties (COP26) in Glasgow.

Rajapaksa was accompanied by Sri Lanka's environment minister Mahinda Amaraweera and several other senior officials, including Foreign Secretary and fellow accused war criminal, Jayanath Colombage.

As Rajapaksa departed Scottish Tamils were in the midst of a widespread publicity campaign calling for the Sri Lankan president to face justice for crimes committed during his tenure as defence secretary.

Earlier this week, projections were seen across Scotland, including on the Scottish Parliament Building in Edinburgh, called for international accountability for the Tamil genocide in Sri Lanka.

# Protests expected as Sri Lankan president plans to attend COP26

US Tamils protesting in New York earlier this year, as Gotabaya Rajapaksa visited the United Nations.

Sri Lanka's president Gotabaya Rajapaksa will be travelling to the United Kingdom for the first time since taking office to attend the 2021 United Nations Climate Change Conference, also known as COP26 in Glasgow next month, with protests expected to greet his arrival.

Foreign affairs minister G L Peiris told the Daily Mirror that Rajapaksa would be attending COP26 "at the invitation of the British Prime Minister".

This would be Rajapaksa's first high profile public visit to the United Kingdom, with British Tamils across the country already planning demonstrations and protests.

Rajapaksa previously served as Sri Lanka's defence secretary and oversaw a military campaign that saw hospitals shelled and tens of thousands of Tamils killed. He has repeatedly vowed not to prosecute those accused of war crimes, which includes senior military generals and his elder brother Mahinda Rajapaksa, who is currently Sri Lanka's prime minister.

"All Sri Lankan war criminals, including the Rajapaksa siblings, must know that they cannot escape justice for the genocide they committed," said Siva, a British Tamil activist, who is part of a group working on demonstrations for when Rajapaksa arrives.

During his previous tenure as Sri Lanka's president, Mahinda Rajapaksa visits to the United Kingdom were met with widespread protests.



# Some Characteristics of The English Language

Why would you want to know and understand some characteristics of the English language? Well, it's quite helpful and useful to know, This type of question may come up in an advanced class.

Structures in the native/first language of the learners you will be teaching, compared to your native-English language. Here are some specific characteristics of the English Language:

**1. Fairly easy to learn**

English is one of the easiest and simplest natural languages in the world. Of course, it's all relative. It depends on the learner's ability and previous language learning experiences Nevertheless, it's fair to say that English is a relatively easy language to learn, understand and speak when compared to very complex languages such as Arabic, Cantonese, Mandarin, Korean and Japanese.

**2. Latin alphabet**

The English language uses the Latin alphabet. It is the most universal, short and straightforward alphabet (only the Greek alphabet is shorter and simpler). Also, in English, the Latin alphabet presents its cleanest form as a true alphabet with only 26 basic letters.

**3. Its simple inflection**

Inflection is the name for the extra letters added to nouns, verbs and adjectives in their different grammatical forms, e.g., cat, cats; eat, eats; big, bigger. English is considered to be a weakly inflected language when compared to, say, French or Russian. Its nouns have only traces of inflection (plurals, the pronouns), and its regular verbs have only four forms, e.g., look, looks, looked, looking.

Even for irregular verbs, there is almost no variation in person (except the 3rd person singular in the present tense, e.g., I eat, you eat, she eats). The English language can indicate the relationship of words in a sentence with only the minimum of change in their structure. There are other languages that do this, but this is a strong characteristic of English.

**4. Receptiveness**

A significant feature of the English language is its receptiveness to accepting and adopting words from other languages. Here are a few examples:

From Spanish:

Alligator: from el lagarto meaning the lizard

Cargo: from the verb cargar, meaning to load

From Hindi: Bungalow: from the Hindi word bangla, a type of cottage built for early European settlers in Bengal.

Ketchup: from the Hokkien Chinese term kê-tsiap, a sauce made from fermented fish. Europeans later added tomato as an ingredient.

**5. Its (generally) fixed word order**

Another strong characteristic of the English language is its (typically) fixed word order. Most English sentences (clauses) conform to the SVO word order. This means that the Subject comes before the Verb, which comes before the Object. Examples:

**I (S) bought (V) a new top (O).**

**She (S) doesn't like (V) spiders (O).**

**Why did you (S) do (V) that (O)?**

There are other word orders in English, but the SVO order is by far the most used, making it easy for learners to grasp.

**6. Pronunciation**

The pronunciation of English words such as this, thin, clothes, thirteenth, months inevitably causes problems for learners who do not need to use the tip of the tongue to produce words in their language.

**7. Continuous tense**

Many languages do not have a continuous tense form, so English learners may make mistakes such as: I had a bath when the phone rang; instead of I was having a bath when the phone rang.

**8. Articles (a, an, the)**

The article system is another feature of English grammar that causes some students enormous difficulties; mainly, of course, those whose native language does not use articles.

**9. Phrasal verbs**

A phrasal verb is an idiomatic phrase consisting of a verb and another item, typically either an adverb, as in break down, or a preposition, for example, see to, or a combination of both, such as look down on. These phrasal verbs are a VERY significant feature of the English language and can cause severe difficulties for learners. Sentences such as I put it down to the weather, or I made it up with my sister, are usually nonsense to beginner non-native-English speakers. Unfortunately for the English language learner, phrasal verbs are extremely common in colloquial (informal, everyday, conversational) English language.

**10. Non-tonal**

English is a non-tonal language.

In tone languages, e.g., Chinese and Vietnamese, pitch (the degree of highness or lowness of a tone) is used to distinguish word meaning. So, a word said with high pitch may have a different meaning from the same word said with a low pitch. In English, changes in pitch are used to emphasize or express emotion, not to give a different word meaning to the sound. It is not surprising that native speakers of tone languages often have strong accents when speaking English.

**11. Sound and spelling**

A final feature of English that causes problems for non-native learners (and some native-English speakers) is the lack of a connection between word sound and word spelling. It is difficult for non-native learners of English to predict the pronunciation of English words they first come across in writing or the spelling of many English words they first hear. The critical point is that this happens with some of the most common words in the language: Words containing ough: thought, although, rough,

Words which have different spellings but they sound the same: ate, eight; hear, here; their, there. Words with silent letters, not pronounced: know, could, hour Words that look the same but must be pronounced differently: read (present tense), read (past tense); present (a gift), present (to give to); close (near); close (to shut)

# People's Bank Responds to Blacklisting by China

People's Bank responds to Blacklisting by China, says bound to follow court orderShare: Sri Lanka's People's Bank on Friday (29) responded to being blacklisted by the Chinese Embassy. The People's Bank of Sri Lanka was blacklisted by the Economic and Commercial Office of the Chinese Embassy in Sri Lanka for failing to make the payment according to the Letter of Credit and the contracts between two parties.

This transaction is regarding the fertilizer shipment from Qingdao Seawin Biotech Group Co., Ltd However, People's Bank said that is it bound by an enjoining order issued by the Commercial High Courts of Sri Lanka with regard to the trade transaction in question, which precludes the bank from processing the payment.

People's Bank also said that the temporary delay in processing the said payment pertaining to the LC is solely due to the bank's obligation to be bound by the legal directions of the country, as a responsible corporate citizen. It added that once the legal barriers in effect are removed, the LC payment will be effected promptly as per the usual trade practices.



Recently, the Chinese fertilizer enterprise Qingdao Seawin Biotech Group Co., Ltd requested to get the payment of L/C by People's Bank of Sri Lanka according to the contracts. Disregarding the contract obligation, the business rules, and international trade customs, the People's Bank of Sri Lanka defaulted the payment of L/C and caused huge losses to the Chinese enterprise, said the Chinese Embassy.



# Princess Mako and Kei Komuro

The couple met at university in 2012

When Mako, then a Japanese princess, announced her engagement to former classmate Kei Komuro in 2017, she said he had won over her heart with "his bright smiles like the sun". The two had met five years earlier when they were both university students, and shared their plans to wed the following year. It meant the princess would become an ordinary citizen, as female imperial family members forfeit their royal status upon marriage to a commoner.

Then-Princess Mako speaking with her father, mother and sister before leaving for her wedding The former princess, who is now known as Mako Komuro, is the first child of the current emperor's younger brother, Prince Akishino, and his wife, Princess Kiko. Born on 23 October 1991, she initially followed royal tradition and attended the elite Gakushuin school, where members of the imperial family usually study.

But she broke with custom by leaving the institution for her university studies. Ms Mako attended Tokyo's International Christian University, where she studied art and cultural heritage, and spent a year at the University of Edinburgh. Later, she earned a master's degree at the University of Leicester, an experience she said was "wonderful".

People close to Ms Mako described her as an independent and friendly woman who had pursued a career while performing imperial duties, Amid the scandal in 2018, he moved to New York to study law at Fordham University, and the couple reportedly kept in touch through the internet. He only came back to Japan last September, a return that was not without controversy. Mr Komuro was dressed casually and sporting a ponytail, which for many was another proof that he was not fit to marry the then-princess.

Finally, in October, the couple got married. Ms Mako skipped the usual rites associated with a royal wedding, and turned down a traditional payment of about $1.3m given to a female member of the imperial family upon their departure from the household. It was another break from tradition, as Ms Mako became the first woman to do so. At least one protest was held at their wedding day, which included placards saying "Protect our household" and "The imperial family is the soul of Japan".

At a news conference alongside her new husband after their low-key wedding, Ms Mako said the "incorrect" reports about Mr Komuro had caused her "great fear, stress and sadness". "Kei is irreplaceable for me," she said. "For us, marriage is a necessary choice to live while cherishing our hearts."



# General Abdel Fattah al-Burhan has endangered Sudan's democracy



Sudan's coup leader General Abdel Fattah al-Burhan has taken a leap into the dark. He has endangered Sudan's international standing as a nascent democracy, imperilled essential debt relief and international aid, and jeopardised peace with rebels in Darfur and the Nuba Mountains. He was head of Sudan's Sovereign Council and the face of the army in the country's civilian-military cohabitation - until Monday, when he seized complete power. He dissolved the country's civilian cabinet, arresting Prime Minister Abdalla Hamdok and other prominent civilians with whom the military had agreed to share power until elections were held next year.

**The general's autocratic ambitions were no secret.**

Over the last months, he showed impatience with Mr Hamdok's leadership, signalling that a strong ruler was needed to save the nation. At a recent military-backed demonstration in the capital, Khartoum, protesters blamed Mr Hamdok for deteriorating living conditions - not helped by a blockade at the main port in the east which has led to shortages.



Sudanese democrats were alert to the army's stratagems, The Sudan Professionals Association and the multitude of neighbourhood committees that had orchestrated the non-violent protests which brought down the 30-year rule of President Omar al-Bashir in 2019 prepared for a new round of street demonstrations.

Sudanese protesters chant near by burning tires during a demonstration in the capital Khartoum, Sudan - Tuesday 26 October 2021 Protesters are determined not to allow the army to steal the revolution that saw Omar al-Bashir ousted in 2019 Foreign diplomats were also worried. US Special Envoy Jeffrey Feldman visited Khartoum at the weekend to press for agreement between the generals and the civilians. He left the city on Sunday with - he thought - a pact agreed.

The coup was staged hours later, leaving the Americans not only dismayed but outraged. Making it clear that they had been deceived, the US administration has "paused" a $700m (£508m) financial assistance package. An even bigger issue is the status of Sudan's debt relief package, recently negotiated by Mr Hamdok.

After two years of painful delays, international aid to salvage Sudan's economy was finally in prospect - and is now in jeopardy. The African Union (AU), the United Nations, the East African regional body Igad and all of Sudan's Western donors have condemned the coup and called for a return to civilian rule. The Arab League has also called for the constitutional formula to be respected. The grouping is usually in step with the Egyptian government, raising the question of how much Gen Burhan can count on the backing of Cairo.

Saudi Arabia and the United Arab Emirates (UAE), which provided crucial financial aid to Gen Burhan in 2019, have stayed silent so far. Their sympathies probably lie with the army strongman, but they will also know they cannot cover the costs of bailing out Sudan. Gen Burhan was already the most powerful man in the country, his role legitimised by the August 2019 power-sharing deal between the military and the Forces for Freedom and Change (FFC), a loose coalition of civilian groups.

So why would he risk it all on a blatant power grab?

# எழில் கதிர்



## தக்காளியில் இருக்கும் அழகு தரும் சக்தி

தக்காளியை பார்க்க எப்படி அழகாக இருக்கிறதோ அதேபோல நம்மை ஆரோக்கியமாக்குவதற்கும், அழகுகாக்குவதற்குமான தன்மைகளை தன்னுள் ஒளித்து வைத்துள்ளது. தக்காளியில் இருக்கும் லைகோபீன் உடல் நலத்திற்கு மிகவும் நன்மையளிக்கக் கூடியது. அதே லைகோபின் உங்கள் சருமம் முதிர்ச்சியடையாமல் காக்கிறது. தக்காளியில் உள்ள புரதம், மினரல் மற்றும் நார்ச்சத்துக்கள் சரும மற்றும் கூந்தல் அழகிற்கு அவசியமானதாகிறது. தக்காளியை நீங்கள் பயன்படுத்துவதன் மூலம் என்னென்ன அழகு நன்மைகளை பெறலாம் தெரியுமா?

**முகப்பரு நீங்குவதற்கு:-**

பருக்களால் அதிகம் கஷ்டப்படுபவர்கள் தக்காளி சாற்றை முகத்தில் தடவி வந்தால், முகப்பரு பிரச்சினைகளில் இருந்து விடுபடலாம். இதற்கு தக்காளியில் உள்ள விற்றமின் ஏ மற்றும் சி தான் காரணம். தினமும் தக்காளியை துண்டாக்கி முகத்



தில் தேய்த்து 10 நிமிடம் ஊற வைத்து, பின் கழுவ வேண்டும். இதனால் விரிவடைந்த சருமத் துளைகள் சுருங்கும். சருமமும் அழகாகும். தக்காளியை மைய அரைத்து மசித்து அதனுடன் மூன்று கரண்டி கெட்டித்தயிர் சேர்த்து நன்றாக கலக்க வேண்டும். இதை பருக்களால் குழிகளாக இருக்கும் சருமத்தில் தடவி 10 நிமிடங்கள் காயவைத்து பிறகு வெதுவெதுப்பான நீரில் கழுவி எடுத்தால் முகத்தில் இருக்கும் குழிகள் கொஞ்சம் கொஞ்சமாக குறைய தொடங்கும்.

**சரும கருமை நீங்குவதற்கு :-**

தினமும் இரவில் படுக்கும் முன் தக்காளி துண்டைக் கொண்டு முகத்தை தேய்த்து குறைந்தது 30 நிமிடங்கள் ஊற வைத்து குளிர்ந்த நீரில் முகத்தை கழுவுங்கள். சிலருக்கு முகத்தில் ஆங்காங்கே கருமை நிறம் அடர்ந்து தென்படுவதுண்டு. ஒரு சிலருக்கு இவை நன்றாக தெரியும் அவர்கள் தக்காளி துண்டுடன் கற்றாழை சாறை சேர்த்து நன்றாக மசித்து கொள்ள வேண்டும். இதை முகத்தில் தடவி 20 நிமிடங்கள் கழித்து முகத்தை கழுவினால் முகம் பளிச்சென்று இருக்கும்.

பொதுவாக நீங்கள் வெளியில் சென்று விட்டு வீட்டிற்கு வந்ததும், சோப் பயன்படுத்தாமல், ஒரு கரண்டி தக்காளி சாற்றுடன் எலுமிச்சை சாறு சேர்ந்து கலந்து முகத்தில் தடவி 5 நிமிடம் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும். இதனால், சருமத்தில் உள்ள அழுக்குகள் முழுமையாக நீங்கும் சருமம் ஜொலி ஜொலிக்கும்.

தக்காளிக்கு இதுபோன்ற பல்வேறு நன்மைகள் உள்ளன. எனவே சருமத்தை ஆரோக்கியமாக்க மேற்சொன்ன குறிப்பு களை பின்பற்றி உங்களை நீங்களே அழகாக்குங்கள்.



## அழகுக்கு அழகு சேர்க்கும் பசுப் பால்

பால் நாம் அன்றாடம் பயன்படுத்தும் உணவுப் பொருளாகும், இவற்றில் இருக்கும் ஊட்டச்சத்துக்கள் நம் உடலுக்கு அதிக ஆரோக்கியத்தை அளிக்கக் கூடியவை என்று அனைவருக்குமே தெரியும்.

தினமும் பால் குடித்து வந்தால் எலும்புகள் வலுவாகும் என்று அனைவருக்கும் தெரியும் ஆனால் பாலை தினமும் முகத்தில் தடவி வந்தால் முகமும் அதிக அழகு பெறும் என்று யாருக்காவது தெரியுமா?

ஆம் பாலை தினமும் முகத்தில் தடவி சிலநேரம் அழுத்தம் செய்தோம் என்றால் முகம் மிகவும் அழகாகவும், பொலிவுடனும், மென்மையாகவும் இருக்கும்.

அதுமட்டுமன்றி முகத்தில் ஏற்படும் கரும்புள்ளிகள், தேமல்கள், ஒவ்வாமை, வறண்ட சருமம், முகத்தில் தோன்றும் பருக்கள் மற்றும் முக சுருக்கங்கள் ஆகிய பிரச்சினைகளை குணப்படுத்த பால் மிகவும் உதவுகிறது.



சருமத்தை என்றும் இளமையாக வைத்துக்கொள்ள தினமும் பாலை முகத்தில் தடவிவர வேண்டும்.

இதன் மூலம் முகத்தில் தோன்றும் இறந்த செல்களை வெளியேற்றி, புதிய செல்களை பிறக்க வைப்பதுடன் முகம் பளபளக்க செய்யும்.

பால் முகத்தில் தோன்றும் சுருக்கங்களை அகற்றி முகத்தை என்றும் இளமையாக வைத்துக்கொள்கிறது.

வாரத்தில் இரு முறையாவது உடல் முழுக்க பாலை தடவி அல்லது குளிக்கும் நீரில் பாலை கலந்து குளித்து வரலாம்.

முகத்தில் தோன்றும் சுருக்கங்களை கட்டுப்படுத்த தினமும் முகத்தில் பால் தடவ வேண்டும்.

தினமும் பாலுடன் 1/2 துண்டு வாழைப்பழத்தை சேர்த்து பசை போல் அரைத்து முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்து முகத்தை கழுவ முக சுருக்கங்கள் மறைந்து விடும்.

முகம் வறண்டு போனால் பாலை பயன்படுத்தலாம்.

சூரிய ஒளியில் இருந்து சருமத்தை பாதுகாக்க, தினமும் உடல் முழுவதும் பாலை தடவ வேண்டும். இதன் மூலம் சூரிய ஒளியினால் கேடு விளைவிக்கும் கதிர்களிடமிருந்து சருமத்தை பாதுகாக்க முடியும்.

அதாவது சூரிய ஒளியினால் முகத்தில் ஏற்படும் தடிப்புகள், வறண்ட சருமம், சரும அரிப்புகள் போன்ற பிரச்சினையை பால் சீர் செய்கிறது. மேலும் சருமத்தின் ஆரோக்கியத்தை பாதுகாக்க வழிவகுக்கிறது.

உடலில் ஆடை அணிந்து மறைக்கப்பட்ட பாகங்கள் ஒரு நிறமாகவும், சூரிய ஒளி தாக்குதலின் பாதிக்கப்பட்ட சருமங்கள் ஒரு நிறமாகவும் இருக்கும்.

இவற்றை சரிசெய்ய தினமும் உடல் முழுவதும் பாலை தடவி வர நிறமாற்றங்கள் அடைந்த பகுதிகள் ஒரே நிறத்தில் இருக்க வழிவகுக்கிறது.

குழந்தை முகத்தை தவிர பொதுவாக அனைவருக்குமே முகத்தில் ஏதாவது காயத்தினால் ஏற்பட்ட தழும்புகள் அல்லது கரும்புள்ளிகள் இருக்கும்.

அவற்றை போக்க தினமும் பாலை முகத்தில் தடவி வர முகத்தில் இருக்கும் கரும்புள்ளிகள் மற்றும் தழும்புகள் குணப்படும் .இதற்கு பசும்பாலை காய்ச்சாமல் அப்படியே முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து முகத்தை கழுவலாம்.

அல்லது உருளைக்கிழங்கை அரைத்து அவற்றில் பால் கலந்து முகத்தில் தடவி வர முகத்தில் இருக்கும் தழும்புகள் மற்றும் கரும்புள்ளிகள் மறையும்.

மேலும் சருமத்தில் வறட்சியின் காரணமாக, சரும விரிசல் பிரச்சினைகளை சரி செய்ய பால் உதவுகிறது.

எனவே பாலை தினமும் உடலில் தடவிவர சருமம் பளபளப்பாகவும், மென்மையாகவும் மற்றும் அழகாகவும் காணப்படும்.

கண்டிஷனருக்கு பதிலாக நீங்கள் பாலை பயன்படுத்தலாம். முடி அதிக வறட்சியுடன் இருந்தால் பால் இரண்டு தேக்கரண்டி , தயிர் ஒருதேக்கரண்டி, கலந்து தலைமுழுவதும் தேய்த்து பின்னர் 40 நிமிடங்கள் கழித்து தலைக் குளித்திடுங்கள் கூந்தல் மிருதுவாகும்.

## ஆண்களின் முகத்தை இளமையாக வைக்கும் ஆயுர்வேத குறிப்புக்கள்



அழகு என்பதில் எப்போதும் ஆண் பெண் வேறுபாடு இருப்பதில்லை என்பதுதான் நிதர்சனம். எவ்வாறு ஒரு பெண் தன்னை அழகு செய்து கொள்கிறாளோ, அதே போன்று ஒரு ஆணும் அழகு செய்து கொள்ளலாம்.

ஆண்களின் அழகிற்கு அழகு சேர்க்க பல வகையான வேதிப் பொருள்கள் இன்று சந்தையில் வந்து குவிந்து கொண்டே இருக்கின்றன. ஆனால் அவை எல்லாம் ஆண்களின் அழகை கெடுத்து விடும். அத்துடன் பல்வேறு பக்க விளை வுகளையும் ஏற்படுத்தும். இவற்றிற்கு மாறாக ஆண்களின் அழகை இயற்கை வழியாக அழகுபடுத்தும் ஆயர்வேத அழகு குறிப்புகளை தெரிந்து கொள் வோம்.

ஆண்கள் வெளியில் அதிகம் செல்வதால் முகத்தில் எண்ணற்ற கிருமிகள் ஒட்டி கொள்ளும். இவற்றை நீக்கி பொலிவான முகம் பெற, அரை வாழைப் பழத்தை அரைத்து அதனுடன் 1 தேக்கரண்டி தேன் கலந்து முகத்தில் 15 நிமிடம் தடவவும் . பிறகு வெதுவெதுப்பான நீரில் கழுவினால் முகத்தில் உள்ள கிருமிகள் நீங்கி பொலிவு பெறும்.

பெரும்பாலான ஆண்களுக்கு முகம் மிகவும் வறண்டு காணப்படும் இதற்கு அரை வெள்ளரிக்காயை எடுத்து கொண்டு நன்கு அரைத்து, அதனுடன் 1 தேக்கரண்டி எலுமிச்சை சாற்றை கலந்து முகத்தில் பூசவும். இதனை வாரத்திற்கு 2 முறை இரவில் செய்து காலையில் முகம் கழுவினால் வறண்ட சருமம் புத்துணர்வுடனும் ஈரப்பதத்துடனும் இருக்கும்.

கரும்புள்ளிகள் கொண்ட ஆண்களின் முகத்தை சரி செய்ய 1 தேக்கரண்டி பாதாம் எண்ணெய், அரைத்த வேப்பங்கொழுந்து சிறிது, சிறிது மஞ்சள், சிறிது பால் அல்லது ரோஸ் நீர் ஆகியற்றை நன்றாக கலந்து முகத்தில் தடவினால் முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் வந்த இடம் தெரியாமல் காணாமல் போகும்.

முகப்பருக்களை போக்க 1 தேக்கரண்டி தேன், 1 தேக்கரண்டி யோக்கர்ட், பொடி செய்த தோடம்பழ தோல் போன்றவற்றை நன்றாக கலந்து முகத்தில் தடவி 20 நிமிடம் கழித்து குளிர்ந்த நீரில் அலசினால் முகப்பருக்கள் நீங்கும்.

பிசுபிசுப்புடனும், எண்ணெய் வழிந்த படியும் இருக்கும் முகத்திற்கு 1 தேக்கரண்டி தேன், சிறிது எலுமிச்சை சாறு, ஆகியவற்றை நன்கு கலந்து முகத்தில் தடவவும். பிறகு 15 நிமிடம் கழித்து குளிர்ந்த நீரில் முகத்தை கழுவினால் முகத்தின் எண்ணெய் பிசுக்குகள் நீங்கும்.

என்றும் இளமையாக இருக்க வேண்டும் என்ற ஆசை யாருக்குத்தான் இருக்காது. நீண்ட நாள்கள் இளமையாக இருக்க இந்த ஆயர்வேத முறை நன்கு பயன்படும். பசும்பாலில் நெய்யை 1/2 தேக்கரண்டி எடுத்து சிறிது பாலுடன் சேர்த்து முகத்தில் பூசி தடவி வர முகம் இளமையாக இருக்கும். அத்துடன் முகத்தில் உள்ள செல்களை மறு உற்பத்தி செய்யும்.

# விருந்துக்கதிர்




# ஆரோக்கியம் தரும் வீட்டுக்கு ஒரு முருங்கை



முருங்கையின் காயோ, பூவோ, இலையோ, எதையோ ஒன்றை தினமும் உணவில் சேர்த்துக் கொண்டால் நம் ரத்தத்தில் சர்க்கரையின் அளவு கணிசமான அளவு குறைவது தெரியவந்துள்ளது.

முருங்கையில் அதிக புரோட்டீன்கள் இருப்பதால், தசை வளர்ச்சி பெற இது மிகச்சிறந்த உணவாகும் மேலும் உடலின் தசை நிறையைப் பராமரிக்கவும் இது உதவுகிறது.

முருங்கைக் கீரையில் விற்றமின் ஏ, பி, சி ஆகிய சத்துக்களும், சுண்ணாம்புச்சத்து, புரதம், இரும்பு, கந்தகம், குளோரின், தாமிரம், கல்சியம், மக்னீசியம் போன்ற சத்துக்களும் உள்ளன.

முருங்கை இலையினுடைய பொடியானது மூளையின் ஆரோக்கியத்துக்கு மிகப் பெரிய அளவில் உதவுகின்றது. இது அல்சைமர் நோயைக் குணப்படுத்தும் ஆற்றல் கொண்டது. இதில் உள்ள விற்றமின் ஈ மற்றும் விற்றமின் சி ஆகியவை மன வளம், ஞாபக சக்தி ஆகியவற்றைப் பாதுகாக்க உதவுகிறது

ஆஸ்துமா, மார்புச் சளி, சைனஸ் போன்ற சுவாசக் கோளாறுகளுக்கு முருங்கை இலை ரசம் அல்லது சூப் மிகவும் நல்ல பலன் தரும். முருங்கை இலையினுடைய பொடியானது இதய ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவுகின்றது. இது மிக முக்கியமாக ரத்தத்தில் உள்ள கொழுப்பைக் குறைக்க உதவுகின்றது.

முருங்கை இலை சாறு ரத்தத்தை சுத்தம் செய்வதுடன், எலும்புகளையும் வலுப்படுத்தும். கர்ப்பப்பையை வலுப்படுத்தும். தாய்ப்பால் சுரப்பதை அதிகப்படுத்தும்.

முருங்கை இலையில் உள்ள பற்றீரியா மற்றும் பூஞ்சை எதிர்ப்பு சக்தியானது, உங்களுடைய சருமத்தில் உண்டாகின்ற தொற்றுக்கள், பற்றீரியாவினால் உண்டாகும் பிரச்சினைகள் போன்றவற்றில் இருந்து உங்களைக் காப்பாற்ற உதவுகிறது. இது சிறுநீர்ப் பாதையில் ஏற்படுகின்ற தொற்றுக்களைப் போக்கவும் உதவுகிறது.

முருங்கை கீரையை அடிக்கடி பொரியல் செய்து சாப்பிட்டு வந்தால் பித்த மயக்கம், மலச்சிக்கல், கண் நோய் கபம், மந்தம் போன்றவை குணமாகும். உடல் சூடு அதிகம் உள்ளவர்கள் வாரத்தில் இரண்டு முறை முருங்கைகீரை சாப்பிட்டு வர உடல் சூடு தணியும்.

தலைமுடியின் அடிப்பகுதியில் முருங்கை எண்ணெயைத் தடவினால் முடி கொட்டுவதும் தடுக்கப்படும். காய்ந்த தலை உச்சி, தலைமுடி உள்ளவர்களுக்கு இது பலன் தரும். ஏனெனில் இது முடியின் மிருதுத் தன்மையை மேம்படுத்த உதவுகிறது.

அதீத சத்துக்கள் உள்ள முருங்கை உடலில் பல்வேறு விதமான நோயெதிர்ப்பு சக்திகளையும் அதிகரிக்கிறது. நோயெதிர்ப்பு கட்டமைப்பு சீராக வேலை செய்ய உதவும் விற்றமின் 'ஏ' இரும்பு சத்து ஆகியவை இதிலிருப்பதால் இதன் நோயெதிர்ப்பு சக்தி அபாரமானது.

### முருங்கை கீரை

முருங்கை இலையை உருவி காம்புகளை நறுக்கி விட்டு, மிளகு ரசம் வைத்து சாப்பிட்டு வந்தால், கை, கால் உடம்பின் வலிகள் நீங்கும்.

முருங்கை இலைகளை நெய்யில் வதக்கி சாப்பிட்டால், ரத்த சோகை உள்ளவர்களின் உடம்பில் நல்ல ரத்தம் அதிகரிக்கும்.

பற்களின் உறுதி, நீளமான முடியின் வளர்ச்சி, நரை முடி, தோல் நோய், வயிற்றுப் புண், தலைவலி, வாய்ப்புண் ஆகிய நோய்களுக்கு முருங்கைக்கீரை நல்ல மருந்தாக உதவுகிறது.

முருங்கை இலையை கொண்டு தயாரிக்கப்படும் பதார்த்தத்தை சாப்பிட்டு வந்தால், தாய்ப்பால் சுரப்பு அதிகமாகும்.

ஆண், பெண் இருபாலரின் மலட்டுத் தன்மையை அகற்ற, முருங்கை இலையை வேகவைத்து சமைத்து சாப்பிட வேண்டும்.

### முருங்கைக் காய்

முருங்கைக் காயை சமைத்து சாப்பிட்டால் சிறுநீரகத்தின் ஆரோக்கியம் பாதுகாக்கப்படும்.

முருங்கைக் காய் மலச்சிக்கல், வயிற்றுப் புண், கண் நோய் ஆகியவற்றுக்கு நல்ல மருந்தாக பயன்படுகிறது. வாரத்தில் இரண்டு முறை முருங்கைக் காயை உணவாக சாப்பிட்டால், ரத்தம் மற்றும் சிறுநீர் சுத்தம் அடைகிறது.

முருங்கைக்காயை சூப் வைத்து குடித்து வந்தால் காய்ச்சல், மூட்டு வலி குணமாகும்.

கர்ப்பப்பையின் குறைகளை போக்கி, கருத்தரிக்கும் திறனை ஊக்குவித்து பிரசவத்துக்கு உதவுகிறது.

## முருங்கை கீரை சூப்

முருங்கை கீரையை பறித்து அதில் தேவையான அளவு உப்பு, மிளகு தூள் ஆகியவை சேர்த்து 10 - 20 நிமிடம் நன்கு கொதிக்க விட வேண்டும். 20 நிமிடம் கழித்த பிறகு முருங்கை கீரை சூப் போன்ற பதத்திற்கு மாறி விடும்.

இதை தினமும் குடித்து வந்தால் சளி,உடல் வலி போன்ற நோய்கள் நம் உடலை நெருங்க அஞ்சும் அதுவும் இந்த கொரோனா காலத்திற்கு ஏற்ற ஆரோக்கியமான குடிநீராகும்.

ஆதலால் இதனை தினமும் வழக்கமாக்கி கொள்ளுங்கள். இதனை காலையில் வெறும் வயிற்றில் குடித்தால் உடல் எடையும் குறையும்.

முருங்கை கீரை சூப் அல்லது சாறு குடிப்பதால் ஏற்படும் நன்மைகள் :-

தினமும் நம் உடலில் முருங்கை சாறு ஊறுவதால் தோல் நோய் ஏதாவது இருந்தால் தானே சரி செய்து கொள்ளும் குணம் இதற்கு உண்டு. காய்கறிகளில் இருக்கும் விற்றமினை விட முருங்கை கீரையில் விற்றமின் சி அதிகமாக காணப்படுகிறது. ஆதலால் யாருக்கெல்லாம் உடலில் விற்றமின் சி குறைபாடுகள் இருக்கோ அவர்கள் தயங்காமல் முருங்கை கீரையை தினமும் சாப்பிடும் வழிமுறைகளில் சேர்த்து கொள்ளலாம்.

முருங்கை கீரையில் இயற்கையாகவே அயன் சத்து உள்ளதால் எலும்புகள் எல்லாம் வலிமை பெறும். சிலர் பார்க்கத்தான் குண்டாக இருப்பார்கள் ஆனால் அவர்களுக்கு உடல் வலிமை கொஞ்சம் கூட இருக்காது. அப்படிப்பட்டவர்களுக்கு எலும்புகள் வலிமையாக இல்லை என்பது அர்த்தம். இதனால் தினமும் முருங்கை கீரை சாப்பிட்டால் அயன் சக்தி மேம்படும் எலும்புகளும் வலிமை பெறும்.

# ஆரோக்கியமான முருங்கைக்காய் குழம்பு செய்வது எப்படி ?





### தேவையான பொருள்கள்

| | |
|---|---|
| முருங்கைக்காய் | - 5 |
| தேங்காய்த்துருவல் | - 4 மேசைக்கரண்டி |
| தக்காளி | - 2 |
| மிளகாய்த்தூள் | - அரை தேக்கரண்டி |
| மஞ்சள்தூள் | - அரை தேக்கரண்டி |
| பெரிய வெங்காயம் | - 1 |
| கறிவேப்பிலை | - 1 நெட்டு |
| கசகசா | - 2 தேக்கரண்டி |
| கடுகு | - அரை தேக்கரண்டி |
| பச்சை மிளகாய் | - 2 |
| கொத்தமல்லி | - 1 தேக்கரண்டி |
| உப்பு | - தேவையான அளவு |
| நல்லெண்ணெய் | - 3 மேசைக்கரண்டி |

### செய்முறை

முருங்கைக்காயை நறுக்கிக் கொள்ளவும்.

வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாய் இவற்றையும் அளவாக நறுக்கிக் கொள்ளவும்.

தேங்காய்த்துருவல், கசகசாவை சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.

தாச்சியில் நல்லெண்ணெய் ஊற்றி, காய்ந்ததும் கடுகு, கறிவேப்பிலை போட்டு, தாளித்து நறுக்கி வைத்துள்ள பொருள்களைப் போட்டு வதக்கவும்.

அதன்பின் அரைத்து வைத்துள்ள தேங்காய் கலவையைப் போட்டு வதக்கவும்.

தேங்காய் கலவை வதங்கியதும் முருங்கைக்காயைப் போட்டு 2 நிமிடங்கள் வதங்கிய பின் தண்ணீர் அல்லது தேங்காய்ப்பால் ஊற்றி, உப்பு, மஞ்சள்தூள், மிளகாய்த்தூள் சேர்த்து, கிளறி விடவும்.

முருங்கைக்காய் வெந்து, குழம்பு பதம் வந்ததும் இறக்கி பரிமாறவும்.



# மருத்துவக் கதிர்



# குழந்தைகளின் உடல் நலத்தை பாதிக்கும் தூக்கமின்மை

தூக்கம் என்பது உடலுக்கு ஓய்வு என்றே பலரும் நினைக்கிறார்கள். உண்மையில் தூக்கத்தில்தான் உடல் தனக்குத் தேவையான பலவித மாற்றங்களை செய்து கொண்டு,தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது. அதிலும், வளர்கிற குழந்தைகள் நன்றாக தூங்கினால்தான், கல்வித்திறன், உடல் வளர்ச்சி, நினைவாற்றல் உள்பட பலவிதத்திலும் அவர்களது செயல்பாடுகள் சிறப்பாக இருக்கும். தூக்கம் கெட்டால் எல்லாமே கெடும்.

தூக்கத்தில் முதல்நிலை தூக்கம், இரண்டாம் நிலை தூக்கம், ஆழ்ந்த நிலை தூக்கம் என 3 நிலைகள்இருக்கின்றன. இதில் ஆழ்ந்த நிலை தூக்கம் குழந்தைகளுக்குக் கிடைக்காவிட்டால், உடல் வளர்ச்சி, மூளை வளர்ச்சி இரண்டும் பாதிக்கும்.பெண் குழந்தைகளுக்கு ஹோர்மோன் குளறுபடியால் எதிர்காலத்தில் மாதவிலக்கு தொடர்பான பிரச்சினைகளும் ஏற்படலாம்.

பாடசாலை ,சூம் வகுப்பு, விசேட வகுப்பு என்று மாணவர்கள் இன்று ஓடிக்கொண்டே இருப்பதால், 6 மணி நேரம் தூங்கினாலே பெரிய விடயம் என்று மாறிவிட்டது. படிப்பு ஏற்படுத்தும் பதற்றங்களால் தூக்கத்தின் இடையிடையே எழுந்து படிப்பதும் ஒரு பழக்கமாகிவிட்டது.

இதனால், கல்வியில் கவனம் குறைவது, மற்ற மாணவர்களுடன் சுமுகமான உறவு இல்லாமல் போவது உயர்தர செயற்பாடு என்று சொல்லக் கூடிய தேவையற்ற பரபரப்பு போன்றவை உருவாகின்றன.

லெப்டின் என்ற ஹோர்மோனால் பருமன் ஏற்படுவது, தைராய்ட் குறைபாடுகள் போன்ற பிரச்சினைகளும் தூக்க மின்மையால் ஏற்படுவதாக சமீபத்திய ஆய்வுகள் கூறுகின்றன.

பெரியவர்களுக்கு முதல்நாள்தூக்கம்கெட்டுப்போனாலே, அடுத்த நாள் கண்கள் எரிச்சலாக இருக்கும், வேலைகளில் கவனம் செலுத்த முடியாது, கோபம் அதிகமாக வரும். குழந்தைகளுக்கோ, இதுபோன்ற தூக்கமின்மை தொடர்கதையானால், பெரியவர்களைவிட அதிக பாதிப்புகள் ஏற்படும். 40 வயதுக்கு மேல் ஏற்படும் ரத்த அழுத்தம், நீரிழிவு, பக்கவாதம் போன்ற குறைபாடுகள் இளவயதிலேயே வரும் சாத்தியங்களும் உள்ளன.

குழந்தைகளின் எதிர்காலம் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் பெற்றோர் ஏதேனும் ஒருவிதத்தில் அவர்களை ஓடவைத்துக் கொண்டேயிருக்கிறார்கள். ஆனால், தூக்கமின்மையால் கல்வி உள்பட பலவிடயங்களிலும் அவர்களது எதிர்காலமே பாதிப்புக்குள்ளா கலாம் என்பதை மறக்கக் கூடாது என்கின்றனர் வைத்தியர்கள்.

### தூக்கம் வருவதற்கு சில வழிமுறைகள்

குறிப்பிட்ட நேரத்தில் தூங்கி, குறிப்பிட்ட நேரத்தில் எழுவதை குழந்தைகளுக்குப் பழக்க வேண்டும். தவிர்க்க இயலாத நாள்களில் கொஞ்சம் மாற்றம் இருந்தால் தவறில்லை. ஆனால், இஷ்டத்துக்குத் தூங்கி, இஷ்டத்துக்கு எழுகிற பழக்கத்தால் நாமே தூக்கமின்மையை உருவாக்குகிறோம்.

தூங்குவது 5 மணி நேரம் என்றாலும் தொடர்ச்சியான தூக்கமாக இருக்க வேண்டும். இடையிடையே விழித்து, தூங்குவது ஆரோக்கியமான தூக்கம் இல்லை.

காலையில் எழுந்த பிறகு, நம் உடலில் வெளிச்சம் படுகிற மாதிரி குழந்தைகளை சிறிது நேரம் நடைப்பயிற்சி செய்யப் பழக்க வேண்டும். அது அன்றைய இரவு தூக்கத்துக்கு நல்லது.

தேநீர், பால் போன்ற தூக்கத்தைக் கெடுக்கும் பானங்களை மாலை 6 மணிக்கு மேல் தவிர்த்து விடுங்கள்.

வெறும் மூளை சார்ந்த உழைப்பாக மட்டுமே இன்றைய வாழ்க்கை முறை பலருக்கும் இருக்கிறது. அதனால், உடற்பயிற்சிகள்,விளையாட்டுகள் போன்றவற்றைப்பின்பற்றினால் உடல் தானாகவே சோர்ந்து, 'தூக்கம் வேண்டும்' என்று கெஞ்ச ஆரம்பிக்கும்.

மாலையில் குளிப்பது, இரவு உணவை 8 மணிக்குள் சாப்பிடுவது, தூங்கப் போவதற்கு முன் பால், வாழைப் பழம், தேன் போன்றவற்றை எடுத்துக் கொள்வது தூக்கத்துக்கு உதவி செய்யும்.

தூங்கச் செல்லும் ஒரு மணிநேரத்துக்கு முன்பு செல்போன், கம்ப்யூட்டர், டி.வி. போன்ற எலெக்ட்ரானிக் பொருள்களின் வெளிச்சங்கள் கண்களில் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த வெளிச்சங்களாலும் தூக்கம் தொலையும். படுத்துக்கொண்டே படிப்பது, டி.வி. பார்ப்பது, நொறுக் குத்தீனி கொறிப்பது போன்ற மற்ற வேலைகளை படுக் கையில் தவிர்க்க வேண்டும்.

பல்வேறு அழுத்தங்களால் நம் நாள் முழுவதும் பதற்றங்களாலேயே நிரம்பியிருக்கிறது. இதன் எதிரொலியாக படுக்கையில் விழும்போதும் பல பிரச்சினைகள் மனதை அரிப்பதால் தூக்கம் தொலைகிறது. 'இன்று இரவு நன்றாகத் தூங்கி எழுந்து, காலையில் தெம்பாக பிரச்சினைகளை ஒரு கை பார்த்துக் கொள்ளலாம்' என்ற மனநிலையோடு தூங்குங்கள்.

# ஆரோக்கியத்திற்கு அடையாளம் பசி



நீண்ட நாள் வாழவேண்டும் என்று ஆசைப்படுபவர்கள் பசி எடுக்காமல் சாப்பிடவே கூடாது.

பசி எடுக்காமல் இருப்பது, அளவுக்கு அதிகமான பசி, களிமண், அடுப்பு கரி, போன்றவற்றை சாப்பிட ஆசை வருவது போன்ற காரணிகள் இந்த பசியின்மையை அடையாளம் காட்டுகிறது. இந்த பசியின்மை ஏன் வருகிறது?

உடல் நிலையில் ஏதாவது குறை இருப்பின் மலச்சிக்கல், உடல் உழைப்பின்மை, அதிக அளவு புகைப் பழக்கம், அளவிற்கு அதிகமான குடிப்பழக்கம் இவை போன்ற பல காரணங்கள் உண்டு.

சாப்பிடுவதற்கு முன் ஒரு நல்ல நடைப்பயிற்சி மேற்கொண்டு விட்டு உணவு உண்ணும்பொழுது பசி நன்றாக எடுத்து உணவு சுவை கூடும்.

ஒரு தேக்கரண்டி எலுமிச்சை சாறு, சிறிது உப்பு இவற்றை ஒரு நீர் குவளையில் நீருடன் கலந்து அருந்தினால் பசி மிகும்.

ஒரு வேளை கோதுமை புல் சாறு குடித்தால் பசி அதிகமாகும். தக்காளி சாறும் பசியை தூண்டும். ஒரு எலுமிச்சையை நான்கு துண்டுகளா வெட்டி பிரிக்காமல் சிறிது உப்பு, மிளகு தூள், சுக்கு தூள், சர்க்கரை போன்றவற்றை அதில் தூவி அப்படியே பாத்திரத்தில் மூடி ஒருநாள் இரவு முழுவதும் வைத்து காலையில் தோசை கல்லில் பழத்தை சிறிது அனலில் போட்டு வாட்டி எடுத்து அந்த எலுமிச்சை சாற்றை அப்படியே உறிந்து குடித்தால் பசி அதிகரிக்கும். இது கல்லீரலையும் நன்கு வேலை செய்ய வைக்கும். வெறும் வயிற்றில் தேநீரை அருந்தவே கூடாது. இது பசியை மட்டுப்படுத்தி விடும்.

# சில இயற்கை ஆரோக்கிய குறிப்புக்கள்

நரம்பு தளர்ச்சி சர்வ சாதாரணமாக எல்லோருக்கும் வருகிறது. மலச்சிக்கல், உறக்கமின்மை, நீரிழிவு நோய், ரத்த அழுத்தம், சத்தான உணவை உட்கொள்ளாமை போன்றவைகளால் நரம்பு தளர்ச்சி நோய் ஏற்படுகிறது.

**இதனைத் தவிர்ப்பதற்கு:-** நன்றாக உறங்க வேண்டும்.மன அளவிலும், உடல் அளவிலும் உடலைப் பாதுகாக்க வேண்டும். உறங்குவதற்கு முன் அதிக நீரைப் பருக வேண்டும். தூங்குவதற்கு முன் சூடான பானம் எதுவும் அருந்தக் கூடாது.

**தொண்டைப்புண்:-** தொண்டைப்புண், சளி போன்றவற்றால் அவதிப்படுவோருக்கு பனங்கற்கண்டு, சிறிது மிளகு, சீரகம், விரலி மஞ்சள் துண்டு ஆகியவை உதவும்.மிளகு, சீரகத்தை வறுத்து பொடி செய்து கொண்டு ஒரு குவளை தண்ணீரில் சிறிது மஞ்சளைப் பொடியாக்கிவிட்டு மேற்கண்ட எல்லாவற்றையும் போட்டு கொதிக்க விடவும். பின் ஒரு தேக்கரண்டி வெண்ணெய்யை சேர்த்து கலக்கி குடித்தால் தொண்டையை தொல்லைப்படுத்திக் கொண்டிருக்கும் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு ஏற்படும்.

**உடல் தளர்ச்சி:-** வெங்காயத்தில் விட்டமின் ஏ,பி,சி, ஆகியவை உள்ளன. உடல் தளர்ச்சியினால் ஏற்படும் உபாதைகள் நீங்கும். இருதயத்தை வலுப்படுத்தும். உடலுக்கு சக்தியை அளிப்பதுடன் இழந்த சக்தியை திரும்பவும் தரக்கூடியது. இளமையைப் பாதுகாக்கும். நீரிழிவு நோயாளிகளுக்கு வெங்காயம் அருமருந்து, காரணம் வெங்காயத்தில் இன்சுலின் உள்ளது.

**வயிற்றுப்புண்:-** வயிற்றுப்புண் இருப்பவர்கள் பச்சரிசி, பாசிப்பருப்பு, வெந்தயம் ஒரு தேக்கரண்டி , நிறைய பூண்டு போட்டு நன்றாக வேக வைத்து தேங்காய்ப்பால் கலந்து சாப்பிட்டால் வயிற்றுப்புண்ணும், வாய்ப்புண்ணும் குணமாகிவிடும்.

**தலைவலி: -** தலைவலி வந்தால் வெதுவெதுப்பான நீரில் சிறிது எலுமிச்சை சாறு, இஞ்சிச்சாறு கலந்து சிறிது உப்புடன் சேர்த்துப் பருகினால் தலைவலி உடனே குணமாகும்.

**நெல்லிக்காய்:-** நெல்லிக்கனியில் விற்றமின் சி உள்ளது. தோடம் பழத்தை விட சுமார் 25மடங்கு சத்து அதிகமாக நெல்லிக்கனியில் உள்ளது. இக்கனியில் பொஸ்பரஸ், கல்சியம், புரதச்சத்து, கொழுப்பு, நீர்ச்சத்து போன்ற சத்துக்கள் உள்ளன . பல் தொடர்பான வியாதிகள், மலச்சிக்கல், எலும்புத்தாடை, நீர்த்தாரையில் உள்ள புண் போன்றவற்றை குணப்படுத்துவதில் இதன் பங்கு அதிகம். அதே போல் மூளைக்கோளாறு, இதய நோய், காசநோய், ஆஸ்துமா, நீரிழிவு போன்ற நோய்களை குணமாக்குவதில் இதன் பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**கற்றாழை:-** கற்றாழையில் உள்ள மருத்துவக் குணங்கள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. இதில் விற்றமின்கள், கனிம சத்துகள், புரோட்டீன்கள் சேர்த்து 70 வகையான மருத்துவக் குணங்களுடைய உப பொருள்கள் உள்ளன. மொத்தத்தில் கற்றாழை உடலிற்கு சக்தியை தரக்கூடியது. ரத்த ஓட்டத்தை சீராக்குவது. மூளையில் ரத்தம் உறைந்த நோய் எதிர்ப்பு சக்திக்கு, அல்சர் போன்ற வயிறு சம்பந்தமான கோளாறுகளுக்கு, ஜீரண சக்திக்கு, தோல் பாதுகாப்புக்கு, தோல் பளபளப்புக்கு கற்றாழை நல்ல பயன் தருகின்றது. தசைகள் மூட்டு இணைப்புகளில் திடத்தன்மை ஏற்படுத்துவதும் கற்றாழைதான். இவை சாதாரண இயற்கை வைத்தியமுறைகள் ஆனால் மேற்சொன்ன குறிப்புகளில் பூரண குணத்திற்கு எதிர்பாராமல் தகுந்த மருத்துவரை முதலில் நாடுவதே சரியான வழிமுறை.

# சிறுவர் கதிர்



## கும்பகர்ணன் வரம்

கும்பகர்ணன் தவத்தில் மிக்கவன். அவன் கேட்க நினைக்கும் சாகா வரத்தை அவன் பெற்றுவிட்டால் தேவர்கள் கதி அதோகதிதான் என்று நினைத்த இந்திரன் சரஸ்வதியை வேண்ட கும்பகர்ணன் பிரம்மாவிடம் வரம் வேண்டும் போது அவனது நாக்கைச் சற்றுப் பிறழ வைத்துவிடுகிறாள்.

நித்தியத்துவம் என்று கேட்க நினைத்தவன் நித்திரைத்துவம் என்று கேட்டு விடுகிறான். அதனால் சதா தூங்கிக்கொண்டிருக்கும் வரத்தைப் பெற்று விடுகிறான்.

இராவணனும் அவனது சகோதரர்களும் பிரம்ம குலத்தைச் சேர்ந்தவர்கள். பிரம்ம தேவன் மானச புத்திரர்களில் புலத்தியன் என்பவனும் ஒருவன். அந்தணன் அவன் ஒரு அரக்கியை மணக்க நேர்ந்ததால் அவனது வம்சத்தினர் அரக்கர்களாக ஆகிவிடுகிறார்கள்.

புலத்தியன் இராவணனுக்குத் தாத்தா. எனவே பிரம்மாவுக்கு இராவணனிடமும் அவனது சகோதரர்களிடம் ஒரு பாசப்பிணைப்பு உண்டு. எனவே இராவணன் பிரம்மாவிடம் வேண்ட பிரம்மா கும்பகர்ணனின் தூக்க வரத்தைச் சற்றே மாற்றி ஆறுமாதங்கள் தூங்கவும் ஆறுமாதங்கள் விழித்திருக்கவுமாகச் செய்துவிடுகிறார்.

இன்னொரு வகையாகவும் அவன் தூக்க வரம் பெற்றதைப்பற்றி ஒரு கதையிருக்கிறது. கும்பகர்ணன் கடுமையான பசியை உடையவன். கையில் கிடைத்த ஜீவராசிகளையெல்லாம் அப்படி அப்படியே உண்டு வந்தானாம். எல்லோரும் பிரம்மாவிடம் முறையிட அவனுக்குத் தூக்கச் சாபம் கொடுத்துவிடுகிறார். இராவணன் வேண்ட அவன் எழுப்பப்பட்டால் ஒருநாள் மட்டும் விழித்திருப்பான். அப்பொழுது அவன் எதை வேண்டுமானாலும் சாப்பிட்டுக்கொள்ளட்டும் என்று பிரம்மா வரத்தை மாற்றினார் என்றும் சொல்லப்படுகிறது.





## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்

## வேகமும் விவேகமும்

ஒரு காட்டில் ஆமையும், நத்தையும் நண்பர்களாய் இருந்தன. அவை இரண்டுக்கும் நீண்ட காலமாக, ஒரு மனக்குறை இருந்தது. தங்களால் வேகமாக நடக்கவோ, தாவிக் குதித்து ஓடவோ முடியவில்லை என்ற மனக்குறைதான் அது.

ஒருநாள், அவை இரண்டும் நடந்து சென்றுகொண்டிருந்த போது, ஓர் அழகிய வெள்ளை நிற முயல் தாவிக் குதித்து, ஓடி வருதைக் கண்டன.

“முயலே நில்!” என்றது ஆமை.

முயல் நின்றது.

“நீ எப்படி இவ்வளவு வேகமாய் தாவிக் குதித்து ஓடுகிறாய்?” என்று கேட்டது நத்தை.

“இது என்ன கேள்வி! உங்களுக்கு இருப்பது போல், என் முதுகில் கனமான ஓடு இல்லை. அந்தச் சுமை இல்லாததால், வேகமாக ஓடுகிறேன்!” என்று சொல்லி விட்டு, முயல் அந்த இரண்டையும் இளக்காரமாகப் பார்த்தது.

“ஓஹோ! எங்களின் வேகக் குறைவுக்கு எங்கள் ஓடுதான் காரணமா?”

“ஆமாம்! நீங்கள் உங்கள் ஓடுகளைக் கழற்றிப் போட்டுவிட்டால், என்னைப் போல் வேகமாக ஓடலாம். வேகமாக ஓடுவதில், ஓர் அலாதியான சுகம் இருக்கிறது தெரியுமா அனுபவித்துப் பாருங்கள்!” என்றது முயல்.

ஆமைக்கும், நத்தைக்கும் அந்த இடத்திலேயே தங்கள் முதுகு ஓடுகளைக் கழற்றிப் போட்டுவிட வேண்டும் என்ற ஆவல் பிறந்தது.

அவற்றைக் கழற்ற முயன்றபோது, திடீரென புதர் மறைவில் ஏதோ அசையும் ஓசை கேட்டது.

ஆமையும், நத்தையும் ஆபத்தை உணர்ந்து, தங்கள் ஓடுகளைக் கழற்றும் முயற்சியைக் கைவிட்டன.

சட்டென, புதர் மறைவிலிருந்து ஒரு ஓநாய் வெளிப்பட்டு, முயலை நோக்கிப் பாய்ந்தது.

ஆமையும், நத்தையும், விருட்டென்று தங்கள் உடலை ஓடுகளுக்குள் இழுத்துக் கொண்டு, உயிர் பிழைத்தன.



ஓநாய் முயலைப் பிடித்தது.

சிறிது நேரம் சென்ற பிறகு ஓடுகளை விட்டு வெளியே வந்த ஆமையும், நத்தையும் முயலின் ரத்தத்தைப் பார்த்து, உறைந்து போயின.

தாங்கள் வேகமாய் ஓடுவதை விட, உயிர் பிழைத்து வாழ்வதே முக்கியமானது என்பதை உணர்ந்தன. தங்கள் எதிரியிடமிருந்து காப்பாற்றிய தங்கள் ஓடுகளுக்கு அவை நன்றி கூறின.

## ஆட்டுக் குட்டி




துள்ளி வரும் ஆட்டுக்குட்டி
துணிந்து வரும் ஆட்டுக்குட்டி
பள்ளி செல்ல வருவாயோ?
பாடம் சொல்லித் தருவாயோ?

கள்ளம் இல்லை உன் மனதில்
கபடம் இல்லை உன்மனத்தில்
பள்ளம் மேடு எது வந்தாலும்
பாய்ந்து ஓடும் ஆட்டுக்குட்டி.

தொல்லை இல்லா ஆட்டுக்குட்டி
தோல் கறுத்த ஆட்டுக்குட்டி
சொல்லைக் கேட்டு வீட்டையே
சுற்றி வரும் ஆட்டுக்குட்டி.

## சிறந்த வர்ணத்துக்கு பரிசு தரும் எண்ணம்




கீழ்வரும் ஓவியத்துக்கு பொருத்தமாக வர்ணம் தீட்டி அனுப்புங்கள் சிறந்த வர்ணம் தீட்டலுக்கு பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.

**முகவரி**
**காலைக்கதிர்**
**சிறுவர் பகுதி**
**இல - 30,**
**கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்**

(ஒவ்வொரு வாரமும் உங்கள் படைப்புகளை அனுப்பி பெறுமதியான பரிசுகளை வெல்லுங்கள்.)

சிறுவர் ஆக்கங்களையும் மேலுள்ள முகவரிக்கு அனுப்பி வையுங்கள் சிறந்த ஆக்கங்களுக்கு பரிசுகளை நீங்கள் வெல்லலாம்.



# கலைக் கதிர்



## இலக்கிய ஆளுமைகளில் ஒருவரான திருமலை சுந்தா

திருகோணமலையைச் சேர்ந்த சின்னத்துரை சுந்தரலிங்கம் 1951.03.11 இல் பிறந்தவர். திருகோணமலை இந்துக்கல்லூரியில் கல்வி கற்றவர்.

17 வது வயதில் இவரது கன்னிக் கவிதை ஜோதி வார இதழில் வெளியானதன் மூலம் இலக்கிய உலகில் பிரவேசித்தார். பல புனைபெயர்களில் இலக்கியம் படைத்தாலும் திருமலை சுந்தா என்ற புனைப்பெயர் மூலம் அதிகம் அறியப்பட்டவர்.

'என்னை அழைக்கிறாள்' என்ற இவரது முதலாவது சிறுகதை 1971 இல் மித்திரனில் வெளியானது. சிந்தாமணி, வீரகேசரி, தினகரன், சிரித்திரன், அபியுக்தன், சுடர் உள்ளிட்ட பத்திரிகை, சஞ்சிகைகளில் இவரது ஆக்கங்கள் வெளியாகியுள்ளன. 150க்கு மேற்பட்ட சிறுகதைகளை இதுவரை எழுதியுள்ளார்.

இதனை விட பல்வேறு நாடகங்களும் எழுதியுள்ளார். தினரகன், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் இவரது நாடகங்கள் பிரசுரமாகி உள்ளன. இலங்கை வானொலியில் இவரது பல ஈழத்து பாடல்கள் ஒலித்துள்ளன.

வேள்வி, விழியோரத்துக் கனவுகள், நாளையைத் தேடும் மனிதர்கள் ஆகிய சிறுகதைத் தொகுதிகள், நான் - அவள் என்ற குறுங்கதைத் தொகுதி, அம்மா, தொலைந்த நாட்கள் ஆகிய கவிதைத் தொகுதிகள், சடங்கு - கட்டுரைத் தொகுதி , போராடப் பிறந்தவர்கள் - நாவல், சிவனொளி, மானுடம் சிற்றிதழ் தொகுப்புகள் என இவரது 10 நூல்கள் இதுவரை வெளியாகியுள்ளன.

மாணிக்கம், சுதந்திரன், சுடர் போன்ற பத்திரிகைகளின் ஊடகவியலாளராகவும் பணியாற்றியுள்ளார். திருவாளர் பொதுசனம், கண்டோம் கருத்தறிந்தோம் போன்ற தலைப்புகளிலான நேர்காணல்கள் சுடர் பத்திரிகைக்காக செய்துள்ளார்.

கவிஞர் செ.நவசோதிராசாவுடன் இணைந்து புதுமை நெஞ்சங்கள் என்ற இலக்கிய அமைப்பை தாபித்து அதன் மூலம் பல்வேறு இலக்கியச் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளார். இதன் மூலம் க.அருள்சுப்ரமணியம், தாபி சுப்ரமணியம் ஆகியோரின் நட்பு ஏற்பட்டது. புதுமை நெஞ்சம் என்ற ரோணியோ இலக்கிய இதழ் இவர்களால் வெளியிடப்பட்டது.

மானுடம் (இலக்கிய சிற்றிதழ்), சிவனொளி (ஆன்மீக சிற்றிதழ்), சுகமா (ஆரோக்கியச் சிற்றிதழ்), சிட்டு (சிறுவர் சிற்றிதழ்), சிவநெறி (சஞ்சிகை), புதுமை நெஞ்சங்கள் (இலக்கிய இதழ்) ஆகியவற்றின் ஆசிரியராகச் செயற்பட்டுள்ளார்.

அநுராதபுரம் அன்பு ஜவகர்ா தொகுத்த 44 கவிஞர்களின் 'பொறிகள்' என்ற கவிதைத் தொகுப்பில் இவரது கவிதையும் உள்ளது. சுதந்திரன் சிறு கதைகள் தொகுப்பில் இவரது 'பயணத்திற்கு சொல்லவில்லை' கதை சேர்க்கப்பட்டுள்ளது.

திருகோணமலை அம்மா பதிப்பகத்தின் நிறுவுநர் இவர். இந்த பதிப்பகத்தின் மூலம் கவிதை, சிறுகதை, விளையாட்டு, ஆன்மீகம், நாவல் என இதுவரை 29 நூல்கள் வெளியிட்டுள்ளார்.

பல கோயில்களின் கும்பாபிஷேக மலர்களின் தொகுப்பாசிரியராக செயற்பட்டுள்ளார். ஆயிரத்துக்கு மேற்பட்ட கல்வட்டு புத்தகங்களின் தொகுப்பாசிரியராகவும் செயற்பட்டுள்ளார்.

திருகோணமலை பட்டனமும், சூழலும் பிரதேச செயலகத்தினால் 1997, 1998, 1999 ஆகிய ஆண்டுகளில் நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் தொடர்ச்சியாக முதற்பரிசு பெற்றுள்ளார்.

சுதந்திரன் சிறுகதைப் பாராட்டுவிழா, தேசிய வாசிப்பு வார விழா, நூலக தின விழா போன்றவற்றில் கௌரவங்கள் பெற்றுள்ளார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நடுவர் குழாமின் உறுப்பினராக கடந்த சில ஆண்டுகளாக பணியாற்றி வருகின்றார்.

2011இல் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 2014இல் கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் வித்தகர் விருதும், திருகோணமலை நகர முதல்வர் விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

அமைதியான போக்கும் எதனையும் அலட்டிக்கொள்ளாத பண்பும் கொண்டவர். ஆன்மீகத்தில் அதிக ஈடுபாடுள்ளவர். தற்போது முகநூல் பக்கத்தில் பல பயனுள்ள தகவல்களைப் பதிவிட்டு வருகின்றார். இவர் இன்னும் அதிக ஆக்கங்கள் தரவேண்டும் எனப் பிரார்த்திப்போம்.

**ஏ. ஸீ. எம். முஸ் இல் - திருகோணமலை**



## அலைபேசிக் காதல்

**அகத்தினை பார்த்த நேசம் - நல்**
**முகத்தினை பார்த்த காதல்**
**செகத்திலே கண்டார் அன்று**
**மனமகிழ் கொண்டார் என்றும்**

**அங்கத்தை பார்த்தும் பாசம்**
**அழகினை பார்த்தும் அன்பு**
**தங்கத்தை பார்த்தும் காதல்**
**புவியிலே கண்டார் இன்று**

**அலைபேசிக் காதல் கொண்டு**
**மகிழ்விலே குளிப்போர் தம்மின்**
**தொலைதூர வாழ்வு வரையில்**
**தொடருமா?. இந்தக்காதல்**

**எங்குமே எதிலும் காதல்**
**இச்சையை தூண்டும் வண்ணம்**
**பங்கமே வாராதென்று**
**பயத்தினை உணரா நின்றார்**

**அந்தரங்கத்து அந்த**
**ரகசியம் தனையே இன்று**
**அலைபேசித் திரைமுன் காண**
**தந்திரக் காய் நகர்த்தல்**

**முந்தய முதல் இரவு**
**முழுவதும் தலைகீழாக**
**பண்டைய வாழ்வு மாறி**
**கறைபடிந்திட்ட காதல்**

**இன்றைய இளையோர் வாழ்வில்**
**காமமே தலைவிரித்தாட்டம்**
**தெய்வீகக் காதல் போய் பின்**
**அலைபேசிக்காதல் உதயம்**

**திரையதன் முன்னே இந்தக்**
**காமத்தின் கணைத்தொடுப்பில்**
**பாலியல் இன்பம் கண்டார்**
**பாவமே இந்தப் பெண்கள்!.**



**மோகனா கௌரிதாசன்**

## ஏன் என்றால்



**அலைகடலென மேகங்கள்**
**காற்றின் திசையில்**
**தலையாட்டிகளாய் திசைகாட்டிகள்**

**சுழலின் அழுத்தம்**
**சூழ்நிலையை**
**சூறையாடிகொண்டது அறியாமல்**
**பரிதவிக்கும் தலைமுறைகள்**

**தொடருந்தென தொலையும்**
**காலங்கள் - இருந்தும்**
**புகைத்தலை நிறுத்துவதாயில்லை**

**நூற்றாண்டு பழக்கத்தை**
**நொடியில் கைவிட முடியாது தான்**
**இனியும்**
**கழியும் பல இராக்கள்**
**திராணியற்று**

**மறுபடியும் அடுத்த நாள் காலை**
**அலாரத்துடன் விடிந்தே தீரும்**
**ஆணிகள் அடித்து முடிக்கப்பட்டு**

**அடைமழை வேண்டாம்**
**புகலிடம் ஒன்றே போதும்**

**விடுதலை விருட்சம்**
**விதையினை மறுத்து**
**கிளைதனில் அரும்புதல்**
**சாபம்**



**அ.விமலாந்தன்**

## சூன்யத்தின் பெருவெளியில் ஒரு சிறு துளி

**இருளடர்ந்து வரும் அந்திப்பொழுதொன்றில்**
**ஏதேனும் ஒரு ஆற்றின் பரப்பை பார்க்கையிலே**
**மனது பிசையும் உணர்வை உதற முடியவில்லை**
**என்னால் எப்போதுமே**
**மனதின் விசாலங்களை**
**சூன்யம் சூழும்போதெல்லாம்**
**பெருமணல் பரப்பிக்கிடக்கும்**
**அந்தி நேரத்து ஆற்றோரத்தை**
**தனியாய் அளைந்து திரிய**
**மனது விளைகின்றது**
**முன்பனிக்காலமொன்றில்**
**குளிர் சுருட்டும் உடலோடு**
**தோழனொருவனின் நெஞ்சினில் சாய்ந்தபடி**
**நிலவை வெறித்த**
**ஆற்றோர தில்லை மர வாழ்வை**
**எப்படி நான் மறந்து போனேன்**
**மெலிதான அரவத்திலும்**
**துணுக்குற்று விழித்தெழுவதும்**
**பின் நீளும் இரவுகளை**
**கதை மொழிந்து கடத்துவதும்**
**ஆட்காட்டியின் கேவலிலே**
**அனைத்தும் அடங்குவதும்**
**சோவெனப் பெய்யும் மழையில்**
**விறைத்து நடுங்குவதும்**
**எப்படி மறந்தேன் என்**
**தில்லை மர வாழ்வை?**
**ஆழப்படுக்கையினில்**
**அளவற்ற அற்புதங்களைப்**
**பொதித்திருக்கும்**
**கோரைக்களப்பாறு அமைதியாய்**
**தூங்கும் நடு நிசி நேரத்திலே**
**துள்ளியெழும் கயல் மீனில்**
**நிலவு தெறிக்க உண்டாகும்**
**வெள்ளி வளைவுகளை ரசித்த**
**தருணங்களை எப்படி நான் மறந்து போனேன்?**
**அந்த இரவுகள் அச்சங்களில் முடிந்தன**
**அந்த இரவுகள் அழுகைகளில் முடிந்தன**
**அந்த இரவுகள் மரணங்களோடு முடிந்தன**
**அந்த இரவுகள் காதலின் துயரோடு முடிந்தன**
**ஆனாலும் யாவற்றையும் மீறி**
**அந்த இரவுகள் நம்பிக்கையோடு முடிந்தன**
**எப்படி மறந்தேன் என் தில்லைமர இரவுகளை?**



**திருக்கோவில் கவியுவன்**




# காளான் வளர்ப்பு இலகுமுறை அதிக வருமானம்



ஆக்கம்:- T.நிவேதனா,
NVQ6 மாணவி,
யாழ்ப்பாணக்கல்லூரி
விவசாய நிறுவனம்,
மருதனார்மடம்.

காளான் என்பது ஒரு வகை பங்கஸினுடைய கனிய உடலமாகும். ஒளித்தொகுப்பிற்குரிய நிறப்பொருள் ஆன குளோரோபில் கொண்டிராமையினால் இதனால் ஒளித்தொகுப்பு செய்ய முடியாது. இது தனக்கு தேவையான சத்துக்களை தான் வளரும் ஊடகத்தில் இருந்து பெற்றுக் கொள்கின்றது. காளான் பல சத்துக்களை உள்ளடக்கிய சதைப்பற்றுள்ள கனிய உடலமாகும்.

இதில் காணப்படும் ஊட்டச்சத்துக்கள் ஆவன புரதம், சிறிதளவு கொழுப்பு, கல்சியம், தயமின், நியசின். விற்றமின் C றைபோபிலோவின் அத்துடன் காளான் பல மருத்துவ குணங்களையும் உள்ளடக்கியது.

தற்போதைய காலப்பகுதியில் மிகுந்த இலாபம் ஈட்டும் விவசாயத்தறையில் காளான் வளர்ப்பு பெரும் பங்கு வகிக்கின்றது. ஏனெனில் குறைந்த மூலதனத்தில் அதிக இலாபம் ஈட்டக்கூடிய செய்கை, குறைந்த இடப்பரப்பில் போதுமானது, ஊழியர்கள் அதிகம் தேவையில்லை. அடுத்து நாம் காளான் செய்கையை எடுத்து நோக்குவோமானால் பிரதானமாக மரத்தூசு, வைக்கோல் போன்ற மூலப்பொருள்கள் பயன் படுத்தி காளான் உற்பத்தி செய்யலாம்.

**மரத்தூசு பயன்படுத்தி செய்யும் முறை:-**

தேவையான பொருள்கள்
100 KG மரத்தூசு
10 KG தவிடு
1 KG கடலைமாவு
2 KG CaCO3
200 G MgSO4



**செய்முறை:-** தொற்றுநீக்கப்பட்ட இடத்தில் மரத்தூசு, தவிடு, கடலைமாவு, CaCO3 என்பவற்றை ஒன்றின்பின் ஒன்றாக சேர்த்து பின் MgSO4 இனை நீருடன் கலந்து கலவையில் ஊற்றி கலக்க வேண்டும். கலவையின் ஈரப்பதன்மையினால் பிடிக்கும் போது பிடிபடக்கூடிய அளவிற்கு இருத்தல் வேண்டும்.

கலவையினை தயாரித்த பின் கலவையினை 200 gauge பொலித்தின் பையினுள் இடுதல் வேண்டும். (7' x 13' = 500g) பின் பொலித்தீன் பையின் வாய் பகுதியிற்கு PVC குழாய் (1' x 12') வைத்து அதனை Rubber band ஆல் இறுக்கமாக கட்ட வேண்டும். அதன் பின் அத்துவாரத்தினை தூய்மையான பஞ்சினால் அடைக்கவும் பொதி செய்யப்பட்ட பையினை Barrel ஒன்றில் வைத்து தொற்று நீக்கல் வேண்டும். (Barrel இன் அடியில் இருந்து 9' உயரத்திற்கு பொதி வைக்க வேண்டும் 6' உயரத்திற்கு நீர் ஊற்ற வேண்டும்.)

தொற்று நீக்கிய பின் வித்திகளை இடல் வேண்டும். தொற்றுநீக்கப்பட்ட மற்றும் அறை வெப்பநிலையில் வித்திகள் இடப்பட வேண்டும். (10 - 15 வித்தி / 01பை) பின் பஞ்சினால் மூடி 70 - 80J ஈரப்பதன் இல் பேண வேண்டும். 21 - 25 நாள்களில் கனிய உடலம் அரும்பியிக்கும் இடத்திற்கு அண்மையில் பென்சிலினால் துளையிடல் வேண்டும்.

**பாரமரிப்பு நடவடிக்கை:-**

* இருநாள் இடைவெளியில் நீர் தெளித்தல்



* காளானினை தூய்மையான கூரான கத்தியினால் அறுவடை செய்ய வேண்டும்
* வைக்கோலினை பயன் படுதல்

வைக்கோலினை 2% சுண்ணாம்பு நீரில் ஊற வைத்த பரல் ஒன்றில் இட்டு 6 மணித்தியாலங்கள் அவித்து தொற்று நீக்கம் செய்து நிழலில் உலர்த்தி எடுத்தல். ஈரலிப்பு 60 - 65 % இல் பொதி செய்தல் மற்றும் வளர்ச்சி பராமரிப்பு மேற்குறிப்பிட்டவாறு செய்தல் வேண்டும்.

அறுவடை செய்த காளானை 10 - 12 மணித்தியாலம் அறை வெப்ப நிலையிலும், குளிரூட்டியில் 2 - 3 நாள்களும், உலர்த்திய காளன் எனின் 1 - 2 வருடமும் பேண முடியும்.

### இப்போதைய சூழலில் தேவையான

# மண்புழு வளர்ப்பு



மண்புழு வளர்க்க மேட்டுப்பாங்கான இடத்தைத் தெரிவு செய்ய வேண்டும். ஏனென்றால் நீர் தேங்கினால் புழுக்கள் இறந்துவிடும்.

மழைநீர் அடித்துச் செல்லாத இடமாகவும் இருக்க வேண்டும். மண்புழுப் படுகைக்கு மேல் கட்டாயம் நிழல் வேண்டும். வெயிலில் புழுக்கள் இருக்காது. எனவே, கூரையோ பந்தலோ அமைக்க வேண்டும். மர நிழலாவது இருக்க வேண்டும்.

தாவரக் கழிவுகள், கால்நடைக் கழிவுகள் அருகிலேயே கிடைக்கும் இடமாகவும் இருக்க வேண்டும். விற்பனைக்காக, பயன்பாட்டுக்காகப் போக்குவரத்து வசதி இருக்கும் இடமாகத் தெரிவு செய்துகொள்ள வேண்டும்.



கோழி, பெருச்சாளி, காட்டுப் பன்றி போன்று மண் புழுக்களைத் தின்னும் உயிரினங்கள் பல உள்ளன.

அவற்றிடமிருந்து மண் புழுக்களைப் பாதுகாப்பது தான் மிகவும் முதன்மையான வேலை. எறும்புகள் நல்ல நிலையில் உள்ள புழுக்களைத் தாக்குவதில்லை. காயம் பட்டால் தாக்கித் தின்கின்றன. இதற்கு மஞ்சள் தூளைத் தூவி வைத்தால் நல்ல பலன் கிடைக்கும்.

சில இடங்களில் பிள்ளைப்பூச்சிகள் தொல்லை தருகின்றன. இதற்குச் சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்வது நல்லது. எக்காரணம் கொண்டும் பூச்சிக்கொல்லிகளையோ வேதி உப்புக்களையோ பயன்படுத்தக் கூடாது.

மூன்றடிக்கு மூன்றடியில் நன்கு வளர்ந்த நிலையிலுள்ள 70 மண்புழுக்கள் வாழ முடியும். ஆனால், பொதுவாக 10 - 15 என்ற எண்ணிக்கையில்தான் உள்ளன. இந்த எண்ணிக்கையைக் கூட்டினால் மண் வளம் பெறும். மழைக்காலத்தில் இவற்றின் எண்ணிக்கை பெருகும். கோடையில் குறையும். நல்ல உணவும் குளிர்ச்சியான சூழலும் இருக்குபோது, மண்புழுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

மண்புழுக்கள் இருபாலினத்தவை. ஒரே நேரத்தில் இணையும் இந்தப் புழுக்கள், ஒன்றின் உடலின் மீது இன்னொன்றாக விந்துவை உட்செலுத்துகின்றன. ஒவ்வொரு புழுவும் ஒன்று அதற்கு மேற்பட்ட கூட்டுமுட்டைகளை (கக்கூன்) இடுகின்றன. இவற்றின் உள்ளே முட்டைகள் இருக்கும். இவை முதிர்ந்து புழுக்களாக வெளிவரும். ஏறத்தாழ ஒரு வளர்ந்த புழு 10 முதல் 15 முறை முட்டைகளை இடுகிறது.

மண்புழுக்களின் வாழ்நாள் எவ்வளவு என்று இன்னும் அறுதியிட்டுச் சொல்ல முடியவில்லை. ஆனால், சில ஆய்வாளர்கள் இதன் ஆயுள் காலம் மூன்று ஆண்டுகள் இருக்கலாம் என்று கூறுகின்றனர். பெட்டி முறையில் வளர்த்த ஒருவர் ஒரு புழுவின் வாழ்நாள் 10 ஆண்டுகள் இருந்ததாகக் கணக்கிட்டுள்ளார். மண்புழுக்கள் மக்கிய பொருள்களோடு நுண்ணுயிர்களையும் உண்ணுகின்றன. மண்புழுக்கள் மக்கும் பொருள்களை விழுங்கி உள்ளே தள்ளுகின்றன. இதன் தலைப்பகுதியில் உள்ள தடித்த தசை மூலம் அரைக்கின்றன.

இனிவரும் காலத்தில் இயற்கை வேளாண்மைதான் நிலைக்க முடியும். இதற்கு அடிப்படையான மண்புழு உரம் உருவாக்குதல், மண்புழு வளர்த்தல் இரண்டையும் நம்மால் செய்ய முடியும். நிலம் உள்ளவர்கள் தமது பண்ணையில் பயன்படுத்தலாம். மற்றவர்கள் பிற பண்ணையாளர்களுக்கு மண்புழுக் கழிவான உரத்தை வழங்கி ஒரு தொழிலாகவும் செய்யலாம்.



# கல்விக்கதிர்



# ஈழத்துச் சித்தர்கள்

சித்தில் வல்லவர் சித்தர் என்பது பண்டைய தமிழ் மக்களின் பாங்கான வாய்மொழி. சித்து என்பதற்கு அறிவு என்றும் ஒருபொருள் உண்டு. எனவே சித்தர்கள் என்பவர்கள் அறிவுடையார், புத்திஜீவிகள் என்றும் தற்காலத்தில் நாம் எடுத்துக் கொள்ளலாம். ஆயினும் ஈழத்திலும், தமிழகத்திலும் சித்தர்கள் பலதர அறிவு சார்ந்த விடயங்களிலும், யோகமார்க்கத்திலும் வல்லவராயிருந்து வந்தனர்.

பலதுறைகளிலும் கவனம் செலுத்திய தமிழ்ச் சித்தர்கள் வைத்தியத் துறையிலும் ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டனர். சித்தர்கள் சத்திர சிகிச்சை முறை, மூலிகைத் தயாரிப்பு, தாவரவியல் என பலதரப்பட்ட விடயங்களிலும் தமது ஆற்றலைப் பல்லாயிரம் ஆண்டுகளாகக் காட்டியுள்ளனர்.

குறிப்பாக ஈழத்தில் சித்தவைத்திய முறையானது ஆங்கிலேய வைத்தியங்களுக்குச் சமமாக அன்றைக்காலம் வரை கடைப்பிடித்து வரப்பட்டுள்ளது. மேலும் சித்தர்கள் சாதிமதங்கள், ஆசாரக் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டு பண்டைய காலத்தில் புத்திஜிவிவர்க்கமாகவே இருந்து வந்தனர்.

சித்தர்களின் குறிக்கோள் உடலைத் திடமாக வைத்து நீண்டகாலம் வாழ்வது எப்படி என்று ஆராய்வதும் அதனை அனைவருக்கும் பகிர்வதேயாகும். இவை பற்றிய பல்வேறு குறிப்புக்களையும் பாமர மக்களுக்குத் தந்தனர். இவற்றையே ஈழத் தமிழர் பிரதானமாக சித்தவைத்தியம் என்பர்.

ஈழத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கடையிற் சுவாமி, ஆனைக்குட்டிச் சுவாமி, பரமகுருசுவாமி எனும் மூன்று சித்தர்கள் மக்களிடையே கலந்தனர். இவர்கள் ஏறத்தாழ நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்தவர்கள்.

கடையிற் சுவாமிகள் - இந்த சித்தர் தென்னிந்தியாவில் இருந்து யாழ்ப்பாணம் வந்தவர் எனக் கருதப்படுகிறது. இவரது பேச்சு மொழி தெலுங்கு அல்லது கன்னடமாக இருந்திருக்கலாம், இவரது தோற்றத்தைக் கண்டாலே கடைவைத்திருப்பவர்கள் நல்ல சகுனமாக எண்ணி அவருக்குச் சிறு காணிக்கைகளைக் கொடுத்து மதித்து வாழ்ந்துள்ளனர். ஆயினும் அவர் யாழ்ப்பாண நகரப் பெரிய கடை எனும் சந்தைப் பகுதியில் வாழ்ந்ததால் இவர் கடையிற் சுவாமி என அழைக்கப்பட்டார். கடையிற் சுவாமிகள் பல சித்துக்களையும் மக்களுக்காகச் செய்தார். இந்த சித்தர் கைக்கமக்கட்டில் கறுப்புக் குடையும், கறுப்பு ஆடையும் அணிந்து உலவிவந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. சித்தர் கடையிற் சுவாமிகள் இறைபதம் அடைந்த சமாதி யாழ்ப்பாண வண்ணை நீராவியடியில் காணப்படுகிறது.

கடையிற் சுவாமிகளுக்குச் சீடராக குழந்தைவேலுச்சுவாமிகள், வைரமுத்துச் செட்டியார், சின்னச் சுவாமி, நன்னையார், சடைவரதர், செல்லப்பாச் சுவாமி, சார்ஷன் சுவாமி எனப் பலரும் இருந்தனர்.

சார்ன் சுவாமிகள் - யாழ்ப்பாணம் கந்தர்மடம் வேதாந்த மடத்தைத் தாபித்தார்.

வைரமுத்துச் செட்டியார் - சித்தர் சின்னச் சுவாமிகள் சமாதியையும், நல்லூர் நாவலர் வீதியில் உள்ள அன்ன சத்திரம் உள்ள காணியையும் தானமாக ஈழமக்களுக்குத் தந்தார்.

நன்னையார் சித்தர் - இவர் யாழ்ப்பாணக்கடல் மண்டைதீவைச் சேர்ந்தவர்.

குழந்தை வேலுச்சுவாமிகள் - தமது உயர்பதவிகளை அரசிலிருந்து துறந்து சமயப் பணியில் தம்மிறுதி வாழ்வைச் செலவழித்து வலிகாமம் வடக்கு கீரிமலையில் சமாதியானார்.

சடைவரதர் - இந்தச் சித்தரின் சீடர்கள் யாழ் குடாநாட்டின் வடக்கில் ஏழாலையிலும், யாழ்ப்பாணக் குடாநாட்டை எஞ்சிய ஈழநாட்டு நிலப்பரப்புடன் தொடக்கம் மிருசுவில் கிராமத்தின் உசன் பகுதியிலும் அன்னதான மடங்களை உருவாக்கினர்.

ஆனைக்குட்டிச் சுவாமிகள் - ஈழத்தில் ஆங்கிலேயத் தலைநகராக்கப்பட்ட கொழும்பில் சஞ்சரித்த சித்தர் இவர். இவரை 19ம் நூற்றாண்டுத் தமிழ்த்தலைவர்கள் சேர். பொன். அருணாசலம், மற்றும் கொழும்பு வாழ் தமிழ் வர்த்தகர் சமூகமும் மிகவும் போற்றிக் காத்து வந்தனர். ஆனைக்குட்டிச் சுவாமிகள் சமாதி கொழும்பு முகத்துவாரத்தில் உள்ளது.

ஆனைக்குட்டிச் சுவாமிகளின் ஒரேயோரு சீடராக ஒரு பெண்மணியை மாத்திரம் தான் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். மொட்டாச்சி அம்மையார் என்பவரே அவர். ஈழநாட்டின் வடமேற்குப் பாகமாகிய மன்னார், மாந்தை பாலாவிக்கரையோர திருக்கேதீச்சரத்தில் குடில் அமைந்து வாழ்ந்துள்ளார்.

# வாழ்க்கையின் ஏணிப்படிகள்



இந்த உலகிலேயே நமக்கு கெடுதல் நினைக்காமல் எப்பொழுதுமே நாம் நன்றாக வாழ வேண்டும் என்று நினைக்கின்றவர்கள் பெற்றோர். கடவுள் எல்லா இடங்களிலும் தானே இருக்க முடியாது என்பதற்காகத்தான் பெற்றோர்களை படைத்தான். ஒரு தாய் ஈரைந்து மாதங்கள் தனது பிள்ளையை இன்னல்களைத் தாங்கிக்கொண்டு இன்பமாக சுமக்கிறாள். உணவிலிருந்து உறக்கம் வரை குழந்தைக்காகவே தனது விருப்பங்களை கூட புறக்கணித்துவிட்டு வாழ்கிறாள். ஒரு பெண் தனது குழந்தையை ஈன்றெடுக்கும் பொழுது தாங்குகின்ற வேதனையானது சராசரியாக ஒரு மனிதன் தாங்குகின்ற வலியை விட அதிகமாகும்.

## நல்ல தந்தை

ஒரு நல்ல தந்தை ஆயிரம் ஆசிரியர்களுக்கு சமமானவர். நாம் வாழும் சமூகத்திற்கு ஒரு நல்ல மனிதன் கிடைத்திருக்கிறான் என்றால் அவனுக்கு பின்னால் ஒரு பொறுப்பு மிக்க தந்தையின் உழைப்பும் தியாகமும் இருக்கிறது என்று அர்த்தம். ஒரு தாய் தன் குழந்தை தன்னுடனேயே இருக்க வேண்டும் என்கின்ற அன்பின் உச்சத்தில் அதனை இடுப்பில் கெட்டியாக சுமக்கிறாள். ஆனால் தந்தையோ தன் குழந்தை தன்னைவிட உயர்ந்த நிலைக்கு சென்று விட வேண்டும் என்ற துடிப்போடு தன் தோள்களில் தூக்கி சுமக்கிறார். திருவிழாவில் சுவாமியைப் பார்க்க தன் அப்பாவின் தோள்கள் மீது ஏறி இருக்கும் குழந்தைகளுக்கு தெரியாது தான் உண்மையிலேயே சுவாமியின் தோள்கள் மீது தான் ஏறி இருக்கிறோமென்று. ஒரு தந்தை தனது குழந்தைக்கு நல்லதொரு வாழ்வு அமையும் வரை படுகின்ற அவமானங்களும் வேதனைகளும் சொல்லிமாளாது. ஆனால் அத்தனையையும் பொறுத்துக் கொண்டு தன் பிள்ளை நன்றாக இருக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக தன்மானத்தை கூட தூக்கியெறிபவர்தான் தந்தை.

## பெற்றோருக்கு அவமானம்

ஏறத்தாழ 20 வருடங்களுக்கு மேல் தான் படுகின்ற கஷ்டங்களை ஒரு துளி கூட வெளிப்படுத்தாமல் குழந்தைகளுக்காகவே வாழ்ந்து வலிகளை சுமந்து கொண்டிருக்கின்ற பெற்றோர்களை 20 நாள்களில் பழகிய ஒரு ஆணுக்காகவோ அல்லது பெண்ணுக்காகவோ தூக்கி எறிகிறோம் காதல் என்ற பெயரால். அந்த இடத்தில் நமது பெற்றோர்களின் ஆசை, எதிர்பார்ப்பு, மரியாதை இவற்றையெல்லாம் விட நமது ஆசை மேலோங்குகிறது. எந்த விளைவுகளை பற்றியும் சிந்திக்காமல் நாம் எடுக்கின்ற முடிவானது நம் வாழ்க்கையையும் நரகமாக்கி நம் பெற்றோருக்கு பெருத்த அவமானத்தை ஏற்படுத்துகிறது. தெருவெல்லாம் சிரித்த முகத்தோடு கம்பீரமாக நடந்து வந்த நம் தந்தை சிரிப்பை தொலைத்துவிட்டு கறுத்த முகத்தோடும் கனத்த இதயத்தோடும் நடைப்பிணமாக வாழ்க்கையை தொடர்வது என்பது வேதனையான விடயம்.

## பெற்றோரின் பாசம்

பிறந்தது முதல் இப்பொழுது வரை நமது விருப்பங்களை எல்லாம் நிறைவேற்றி கொண்டும் நமக்கு நல்லதை மட்டும் எண்ணுகின்ற பெற்றோர்களா நமக்குத் தீங்கு நினைப்பார்கள்? நமக்கு காதலர் தினம் நினைவிருக்கிறது. அன்னையர் தினம் மறந்து விடுகிறது. சமீபத்தில் ஒரு புதிய திரைப்படம் பார்த்தேன். ஒருவர் தன் அம்மாவின் அறுவைச் சிகிச்சைக்கு வைத்திருந்த பணத்தை கொண்டு வந்து டிக்கெட் வாங்க வந்தேன் ஆனால் டிக்கெட் கிடைக்கவில்லை என்று மிகவும் வருத்தப்பட்டார். இவர்களை எல்லாம் எவ்வாறு திருத்த முடியும். செய்கின்ற செயல்களால் பெற்றோருக்கு எந்த சூழ்நிலையிலும் அவர்கள் பணிபுரிகின்ற இடத்திலும் வாழ்கின்ற சமுதாயத்திலும் தலைகுனிவு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது பிள்ளைகளின் தலையாய கடமை.

## மனம் விட்டுப் பேச வேண்டும்

பெற்றோர்களிடம் மனம் விட்டுப் பேச வேண்டும். சரியான செயல்களையே செய்ய வேண்டும். பெற்றோர்களை காயப்படுத்துவது என்பது பாவச்செயல். இது ஒரு புறமிருக்க இன்னும் சில நபர்கள் திருமணம் முடிந்த பின்பு தனது பெற்றோர்களை பேணிக் காக்காமல் அவர்களை தனியாக தவிக்க விட்டு செல்கின்றனர். நம்மைப் பார்த்து பார்த்து வளர்த்த பெற்றோர்களை திருமணத்திற்குப் பின்பு ஏறெடுத்து பார்ப்பதற்கும் யோசிக்கின்ற பிள்ளைகளும் உண்டு. அவர்களிடம் மனம் விட்டு பேசுவதும் இல்லை அவர்களுக்காக நேரம் செலவழிப்பதில்லை. அவர்களது தேவைகளை கூட பூர்த்தி செய்வதில்லை. இன்னும் சிலர் பெற்றோர் செலவுக்கு பணம் மட்டும் கொடுத்து விட்டால் போதும் என்று நினைக்கிறார்கள். பணத்தால் நாயை மட்டும் தான் விலைக்கு வாங்க முடியும் பாசத்தால் தான் அதன் வாலை ஆட்ட வைக்க முடியும்.

## ஊதியமில்லா ஊழியர்கள்

வயதான காலத்தில் எத்தனையோ பெற்றோர் பிள்ளைகளின் வீட்டில் ஊதியமில்லா ஊழியர்களாக பணி புரிகிறார்கள். இன்னும் சில பிள்ளைகள் தனது பெற்றோர்களை முதியோர் இல்லத்தில் சேர்த்துவிட்டு சாதனை செய்தது போல் உணர்கிறார்கள். எல்லாரது இதயத்திலும் தாங்க முடியாத ரணத்தை இந்த தந்தையின் கவிதை ஏற்படுத்தும் என்பதில் ஐயமே இல்லை. "குழந்தை பருவத்தில் உன்னை மீட்டெடுக்க வழியின்றி அறுவை சிகிச்சைக்காக முதன் முதலாக நகையை விற்றேன்... முதலிடத்தில் உள்ள பள்ளியில் உன்னை முதல் வகுப்பில் சேர்ப்பதற்கு நன்கொடை கட்டமுடியாமல் பரம்பரைச் சொத்தான நிலத்தை விற்றேன்...அடுத்தடுத்த வகுப்புகளுக்கு ஆடுகளை விற்றேன்... மேல்நிலை படிப்புகளுக்கு மாடுகளை விற்றேன்... உன்னுடைய சுற்றுலா செலவுகளுக்கு என்னை சுற்றி இருந்த பொருள்களை எல்லாம் விற்றேன்...உன் பயணச் செலவுக்காக பல சமயம் என் பசியை விற்றேன்... தேர்வு நாள்களில் உனக்கு தேனீர் கொடுக்கவே என் தூக்கத்தை விற்றேன்... கடைசியில் உன் கல்லூரி படிப்புக்காக நான் ஆசைப்பட்டு கட்டிய வீட்டையும் விற்றேன்... படித்தாய்... வளர்ந்தாய்... உயர்ந்தாய்... வாங்கினாய் மீண்டும் எல்லாவற்றையுமே... இன்று நீ இருப்பதோ மூன்றடுக்கு இல்லத்தில்...ஆனால் நான் இருப்பதோ முதியோர் இல்லத்தில்... எல்லாம் விற்றும் என்னிடம் இருந்தது இதயம்...! எல்லாமே பெற்றும் உன்னிடம் இல்லாமல் போனது இதயம்...!"

## அன்பு செலுத்துங்கள்

பெற்றோர்கள் ரோஜா செடிகளை போல தனக்காக முள்களையும் பிள்ளைகளுக்காக மலர்களையும் விட்டுச் செல்வார்கள். பெற்றோர்களிடம் அன்பு செலுத்துங்கள். அக்கறை காட்டுங்கள். நேசியுங்கள் .அவர்களுடனே நேரத்தை செலவழியுங்கள். அவர்கள் பேச்சுக்கு அங்கீகாரம் அளியுங்கள். வாழும் போதே சொர்க்கம் என்ற வாய்ப்பு நமக்குக் கிடைத்துவிடும்

**றொசில்டா அன்டோ- திருகோணமலை**

# நினைவில்...

வழமைக்கு மாறாக அந்த மாமரத்துக் குயில் அதிகாலை 4 மணிக்கே கூவ ஆரம்பித்துவிட்டது. நித்திரை குழம்பிப்போனது. இன்னும் கொஞ்சநேரம் தூங்கியிருக்கலாம் 05 மணிக்குத்தான் அலாரம் அடிக்கும். ஆனால் இந்த ஒருமணி நேரத்துக்கு என்ன தான் செய்வது. இறுகக் கண்ணை மூடினாலும் நித்திரை வரும் போல இல்லை. ஆனாலும் முரளி கண்களை மூடிக்கொண்டான். அருகே படுத்திருந்த மனைவியைத் திரும்பிப் பார்த்தான். அவள் இவருக்கு முதுகைக் காட்டியவாறு படுத்திருந்தாள். கட்டிலின் முக்கால்பகுதி அவளுக்கே போதுமாகிப் போனது. ஒருக்கழித்துப் படுத்த முரளி தலைக்குள் தன் இரு கைகளையும் முட்டுக் கொடுத்துக் கொண்டான். இருள் முடியாத மங்கல் வெளிச்சமும் பிறைச் சந்திரனின் அந்த ஒளியும் இணைந்து விடியப்போகும் பொழுதை விளக்கிக் காட்டி நின்றன.

விடிந்ததும் முரளி யாழ்ப்பாணம் கச்சேரிவரை போக வேண்டி இருந்தது. புதிதாக வாங்கிய காருக் கான சில ஆவணங்களும் வாகன சாரதி அனுமதிப் பத்திரம் காலாவதியானதால் அதனை மீளப் புதுப்பிக்க வேண்டிய தேவையும் அதுசார்ந்த வேலைகளும் இருந்தன. எப்படியும் கலை 9 மணிக்கெல்லம் கச்சேரி வளாகத்தில் நின்று விட வேண்டும் என்கிற நினைப்புடனும் மீண்டும் உறங்கிப் போனான். மனைவியின் குரல்கேட்டு அவன் மெல்ல கண்களை விழித்தான். ஏய் யோகமலர் நீ நேற்றும் முந்தாநாளும் வேலைக்கு வரேல்ல. உன்னை நான் என்ன சொல்லியிருக்கிறன். நீ வரேலாட்டி யாரையாவது அனுப்ப வேண்டுமெண்டு. எனக்குத் தனிய வேலை செய்ய முடியுமோடி. இனி நீ இப்படிச் செஞ்சியெண்டா இனி நீ வரவேண்டாம். சரியோ. சரி போ போய் அங்க குசினியைப் பாரு. எல்லாம் அப்படியே கிடக்குது. சரி அதுக்கு முதல் எனக்கும் இவருக்கும் ஒரு பால் தேத்தண்ணி போட்டுக் கொண்டு வா என்று கூறிய வளாய் முன் கூடத்து மெத்தைக் கதிரையில் அமர்ந்து கொண்டு கால்கள் இரண்டையும் மேலெடுத்து வைத்துக் கொண்டு மீதி நித்திரையைத் தூங்க ஆரம்பித்தாள். மனைவி லிங்கேஸ்வரியின் இந்தக் காட்டுக்கத்தல் கேட்டு கண் விழித்த முரளி எழுந்து தனது சாரனை வடிவாகக் கட்டிக் கொண்டு முன்பக்கம் வந்தான். தேநீரோடு வந்த யோகமலர் அண்ணா ரீ இந்தாங்கோ. அக்கா இந்தாங்கோ ரீ என அவரவருக்குரிய கோப்பை களை அவரவர் இருக்கைக்கு அருகில் மேசை மீது வைத்து விட்டு தனது அடுத்த வேலைக்கான நகர்வாக சமையலறை நோக்கி நடந்தாள்.

இங்கே இருவர் பற்றியும் சொல்லி ஆகவேண்டும். முரளி நடுத்தர வயதினை எட்டிப்பிடிக்கும் ஆண்மகன். இந்தப் பங்குனிவந்தால் ஐம்பது வயது முடிந்து ஐம்பத்தொன்றில் அடியெடுத்து வைக்கப்போகிறான். நண்பர்கள் எல்லாம் முரளியின் பிறந்ததினத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். முரளி வீட்டுக்கு இரண்டாவது ஆண்பிள்ளை. கிளிநொச்சி விவசாய பீடத்தில் தனது பட்டத்தை முடித்து விரும்பியோ விரும்பாமலோ தாய் தந்தையரின் வற்புறுத்தலில் ஊரை விட்டு இல்லை இல்லை நாட்டை விட்டு நாடு சென்று ஐந்து வருடங்களின் பின் நாடு திரும்பி பெற்றோர்கள் பார்த்து வைத்த பெண் லிங்கேஸ்வரியை மணம் புரிந்து இன்று பதினெட்டு வருடங்கள் பூர்த்தியாகி விட்டன. செல்வாக்கான குடும்பம். வந்தவளும் கொண்டு வர படித்த படிப்பை வைத்து யாழ்ப்பாணத்தில் அது சார்பன வியாபாரம் ஒன்றினையும் ஆரம்பித்து விட்டான். அருமைக்கு ஒரு பெண்பிள்ளை பெருமைக்கு ஒரு ஆண்பிள்ளை என இரண்டு பிள்ளைகள் முரளிக்கு. இனி இவள் லிங்கேஸ்வரி O/L ஓட படிப்பை முடித்துக் கொண்டாள். பெற்றவருக்கு ஒரு மகள். செல்வத்துக்குக் குறைவில்லை. தாமோதரம் (லிங்கேஸ்வரியின் தநதை) எங்கோ ஒரு குடும்ப விழா வில் முரளி அவர் கண்ணில்பட, விசாரித்ததில் தூரத்து உறவாகிப்போக கொழுத்த சீதனத்தோடு வரன் கேட்டார். யுத்த காலச்சூழ் நிலையில் பொருளாதாரத்தில் நொந்து போயிருந்த வைரவநாதனுக்கு (முரளியின் தந்தை) சம்பந்தம் பிடித்ததற்கு மேலாக அவர் தரும் சீதனம் தேவையாகிப் போக முரளி அந்த இடத்தில் அடமானப் பொருளாகி லிங்கேஸ்வரியின் கழுத்தில் தாலியைக் கட்ட வேண்டியதானது. காலமும் ஓடிப்போனது. லிங்கேஸ்வரி ஒன்றும் அடங்காப்பிடாரி என்று சொல்லி விட முடியாது. ஆனால் ஆணவக்காரி. பணத் திமிரும் கூட. O/L மேல் படிப்பு ஏற மறுத்துவிட செல்வம்களை எந்தத் தொந்தரவும் செய்யாமல் வீட்டில் வைத்து எந்தக் குறையுமின்றிப் பார்த்துக் கொண்டார் தாமோதரம். கணவருக்குக் கொடுக்க வேண்டிய மரியாதைகள் லிங்கேஸ்வரியால் கொடுக்கப்பட்ட போதும் அவர்களுக்குள் ஒன்றும் அன்னியோன்னியம் இல்லை. சைக்கிள் சக்கரத்தில் அதன் சங்கிலி எப்படி சுற்றினால் சைக்கிள் ஓடுமோ அதன் கட்டாயத்தில் தான் இவர்களது தாம்பத்தியமும் சுற்றுகின்றது.

முரளி ஆயத்தமானான். லிங்கேஸ்வரியின் குரல் ஒலித்தது. இஞ்சருமப்பா... வரும்போது நான் சாமான் வாங்குற கடையில சாமான்கள் கட்டி வைச்சிருப்பான்கள். மறக்காமல் எடுத்துக் கொண்டு வாங்கோ. நான் காசு கொடுத்தாச்சு மறந்துடாதையுங்கோ என அவள் வாசல்வரை வந்து கூவிவிட்டுப் போனாள்.



சரி, சரி சும்மா கார் எடுக்கும் போது ஏனப்பா கூப்பிடுறீர். முன்னமே சொல்லியிருக்கலாமல்லோ. எப்பவும் நீர் இப்படித்தான் எனக் கூறிக் கொண்டவனின் கார் உறுமிக் கொண்டு வாசலைத் தாண்டியது.

மதிவதனி இராஜசேகரன்
(B.A, IHD in Law)

கச்சேரி மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. வாசலில் போவோர் வருவோரின் தொகை அதிகமாகக் காணப்பட்டது. Lockdown எடுத்து சிலநாள்கள் ஆகி விட்டிருந்தன. பண்டிகைக் காலம் வேற ஆரம்பமாக இருந்தது. சனப்புழக்கம் மிக அதிகமென்றே சொல்லலாம். முரளி தனது காரினை இடம் தேடி நிறுத்திக் கொண்டு தனது ஆவணங்கள் அடங்கிய அந்தத் தோல் பையை எடுத்துக் கொண்டு விறுவிறுவென உள் நுழைந்தான். குறிப்பிட்ட பகுதிக்குள் நுழைந்தவன் எதிர்பாராமல் அவளைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. கடந்து செல்லும்போது தற்செயலாக முரளியும் அவளைப் பார்க்க அவளும் அவனைப் பார்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. முரளி அவளைக் கண்ணுற்றதும் சிறிது குழம்பித்தான் போனான். இது மாலதியா? இல்லை வேறு யாருமா? அவளைப் போலவும் உள்ளது. என மறுமுறை அவளை நோக்கிப் பார்த்தான். அவளும் பார்த்தாளோ என்னமோ அவளே பேச வாயெடுத்தாள் ஹலோ... நீங்கள் முரளி தானே. ஓம் நீங்க.. நீங்க மாலதியா? முரளியின் குரலும் பதிலுக்கு ஒலித்தது. ஓம் முரளி. மாலதிதான். என்ன பார்க்குறீங்க. எப்படி இருக்குறீங்கள். பார்த்துப் பல வருடங்களாகிட்டுது என்ன? என்றவளின் குரலிலும் அவளைப் பார்த்த திகைப்பிலும் முரளியால் உடனே பேச முடியவில்லை. ஓம்... என்ன... என்ன கேட்டனீர் ஓம் நல்லா இருக்கிறன். நீர் என்ன செய்யுறீர்? இஞ்ச எங்க? உம்மைக் காணுவன் என்று நினைக்கவில்லை நான் முரளி அதிசயம். அத்துடன் அவனைக் கண்ட திகைப்பு மேலிட பதில் கூறிக் கொண்டிருந்தான்... ஓம் மாலதி. நீ எங்கே இஞ்ச? கொஞ்சம் பொறும் எனக் கூறிக் கொண்டு அவளோடு கூட நடந்தான் முரளி. நான் இஞ்ச Planning லதான் வேலை செய்யுறேன். உங்களைக் காணுவன் என்று நானும் நினைக்கவில்லை. எவ்வளவு காலமாகிப் போச்சு என்ன? எனக் கூறிக் கொண்டவள். நீங்க வேலை முடிச்சிட்டு வாங்கோ. பிறகு கதைக்கலாம் என்றவள் அவனது பதிலை வாங்கியபடி தட தடவென மாடிப்படி ஏற ஆரம்பித்தாள். முரளி இன்னும் அந்த சம்பவத்திலிருந்து விடுபடாதவனாக தனது வேலைக்குரிய இடத்தில் சென்று வரிசைக் கிரமத்தில் அமர்ந்து கொண்டான். சிந்தனைச் சிறகுகள் பின்னேக்கிப் பயணப் பட ஆரம்பித்தன.

முரளி அந்த வருடம் இறுதியாண்டு. கிளிநொச்சி விஞ்ஞான பீடம். 1996 ஆம் ஆண்டு மொத்த யாழ்ப்பாணமுமே இடம்பெயர்ந்து வன்னி நிலப்பரப்பில் தஞ்சம் கேட்டு வாழ்ந்து வந்தகாலம். யாழ். பல்கலைக்கழக முதலாமாண்டு மாணவர்களின் பரீட்சைகள் விவசாய பீடத்தில் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டதால் கிளிநொச்சி நகரில் மாணவர்கள் கூட்டம் கூட்டமாக அறை வாடகைக்கு எடுத்துத் தங்கியிருந்து பரீட்சைக்கு ஆயத்தமாகிய காலம். அங்குதான் முரளி - மாலதி இருவரும் சந்திக்கும் சந்தர்ப்பம் வாய்த்தது. தனது பல்கலைக்கழக படிப்பில் இறுதி வருடத்திலிருந்து முரளி தனது கைச் செலவுக்காக சில மாணவர்களுக்குப் பிரத்தியேக வகுப்பு எடுத்துக் கொண்டிருந்தான். மாலதி அந்த வீட்டில் தங்கிப் படித்துக் கொண்டிருந்தாள். முரளியும் மாலதியும் அந்த வீட்டில் அடிக்கடி சந்தித்துக் கொண்டாலும் முரளி அவளுக்கு கதை கொடுக்க எத்தனித்த போதெல்லாம் ஒரு வித கூச்ச சுபாவத்தில் விலகிய படியே இருந்தாள் மாலதி.

மாலதியின் இத்தகைய சில குணங்கள் முரளிக்கு மிகப்பிடித்திருந்தன. வித்தியாசமான அழகும் விபரிக்கமுடியாத ஓர் கவர்ச்சியும் அவளிடமிருந்தது. இது ஏனோ முரளிக்கு மிகப்பிடித்துத்தான் போனது. சில வார்த்தைகள் மட்டுமே முரளியோடு அவள் பேசுவாள். ஆனால் பேசாத வார்த்தைகளை அவள் கண்கள் எப்போதும் பேசிக் கொண்டிருப்பது அவனுக்கு மட்டுமே தெரியும். இருவர் மனதினுள்ளும் காதல் இருந்தது. ஆனால் மாலதி அதை ஒருபோதும் வாய் வழியே இதுவரை தெரிவித்தது இல்லை. அன்று எப்படியும் மாலதியிடம் காதலைச் சொல்லிவிட வேண்டும். அவளது பதிலையும் கேட்டுவிட வேண்டும் என நினைத்தவன் பின்னேரம் மாணவர்களது வகுப்பு முடிந்ததும் அவன் மாலதி இருக்கும் இடம்நோக்கி நடந்தான். அந்தக் கிழமை புதினப் பத்திரிகை ஒன்றினைப் புரட்டியபடி அமர்ந்திருந்த அவளை நெருங்கினான். அவனது காலடித்தடம் கேட்டு நிமிர்ந்தவள் சடாரென எழுந்து நின்று கொண்டாள். வாங்கோ... என்ன ஏதும் வேணுமோ? எனக் கேட்டவுடன் அவனோ ஓம் வேணும். நீர் உண்மை சொல்ல வேணும். சரியோ எனக் கூறிக் கொண்டு அவள் அருகே சென்று கரங்களை இறுகப் பற்றினான். சற்றும் எதிர்பாராத இந்நிகழ்வால் உடனே பதற்றப்பட்ட அவள் வெடுக்கென கரங்களைப் பறித்தவள் என்ன இது நீங்க ஓம் மாலதி கொஞ்சம் பொறும். நான் உம்மை விரும்புறன் சரியோ.. நீர் என்னை விரும்புறீர். எனக்குத் தெரியும். ஆனால் ஏனோ மறைக்குறீர். தைரியமாகச் சொல்லும் நீர் விரும்புறீர்தானே என்றான். மாலதியின் பார்வை நிலம் தாழ்ந்தது. உங்களுக்கென்ன விசரோ. எனக்கப்படி ஒண்டும் இல்லை. காதல், கீதல் என்று கேள்விப்பட்டால் வீட்டில் கொப்பர் கொலை பண்ணிப் போடுவார். நீங்கள் பேசாமல் போவியளே... என அடிக்கியவள் அவ்விடத்தை விட்டு நகர எத்தனித்தாள். சடாரென வழிமறித்தவன் நில்லும் என்று கூறிக் கொண்டு இப்போ சொல்லும் உண்மையை என அவளை இழுத்து அணைத்துக் கண்களில் முத்தமிட்டான். உடல் பதற, முகம் சிவக்க. கால்கள் தடுமாற அவனிடமிருந்து வெடுக் கென விலகியவள் அறைக்குள் போய் தாழிட்டுக் கொண்டாள். தள்ளிப்போன முரளி கதவில் தட்டியபடி சொன்னான் சரி நன் இப்பபோறன். ஆனால் உன் அப்பாவிடம் வந்து பெண் கேட்குறேன். நீ முதல்ல படிச்சு முடி சரியா என்றான் அப்படியே அவன் போனான். அன்று இரவு மாலதிக்கு விடியாத இரவாகியது. அவளுக்கு மட்டும் அந்தப் பகுதி மக்க ளுக்கே அந்த இரவு திகில் இரவாகிப்போனது. எறிகணை வீச்சு தாக்குதல்கள் அதிகமாக மீண்டும் மாலதி பெற்றோரோடு இணைந்து கொண்டாள். முரளியும் வெளிநாடுபோய்த் திரும்பி வந்து அவன் வாழ்வே திசை மாறித்தான் போனது.

அண்ணே அடுத்தது நீங்கள் தான் பியோனின் குரல் கேட்டு நிஜம் திரும்பினான் அவன். ஆனாலும் மனதில் நிறைந்தவளை மனங்கொள்ளை கொண்டவளை இன்று சந்திக்க நேர்ந்ததில் சந்தோஷம் ஒருபாதியும் அவள் எங்கென்று தெரியாத சூழலில் தான் திருமணம் செய்ததை ஓர்முறை அசைபோட்டான். மாலதியின் நினைவு இனித்தது. கனவாகிப்போன நினைவுகள் நினைவில் மீட்டின. மாலதி பெற்றோரின் பேச்சுத் திருமணத்தில் குமாரை மண முடித்து மகவிரண்டையும் பெற்று வாகன விபத்தொன்றில் கணவனை இழந்து இன்று கைம்பெண்ணாக அரச நிறுவனத்தில் வேலை பார்க்கின்றாள். கணவனை நினைத்து வைத்த குங்குமத்தை விட்டு ஸ்டிக்கர் பொட்டின் அலங்காரத்தில் அலுவலகம் சென்று வரும் அவள் அவலம் தெரியாதவனாக தன் மனதுக்கினிய மாலதியைச் சந்தித்து விவரம் கூறி அவள் பற்றி அறிய வேண்டுமென மனம் நிறைந்த மகிழ்வோடு தனது வேலையில் தீவிரமானான் முரளி.

◇◇◇◇◇◇◇◇

# குயில் கூடு

பாகம் 02

**மதிவதனி இராஜசேகரன்**
**(B.A, IHD in Law)**

நிர்மலாவின் விம்மல் மெதுவாக அழுகையாக உடைந்து சிறு விக்கலோடு தொடர்ந்தது. மனைவியின் தோள்களைப் பிடித்து தன்பக்கம் திருப்பிய அலெக்ஸ்... நிம்மி ஏய் நிம்மி இஞ்ச பாருமப்பா... என்ன இது குழந்தைப் பிள்ளைபோல அழுகை. இப்ப என்னப்பா.. நடந்தது.. ஏய் இஞ்ச என்னை நிமிர்ந்து



பாரடி .. எனச் செல்லக் கோபத்தைக் காட்டியவனாய் அவளைக் கடிந்து கொண்டான். மெதுவாக கண்களைத் துடைத்துக் கொண்டவள் சரி விடுங்கோப்பா ஏதோ நினைப்பில் கண்கலங்கிட்டன். எனச் சொல்லிக் கொண்டு அவன் பிடியிலிருந்து விடுபட முயற்சித்தாள். அதெல்லாம் சரி. நீ எதுக்கு அழுதனீ என்று தெரியாது என்று நினைச்சியோ. எல்லாம் தெரியுமப்பா. இந்தக் கிழமை நாம டொக்டர்.. சிறிதரனைப் பார்க்க வேணும் தானே.. என்றான். தன் அழுகையின் துடிப்பு தன் கணவனின் பதிலில் பிரதிபலித்தது அவளது மனதில் அவன்மேல் கொண்ட காதலை மேலும் அதிகரித்த தோடு பெருமிதமும் பட வைத்தது. அவனது அணைப் பின் இதம் இந்த அழுகைக்குத் தேவைப்பட்ட போதும் அவனிடமிருந்து மெதுவாகத் தன்னை விடு வித்துக் கொள்வதில் முனைப்பானாள்... சரி விடுங்கோப்பா... 'நடு ஹோல்' ல கட்டிப்பிடிச்சுக் கொண்டு நிற்குறியள்.. என வெக்கச் சிரிப்பில் விரிந்த விழிகளில் காதலைத் தேக்க கணவனைப் பார்த்தாள்... அலெக்ஸ்... வாயிலிருந்து கிண்டலும் கேலியுமாக அப்பதில் வந்தது. ஓ... அதுவும் அப்படியோ... அது சரி யார் என்னைக் கேட்குறது. என்ர பெண்சாதியை நான் கட்டிப்பிடிப்பன் முத்தமும் கொடுப்பன். யார் கேட்பினமாம்.... என்று கூறியபடி அவளைத் தன் வலிய கரங்கொண்டு இறுக அணைத்தது மட்டுமல்ல முத்தமிடவும் எத்தனித்தான். அவனிடமிருந்து சட்டென விலகி எட்டிப் பாய்ந்து அவள் ஓம் ஓம் குழந்தையில்லா வீட்டில் கிழவன் துள்ளி விளையாடுறாராம் என்று கூறிக் கொண்டு சமையலறை நோக்கி விரைந்தாள்.... அவள் முதுகுப் பக்கமாக அவனது குறும்புப் பேச்சு காதில் விழுந்து காதுமடல்களைச் சூடாக்கி அவள் வதனத்தையும் வெக்கப்பட வைத்தது. 'ஓம்... ஓம்' இப்போ குழந்தைக்குத் தானேடி முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். இப்படி ஓடினீ என்றால் எப்படிப் பெறுகிறதாம்' என்ற வார்த்தைகளே அவளை வெட்கப்பட வைத்த வசனங்களாகும்.

நிர்மலா முப்பத்தெட்டு வயதினைக் கடந்து விட்டாலும் அவளது இளமை இன்னும் குறைந்து விடவில்லை. அவளது அழுகைக்கான விடை கூறும் நேரமும் இதுவாகியது. நிர்மலாவுக்கும் அலெக்ஸ்க்கும் திருமணமாகி 10 வருடங்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. தம்பதி சமேதரராய் அவர்களைக் காணும் உங்கள் மனதில் எழும் கேள்விக்கான பதில் தான் இது. எல்லா மணமக்கள் போலும் கரைகாணா காதலோடு இளமையின் துடிப்பினோடும் வேகத்தினோடும் இருவரும் கல்யாணத்தின் பின் வாழ்வை அணு அணுவாக அனுபவித்துத்தான் வாழ்ந்தார்கள். அணை உடைந்த காதலும் அதனுடன் இணைந்த அந்த கூடலும் நிச்சயம் தமக்கும் சிப்பியில் முத்தாகவோ, தித்திக்கும் அமுதாக தத்திவரும் தளிர் நிலாச் சரமாக ஓர் மகவு தன் மணி வயிற்றில் உருவாகும் என்று அவளும், அப்பா என்றழைக்கும் அமுதக்கடல் நிச்சயம் தன்னை முத்தமிட்டுப் பற்றிக் கொள்வாள் என இருவரும் நினைத்துத்தான் இருந்தனர். ஆனால் காலத்தின் கோலமோ விதியின் சதியோ அவள் மணி வயிற்றில் மகவொன்று உதிக்கவேயில்லை. மாதா மாதம் தன் கனவு சுக்கு நூறாக உடைந்து போவது தண்ணீரில் அவள் கண்ணீரும் கழுவப்படும் போது வேதனையும் வலியும் யாருக்கும் புரிந்து விட நியாயமில்லை. அவள் ஒருத்தியைத் தவிர செய்யாத வைத்தியம் இல்லை. பார்க்காத வைத்தியர்களும் இல்லை. ஆணவன் அலெக்ஸ்க்கும் எந்தக் குறையும் இருப்பதாகவும் இல்லை. அதேபோல நிர்மலாவின் கருப்பையும் குறை எதுவுமின்றி நிறைவுறக் காத்துத்தான் இருந்தது. ஆனால் சகல செல்வங்களும் கொடுத்த இறைவன் அவள் மணிவயிற்றில் செல்வம் ஒன்றைத்தான் கொடுக்கத் தவறிவிட்டான்...

நிர்மலா.. அடி நிர்மலா.. என்கிற கூப்பிடு ஓசை கேட்டு திடுக்கிட்டு சுயம் திரும்பினாள் நிர்மலா. அந்தத் திடுக்கிடலில் கையிலிருந்த பால் ரீயின் சிதறலும் சூடாக அவள் கரங்களில் பட்டுவிட வெடுக்கென தேநீர்க் கோப்பையை 'டண்' என மேசையில் வைத்து ஆ... என சிறிய முனகலோடு ஓம் அக்கா.. வாறன் பொறு... எனக் கூறிக் கொண்டு குசினியை விட்டு வெளியேறினாள். அக்கா.. குளோறியா முன் கதவால் உள் ஏறிக் கொண்டிருந்தாள். நிர்மலா அடியே அண்ணா மீன் வாங்கப் போனவராம். நல்ல பைந்தி மீன் கிடைச்சதாம். உனக்கும் தாறதோ.. என்று கேட்கச் சொன்னவர். உனக்கு விருப்பம்தானே. நான் உன்னைக் கேட்காமல் ஓம் சொல்லிப் போட்டன். எதுக்கும் உனக்குச் சொல்லி வைப்பம் எண்டுதான் வந்தனான் என்று அவள் கூறிக் கொண்டு உள் ஏற ஓம் அக்கா கொண்டு வரச் சொல்லு. அது சரி தேத் தண்ணி குடிக்கிறியோ? இந்த அங்கர் பால் மா இல்லாததால ரின் பால்ல தான் தேத் தண்ணி போட்டனான் என்றாள். இல்ல புள்ள நான் குடிச்சுப் போட்டன். பெரியக்கா அப்பம் சுட்டது போல அது இவள் யசிந்தாட்ட குடுத்துவிடுறதெண்டவ அது தான் நானும் வந்தன் என்றாள்.

இவர்களது சம்பாஷணையை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த அலெக்ஸ் அப்பமோ.. பெரிய மச்சாள் சுட்டதோ... கெதியா கொண்டு வரச் சொல்லன் நிம்மி எனச் சிரித்தபடியே அவர்கள் சம்பாஷணைக்கு இடையில் வந்தான்... இவர்களது இந்தச் சம்பாஷணைக்கு நடுவே நிர்மலாவின் கைத்தொலைபேசி 'கற்பூரமுல்லை ஒன்று கைவீசும் தென்றல் ஒன்று..' என சுசீலாவின் குரலில் அழைப்பை விடுத்தது. எழுந்து நின்ற அலெக்ஸிடம் அவள் இஞ்சருங்கோ அந்த போனை ஒருக்கா எடுங்கோப்பா.. என்றவள் தானும் அவ்விடம் நோக்கி நடந்து அவனிடமிருந்து போனைப் பெற்றுக் கொண்டாள். ஹலோ யாரு.... ஆ... என்ன சொல்லுறீங்க.. என்று முகத்தில் பெரும் பீதிக் கலவரத்தினோடு கேட்டவள் எதிர்த்தரப்பிலிருந்து வந்த மறுமொழியால் நிலை தடுமாறி விழுந்து விடாமலிருக்க கணவன் இருந்த கதிரையின் கைப்பிடியைப் பற்றினாள். ஆனாலும் துவண்ட அவள் கால்களுக்கு இருண்ட அவள் கண்கள் ஒத்துழைப்புத் தர தடாரென அந்த சோபாவில் சரிந்து மூர்ச்சையானாள்.


தொடரும்....

# இலக்கிய நயம்

**ஆக்கம் - மதிவதனி இராஜசேகரன்**
**(B.A, IHD in Law)**

சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பவை பஞ்ச காப்பியங்கள் அல்லது ஐம்பெரும் காப்பியங்கள் என்று தமிழ் இலக்கியத்தில் அறியப்படும் நூல்களாகும். இதில் காலத்தால் முந்தியதும் திருத்தக்கதேவரால் பாடப்பட்டதுமான நூல் சீவக சிந்தாமணி. இந்நூல் சீவகன் என அறியப்படும் மன்னனைக் காப்பிய நாயகனாகக் கொண்டாடும் நூலாகும். மன்னன் 'சீவகன்' எட்டுப் பெண்களை மணம் புரிகின்ற இக்கதையை 'மணநூல்' என்றும் கூறி அழைப்பதுண்டு. சிறந்த இலக்கிய நயமும் அகப்பாடல்களும் நிறைந்த சீவகசிந்தாமணியிலே ஓர் பாடல் நம்மை இலக்கியச் சுவையில் திழைக்க வைக்க இந்தவார இலக்கியச் சுவையாக மிளிர்கிறது.

இளவேனிற் காலத்தில் ஓர்நாள் இனிய சோலையின் நடுவே இனிதாக பொழுது போக்கிக் கொண்டிருந்தான் மன்னன் சீவகன். அங்கே மனம் விரும்பும் சோலையோரம் மங்கையர் இருவர் தாம் தயாரித்து இடித்து வைத்துள்ள நறுமணப் பொடியை சீவகனிடம் சமர்ப்பிக்க எண்ணி அதனைக் கொண்டு வந்திருந்தனர். அவற்றுள் எப்பொடி பெறுமதியும் சிறப்பும் வாய்ந்தது என்று சொல்லும் வண்ணமாக மன்னனை நாடி எது சிறந்தது எனத் தீர்ப்புக் கூறுமாறு கேட்டு நின்றனர். அவ்வேளை சீவகன் சோலையிலுள்ள வண்டுகள் தாமே பூக்களின் நறுமணம் நுகர்பவை,



அவையே நறும் பொடியின் தரமறிந்து தீர்ப்பளிக்க வல்லவை என்று எண்ணி அதை அந்த மங்கையரிடம் கூறினான். அவர்களும் வண்டுகளின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள இசைத்தனர். உடனே சீவகன் சோலை தனிலுள்ள வண்டுகளை இவ்விதம் அழைத்தான்.

'மங்கை நல்லார் கண்ணும் மனமும் போன்று
எங்கும் ஓடி இடறும் சுரும்புகாள்!
வண்டுகாள்! மகிழ்தேன் இனங்காள் மது
வண்டு தேக்கிடும் ஒண்மிஞிற் றீட்டங்காள்'

என்று வண்டினத்தின் பெயர் சொல்லி அழைத்தான். சோலையிலே ஆடும் சுரும்புகளையும் வண்டுகளையும் தேனீக்களையும் மிளிறுகளையும் வரவழைத்து வாசப்பொடியை நுகர்ந்து தீர்ப்புச் சொல்லும்படி வேண்டினான் என்கிறது ஐம்பெரும் காப்பியத்தின் தலையான சீவகசிந்தாமணி.

இங்கு சிந்தாமணிக் காப்பியத்தில் வண்டினத்தின் உட்பிரிவுகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இலக்கியம் என்பதே மனித மனங்களை சுவைக்கக ஏற்படுத்தப்பட்டவையே இன்றைய இலக்கியச் சுவையின் சோலையில் வண்டினமும் அதன் உட்பிரிவுகள் பற்றியும் பார்த்துவிட்டோம்.

மீண்டும் அடுத்தவாரம் இன்னுமொரு சுவையில் சந்திப்போம்.



# மனச்சோர்வு நீங்க வழி

சில சமயம் நீங்களே உணர்ந்திருக்கலாம். எதைப் பார்த்தாலும் வெறுப்பாக இருக்கும். யாரைப் பார்த்தாலும் எரிச்சல் வரும். மன துக்குள் தோற்றுவிட்டதுபோல் ஒரு வெறுமை உண்டாகும். அப்படியானால், மனச்சோர்வு என்ற எதிரியை உள்ளே அனுமதித் துவிட்டீர்கள் என்று அர்த்தம்.

மனச்சோர்வு எதனால் வருகிறது, அடிப்படையில் உங்களுக்கு என்ன நிகழ்கிறது தெரியுமா?

நீங்கள் விரும்பியபடி யாரோ நடக்கவில்லை. எதிர்பார்த்தபடி எதுவோ நிகழவில்லை. ஆசைப்பட்டபடி வாழ்க்கை அமையவில்லை. சுருக்கமாகச் சொன்னால், உங்களுக்கு என்ன கிடைத்திருக்கிறதோ, அதை ஏற்றுக் கொள்ள முடியாமல், நீங்கள் தவிக்கிறீர்கள். அதை எதிர்க்கிறீர்கள்.

நீங்கள் மனச்சோர்வுடன் இருக்கும்போது எல்லாம், மற்றவர்கள் உங்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள். உங்களுடன் உட்கார்ந்து மற்றவர்களும் அழ வேண்டும் என்று விரும்புகிறீர்கள். இரக்கத்தை யாசிக்கிறீர்கள். என்ன பைத்தி யக்காரத்தனம் இது?

உங்கள் விருப்பப்படி எல்லாம் உலகம் ஏன் நடக்க வேண்டும்? நீங்கள் விரும்பியபடியெல்லாம் தங்களை ஏன் மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்? அகங்காரம் எங்கே இருந்தாலும், அதற்கு அடி விழத்தான் செய்யும். அப்போது, மனச்சோர்வு முளைத்து எழும். அது உங்களைப் பற்றிய நம்பிக்கைகளைத் தகர்த்துவிடும்.

வெளியே இருந்து ஆயுதங்களால் தாக்குபவர்களைக் கூட சரியாகக் கையாண்டால், சமாளித்துவிடலாம். மனச்சோர்வு என்பது உள்ளிருந்து கொண்டே, கீறிக் கிழித்துக் குடைந்து உங்களை உபயோகமில்லாமல் அழித்துவிடும் விஷ ஆயுதம். உங்களை நீங்களே தாக்கி அழித்துக் கொள்வதைப் போன்ற முட்டாள்தனம் அது.

எதை நினைத்தும் சும்மா வருத்தப்பட்டுக் கொண்டு இருப்பதால், எந்தப் பலனும் இல்லை. வருத்தம் என்பதும், துக்கம் என்பதும் ஆளுக்கு ஆள் மாறுபடும். ஒருவர் தீக்குச்சி பற்றவில்லை என்றாலே துக்கமாகிவிடுவார். இன்னொருவர் வீடே தீப்பற்றி எரிந்தாலும், அலட்டிக் கொள்ள மாட்டார்.

துக்கம் என்பதும், வருத்தம் என்பதும் ஒருவருக்கொருவர் மாறு படும். மற்றவருடன் ஒப்பிட்டுப் பார்த்தால் வருத்தம் கூடும் அல்லது குறையும் என்றால், அவை வெளியிலிருந்தா வருகின்றன? இல்லை. உங்கள் மனதுக்கு உள்ளேயேதான் உற்பத்தியாகின்றன.

உங்கள் மனதைச் சந்தோசமாக வைத்துக் கொள்வதோ, சோர்வாக வைத்துக் கொள்வதோ உங்கள் கையில்தான் இருக்கிறது.

நீங்கள் நினைத்தபடி உலகம் நடக்க வேண்டும், மற்றவர்கள் இயங்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் உங்கள் அகங்காரம் வீண் சுமை. அதைக் காலடியில் போட்டு நசுக்கி விட்டு மேலே தொடரவில்லை என்றால், நீங்கள் வைக்கும் ஒவ்வொரு அடியும் வலிக்கும். ஒவ்வொரு திருப்பத்திலும் அச்சம் வரும். நம்பிக்கை குறைந்து, மனச்சோர்வு எழும்.

மனச்சோர்வு வரும்போதெல்லாம் மற்றவர்கள் மீது எரிச்சல் கொள்வதை நிறுத்திவிட்டு, அதற்குக் காரணம் நீங்கள்தான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். உலகத்தின் மீது கோபம் கொள்ளாதீர்கள்.

உங்கள் குறைகளை உணர்ந்து அவற்றை மாற்றிக் கொள்ளக் கிடைத்த அற்புதமான வாய்ப்பு இது என்று உணருங்கள். வலிகளும், வேதனைகளும் நிரம்பிய அனுபவங்களையே வாழ்க்கைப் பாடங்களாக ஏற்று, உங்களைப் பக்குவப்படுத்திக் கொள்ள வழங்கப்பட்ட வரம் இது.

எதிர்பார்ப்பை வளர்த்துக் கொண்டதால்தான் ஏமாற்றங்கள் என்பதை உணருங்கள் . மாற்றுக் கருத்துக்களையும் எதிர்க்காமல் ஏற்கப் பழகுங்கள். அவற்றையே உங்களுக்குச் சாதகமாக மாற்றிக் கொள்வது எப்படி என்று திட்டமிடுங்கள். கிடைக்கும் அனுபவங்களை உங்களுக்குப் பயனுள்ளதாக மாற்றிக் கொள்ளுங்கள்.

# பெண்கள் அவசியம் கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்கள்



உங்களுக்கு உண்மையாக இருக்க கற்றுக் கொள்ளுங்கள். சார்ந்து இருக்கும் சமூகத்திற்கும் கூட.

உங்களை தெளிவாக அறிமுகம் செய்து கொள்ளத் தெரிய வேண்டும். குறைந்தது 10 வரிகளில் உறவு/நட்பு வட்டங்களில்.

பேச்சுத் திறமை வேண்டும். வாயாடியாக இருக்க வேண்டியதில்லை. சரியான நேரத்தில் சரியாக பேச தெரிந்தால் போதும்.

வீட்டுப் பொருளாதார நிர்வாகம் கண்டிப்பாக தெரிய வேண்டும். வரவு எட்டணா செலவு பத்தணா என்று ஆகிவிடக்கூடாது.

சாப்பாடு விடயத்தில் விழிப்புடன் இருக்க வேண்டும். சும்மா மிச்சம், மிகுதியான எல் லாத்தையும் உள்ளே தள்ளக்கூடாது.

எல்லா காய்கறிகளையும் பழங்களையும் சாப்பிட்டு பழகவேண்டும். எனக்கு இது பிடிக்காது என்றெல்லாம் சாக்கு போக்கு சொல்லக்கூடாது.

பெண்ணின் பருவ மாற்றங்களுக்கு தேவையான அனைத்து சத்துக்களும் கிடைக்க வேண்டும் .

அவசரநிலையை கையாள நிச்சயமாக தெரிந்து இருக்க வேண்டும். திடீரென்ற உடல் நலக்குறைவு போல் சில.

ஒரு பிரச்சினை என்று வந்து விட்டால், அச்சச்சோ... என்று பதறினாலும், சற்று நேரத் தில் நிதானமாக இயல்பான நிலைக்கு திரும்ப பழக வேண்டும். எல்லாருக்கும் முன் மயங்கி விழக்கூடாது.

நேர நிர்வாகம் அவசியம். மகளோ மரும களோ, அம்மாவோ, பாட்டியோ பல ரோல்களில் வாழ வேண்டிய பிறவியில் நேர நிர்வாகம் சரியாக செய்யத்தெரிய வேண்டும் .

மாற்றத்தை பழக வேண்டும். பெண்ணாக பிறந்து விட்டாலே உடலாலும் உள்ளத்தாலும் தொடர் மாற்றங்களை சந்திக்க நேரிடும். அதற்கு தயாராக இருக்க வேண்டும்.

உங்களுக்கு ஏற்ற ஆடைகள், கடைகள் போன்ற விடயம் இருக்க வேண்டும். தனக்கு பொருந்தாத ஆடைகளை அணிந்து கொள் எக்கூடாது. புடவையும் கட்ட தெரியவேண்டும்.

உங்களுடையதும், பிறருடையதும் எல்லை தெரிய வேண்டும்.

நகைச்சுவை உணர்வு. கொஞ்சமாவது இருந்தால் நல்லது.

# நம்பிக்கை தாங்க வாழ்க்கை

ப்ரியமதா பயஸ்



ஒருவர் திருமணமாகி தன் அழகான மனைவியுடன் கடல் வழியாக திரும்புகிறார். கடலில் அலைகள் ஆர்பரிக்கின்றன, இடியும் மின்னலு மாய் இருக்கிறது. படகு ஆடுகிறது. அவரின் மனைவி நடுங்குகிறாள். அமைதியாய் புன்னகையோடு படகை செலுத்தும் கணவனை பார்த்து அவள் கேட்கிறாள்.

உங்களுக்கு பயமாக இல்லையா? என்று.

கணவன் ஒன்றுமே சொல்லாமல், தன் உறையிலிருந்து ஒரு கத்தியை எடுத்து அவள் கழுத்தில் வைக்கிறார்.

அவளோ பயப்படாமல் சிரிக்கிறாள். கணவன் இந்த கத்தி, பயங்கரமா னது, உன்னை வெட்டிவிடும், நீயோ சிரிக்கிறாயே? என்று. அதற்கு அவள் சொல்கிறாள்.

கத்தி பயங்கரமானதுதான், ஆனால் அதை வைத்திருப்பவர் என் அன்புக்குரியவர் அதனால் பயமில்லை என்று.கணவன் புன்முறுவலோடு சொல்கிறான் இந்த அலைகளும், இடிகளும், மின்னல்களும், பயங்கரமா னவை. ஆனால் அவற்றை தன் வசம் வைத்திருக்கும் இறைவன் , என் அன்புக்குரியவன், அதனால் எனக்கு பயமில்லை என்கிறார்.

எவ்வளவு 'நம்பிக்கை' நம்பிக்கை தாங்க வாழ்க்கை.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அங்கம் - 177

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்



பிறிமனில் நடந்த நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் அமர்வு

**442. ஜேர்மனியின் பிறீமன் நகரில் நடத்தப்பட்ட தீர்ப்பாயத்திடம் முன்வைக்கப் பட்ட கோரிக்கைகள் என்ன?**

பின்வரும் கோரிக்கைகள் தீர்ப்பாயத் தில் முன்வைக்கப்பட்டன:-

1.ஸ்ரீலங்கா தீவில் வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலை நடத்தப்படு கின்றதா? அந்த இனப்படுகொலை கட்டம் கட்டமாக நடந்து இன்னும் தொடர்கிறதா? (In the Island of Sri Lanka a genocide is being committed against the Tamil people in the North and East of the island. The process of the genocide has occurred in stages and is on going)

2.ஸ்ரீலங்காவின் அரசும் அதன் அரச படைகளும் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலையில் குற்றவாளிகளா? (The Sri Lankan state and its armed forces are guilty of carrying out the crime of genocide against the Tamil people?)


3.பிரித்தானிய அரசு தமிழ் மக்க ளுக்கு எதிரான இனப்படுகொலைக்கு உடந்தையாயிருந்தது?(The British state is guilty of being complicit in the crime of genocide against the Tamil people )

4. அமெரிக்கா தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலைக்கு உடந் தையாயிருந்தது? ( The USA is guilty of being complicit in the crime of genocide against the Tamil people)

5.இந்திய அரசு தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலைக்கு உடந்தை யாகவிருந்தது? ( The Indian state is guilty of being complicit in the crime of genocide against the Tamil people)

**443. ஸ்ரீலங்காவோ அல்லது குறிப் பிடப்பட்ட மற்ற மூன்று நாடுகளுமோ இந்தச் சமர்ப்பணத்தைக் கணக்கெடுத் தனவா?**

இந்தக் குற்றச் சமர்ப்பணங்களை




தீர்ப்பாயம் நேரடியாக ஒவ்வொரு அரசுக் கும் அறிவித்து அவர்களை அதில் பங்கு பற்றுமாறு அழைத்தது. அவர்கள் அந்த அழைப்புக்களை நிராகரித்தனர். அதன் பின் அந்த அழைப்புக்கள் முறையாக கொடுக்கப்பட்டன என்ற சான்றுதலுக்காக பிறீமன் நகரிலிருந்த ஒவ்வொரு நாட்டின் தூதரகங்களின் ஊடாக குற்ற சமர்ப்ப ணங்கள் அந்தந்த நாட்டின் அதிகாரி களுக்கு தெரியப்படுத்துமாறு கைய ளிக்கப்பட்டது. அதற்கும் எதுவித தகவலும் இல்லாமையால் தீர்ப்பாயம் ஒவ்வொரு நாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்த அறிக் கையாளரை (Rapporteur) நியமித் தது.

இந்த அறிக்கையாளர்கள், குறிப்பிடப் பட்ட இனப்படுகொலை காலங்களில் அந்த நாடுகளின் போக்குகள். பங்குபற் றுதல், ஆதரவுகள் எப்படியாக இருந்தன என்பதை அவர்கள் விடுத்த அறிக்கை ளிலிருந்து தொகுத்துத் தீர்ப்பாயத்துக்குத் தருமாறு கேட்கப்பட்டனர்

**444. அந்த நாடுகளின் நிலைப்பாடு கள் எவையானவை என அந்த அறிக்கையா ளர்கள் தெரிவித்தனர்?**

அறிக்கையாளர்கள், அந்த நாடுகளின் நிலைப்பாடுகளையும் அவர்கள் தீர்ப்பாயத் துக்கு முன் சமுகமளித்திருந்தால் எந்த விதமான மறுதலிப்பு வாதங்களை சமர்ப்பித்திருப்பார்கள் என்ற வரைவுகளை யும் தந்தனர். ஸ்ரீலங்காவைப் பொறுத்த வரை அவர்களின் பாதுகாப்பு அமைச் சினால் வெளியிடப்பட்ட அறிக்கைகள், கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக் கத்துக்கான ஆணைக்குழுவின் (LLRC) அறிக்கைகள், ஸ்ரீலங்கா ஜனாதிபதி மற்றும் அவரின் நாட்டுப் பிரதிநிதிகள் ஐ.நாவின் மனித உரிமை மன்றுகளில் ஆற்றிய உரைகள், அறிக்கைகளை அடிப் படையாகவைத்துபின்வருமாறுதெரிவிப்பு தரப்பட்டது:-

* இந்த யுத்தம் வடக்கையும், கிழக் கையும் விடுதலைப் புலிகளின் பிடியிலி ருந்து விடுவிப்பதற்காக நடத்தப்பட்டது

* குடிமக்களுக்கு ஏற்பட்ட காயங்கள், அழிவுகள் என்பன எதுவும் வேண்டு மென்றே நடத்தப்பட்டவையல்ல. போரின் இணையான தாக்கங்களே.

* விடுதலைப்புலிகள் அவர்கள் இருந்த பகுதிகளிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட பின்னர் மக்கள் அங்கு மீளக் குடியமர்த் தப்படுகிறார்கள்.

* ஸ்ரீலங்கா அரசு வடக்கு, கிழக்கு பகுதிகளில் உருவாக்க திட்டங்களை மேற் கொள்கிறது. இவற்றினால் தமிழ் மக்கள் பயனடைவார்கள்.

* சர்வதேச விசாரணை என்ற ஒன்று தேவையில்லை. அதனை உள்நாட்டு பொறிமுறையில் நடத்தலாம்

**445. இந்திய அரசைப் பற்றிய தக வல்?**

4 ஓகஸ்ட் 2012 இல் இந்திய வெளி விவகார மந்திரி கிருஷ்ணா நாடாளு மன்றத்தில் ஆற்றிய உரையின் அடிப்ப டையில் விடுதலைப் புலிகள் இந்திய சட் டங்களின்கீழ்தடைசெய்யப்பட்ட அமைப்பு. ஸ்ரீலங்காவின் அரசு போரின் கடைசி கால நாள்கள் பற்றியும் அப்பொழுது இருந்த வன்முறைகள் குறித்தும் ஒரு சுதந்திரமான விசாரணை நடத்த வேண் டும்.13 ஆவது சட்டத்திருத்தம் முழுமை யாக அமுல்படுத்தல் வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாண சபையை பொறுத்த ளவில் எந்த அரசியல் தீர்வும் ஒற்றுமை யான, பிரிக்கப்படாத நாட்டுக்குள்ளேயே அமையவேண்டும்

**446. பிரித்தானிய அரசின் நிலைப் பாடு எதுவாக இருக்கும் எனக் கணிக்கப் பட்டது?**

பிரித்தானியா அரசினதும் அதனது வெளிநாட்டு கொமன்வெல்த் அலுவலகங் கள் வெளியிட்ட அறிக்கைகள், பொதுநல வாய நாடுகளின் தலைவர்களிடையே அவர்களின் பிரதமர் டேவிட் கமரன் நவம்பர் 2013 ஆற்றிய பேச்சுக்களின் அடிப்படையில் -

* விடுதலைப் புலிகள் ஒரு பயங் கரவாத அமைப்பு.

* ஸ்ரீலங்கா அரசு சுதந்திரமான ஓர் ஆய்வினை மார்ச் 2014 வரையில் நடத்த வேண்டும். அப்படி அரசாங்கம் செய்யாத பட்சத்தில் உள்நாட்டினுள் சர்வதேச விசா ரணை ஐ.நாவின் அனுசரணையோடு நடத்தப்பட வேண்டும்.

* எட்டப்படும் எந்த(அரசியல்) தீர்வும் ஒற்றுமையான, பிரிக்கப்படாத நாட்டிற் குள்ளே அமையவேண்டும்.


**447. அமெரிக்காவைப் பற்றி?**

* விடுதலைப் புலிகள் ஒரு பயங்கர வாத அமைப்பு. போர் முடிவு பெற்றதை அமெரிக்கா வரவேற்கிறது.

* போரின் கடைசி நாள்களைப் பற்றி சுதந்திரமான, உள்நாட்டின் விசாரணை இருக்க வேண்டும்.

* கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லி ணக்கத்துக்கான ஆணைக்குழுவின் (LLRC) அறிக்கைகள் அமுல்படுத்தப்பட வேண்டும்.

* எவ்வித அரசியல் தீர்வும் ஒற்றுமை யான, பிரிக்கப்படாத நாட்டிற்குள்ளே அமைய வேண்டும்.




அமெரிக்காவின் நிலைப்பாடுகள் அவர்களது State Department அறிக் கைகளிலிருந்தும் காங்கிரஸில் இருந்த வாதங்களிலிருந்தும் தயாரிக்கப்பட்டன.

**448. இவை கணக்கெடுக்கப்பட்ட வனவா?**

அவை கணக்கெடுக்கப்பட்டு, ஒவ் வொரு அரசினதும் பல்வேறு அறிக்கை கள் அவற்றுக்கிடையே இருந்த பரிமாற் றங்கள், ஆயுத உதவிகளுக்கான ஏற் பாடுகள், பொதுவாக வெளிப்படுத்தப்பட்ட கடிதங்கள், கூட்டங்களின் அறிக்கைகள், கசிவு செய்யப்பட்ட தகவல்கள் என்ற பல ஆவணங்கள் சாட்சியமென்ற அடிப்படை களில் ஆராயப்பட்டன.

(வளரும்.....)


# இடியப்பச் சிக்கலாகியிருக்கும் சுகாதாரத் தொண்டர்கள் நியமனம்

**● ந.லோகதயாளன்**



வடக்கு மாகாண ஆளுநரின் அலுவலகம் முன்பாக வீதியிலே காத்திருக்கும் வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் விடயத்தில் உள்ள சிக்கலான முடிச்சை தற்போதைய ஆளுநர் அவிழ்த்து நியமனத்தை வழங்க வேண்டும் என வீதியிலே போராடும் சுகாதாரத் தொண்டர்கள் எதிர்பார்க்கின்றனர்.

2009ஆம் ஆண்டுக்கு முன்பு யுத்த காலத்திலும் அதன் பின்பு நெருக்கடி காலத்திலும் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் தொண்டு நிறுவனங்களின் ஊடாக குறைந்த கொடுப்பனவுகளுடன் பணியாற்றியோர் தொண்டு நிறுவனங்களின் வெளியேற்றம், திட்ட நிறைவு என்பவற்றால் வேலையின்றி வெளியில் விடப்பட்டனர். போதிய கொடுப்பனவுகள் இன்றி தொண்டர்களாகப் பணியாற்றிய இவர்கள் தம்மை சுகாதாரத் தொழிலாளர்களாக நிரந்தர நியமனம் வழங்ககோரி நீண்ட காலம் விடுத்த கோரிக்கையின் பெயரில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சராக அப்போதிருந்த மருத்துவர் ப.சத்தியலிங்கம் முதன் முதலாக இந்த விவரங்களை ஒன்று திரட்டி, ஆவணமாக்கி நிரந்தர நியமனம் வழங்க முயன்ற சமயம் 632 தொண்டர்கள் மட்டுமே அந்தப் பட்டியலில் காணப்பட்டனர். இவ்வாறு இருந்த 632 பேரின் விவரங்களையும் திரட்டி நியமனத்திற்காக, மாகாண பிரதம செயலாளர், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஊடாகத் திறைசேரியின் அனுமதிக்கு அனுப்பி வைத்தார்.



முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
DEPARTMENT OF MANAGEMENT SERVICES
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE
பொது திறைசேரி, கொழும்பு - 01. General Treasury, Colombo 01.

01/08

My No. DMS/NP/0302 Your No. Date 08.03.2019

Chief Secretary
Northern Provincial Council

Dear Sir

Approval for Filling the Vacancies in Health Sector

This refers to your letter No. NP/02/02/Hea/Gen/2018 dated 05.12.2018 on the above subject.

02. Considering the request mentioned in the above letter, the approval is hereby granted to fill 454 vacancies existing within the approved cadre of Saukya Karya Sahayaka (Junior) under the Department of Provincial Health Services in Northern Province as follow.

| Designation | Service | Grade/ Class | Salary Code | Service Level | Approved Number vacancies to be filled |
|---|---|---|---|---|---|
| Saukya Karya Sahayaka(Junior) | Dept. | III/II/I/Spl | PL1 - 2016 | Primary | 454 |

03. You are kindly informed that the new recruitments should be made in line with the relevant Service Minute. Further, you are kindly informed that the subsequent expenses that may incure as a result of the above recruitments should be borne within your approved budgetary allocation as per the provisions stipulated in the Budget Circular No.05/2018 and dated 27.12.2018. Further, in terms of the Management Services Circular No. 03/2018, you are kindly informed to refrain from making any recruitment extraneous to the approved cadre.

04. Further, you are kindly informed that the information pertaining to the existing cadre of the Department of Health Services, Northern Province should be submitted to the Department of Management Services at the end of each quarter of each year at institutional level, as per the provisions stipulated in the Management Services Circular No.04/2017.

Yours Faithfully,

Thamara D. Perera
Director General

Copies :
i. Auditor General
ii. Secretary, Ministry of Internal & Home Affairs and Provincial Councils & Local Government
iii. Secretary, Finance Commission
iv. Secretary, Northern Provincial Public Service Commission
v. General File
vi. Data File

## ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் கூட்டம்

இவ்வாறு அனுப்பிய விவரங்களில் உள்ள குறைபாடுகள், நெருக்கடிகள் தொடர்பில் ஆராய அப்போதைய ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெனான்டோ தலைமையில் இரு கூட்டங்கள் இடம்பெற்றன. இந்தக் கூட்டங்களின் முடிவில் இவர்களில் 127 பேர் மட்டுமே அரச சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதற்கான சகல தகுதியுடன் காணப்பட்டனர் எனக் கண்டறியப்பட்டது.

இதனால் தகைமை மற்றும் வயது கட்டுப்பாட்டு எல்லைகளை மாற்றி, சுகாதாரத் திணைக்களத்தில் வெற்றிடமாக காணப்பட்ட எண்ணிக்கைக்கு ஏற்ப, புதிதாக ஆள்களைப் பணிக்குச் சேர்க்கும் திட்டத்தின் கீழ், இவர்களை அரச சேவைக்குள் உள்வாங்கும் நோக்கத்தோடு அதற்குத் திறைசேரியின் அனுமதியைப் பெற முயற்சி எடுக்கப்பட்டது.

இதற்கமைய வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் உள்ள அனைத்து சுகாதாரத் தொழிலாளர் வெற்றிடமும் கணக்கிடப்பட்டு அந்த வெற்றிட எண்ணிக்கைக்கு முழு அனுமதி தருமாறு கோரப்பட்டது.

## 454 பேரை நியமிக்க திறைசேரி அனுமதி

ஜனாதிபதியின் செயலாளரின் ஆலோசனைக்கு அமைய அப்போதை ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயும் முயற்சித்து 454 பேரை நியமிக்க வேனும் அனுமதி தருமாறு அப்போதைய பிரதம செயலாளர் அ.பத்திநாதன் விடுத்த கோரிக்கையின் பெயரில் 2019.03.08 நிதி அமைச்சு அந்த அனுமதியை "சுகாதார ஊழியர் நியமனம் என எழுத்து மூலமாக வழங்கியது. இதனால் கல்வித் தகைமை, சேவை மூப்பு அடிப்படையில் 454 பேருக்கு மட்டும் நியமனம் வழங்க முற்பட்டபோது சந்தர்ப்பம் கிடைக்காதோர் போராட்டத்தில் குதிக்க, அந்த நியமனமும் தடைப்பட்டது.

## 632 தொண்டர்கள் 980 பேராக அதிகரிப்பு


அடுத்து வந்த ஆளுநரால் இந்த விடயம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சிடம் பாரப்படுத்தப்பட்டது. அப்போது சுகாதார அமைச்சின் செயலாளராக இருந்த திருவாகரன் இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்து நேர்முகத் தேர்வினை நடாத்த முற்பட்டபோது 632 பேராக இருந்த தொண்டர்கள் 980 ஆகப் பட்டியல் நீண்டது. இந்தப் பட்டியல் எவ்வாறு நீண்டது என்றால் முதல் வந்த 632 பேரும் நேரடியாக திணைக்களத்தில் தொண்டர்களாகப் பணியாற்றியவர்கள் எனவும் எஞ்சியோர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அமைப் புக்கள் ஊடாக ஒப்பந்த பணியாளர்களாக வந்து பணியாற்றி ஒப்பந்தம் முடிந்தமையால் பணியில்லாது இருப்போர் எனவும், பொது சுகாதார வைத்திய அதிகாரிகளின் சிபார்சு பட்டியலும் அதில் உள்ளடக்கம் எனத் தெரிவிக்கப்பட்டது. இதன் காரணமாக நெருக்கடி மேலும் அதிகரித்ததே அன்றி நியமனம் வழங்கப்பட முடியவில்லை.

இதனையடுத்தே வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக தெய்வேந்திரம் நியமனம் செய்யப்பட்ட பின்பு, திரும்பவும் புதிதாக விண்ணப்பங்கள் கோரி நேர்முகத் தேர்விற்கு சென்ற சமயம் வெளி வாரியாக விண்ணப்பத்தை கோரி தவறு இழைக்கப்பட்டது

இந்தத் தவறின் காரணமாக, அதுவரை ஆயிரத்தை அண்மித்தவர்களிற்கே நியமனம் வழங்க முடியாது தவித்த வடக்கு மாகாண சுகாதார அமைச்சிற்கு, ஆயிரத்து 923 விண்ணப்பங்களாக எண்ணிக்கை அதிகரித்து விட்டது. இந்த ஆயிரத்து 923 பேருக்கும் அப்போதைய ஆளுநர் சுரேன் ராகவனின் அறிவுறுத்தலில் நேர்முகத் தேர்வு இடம்பெற்றது.

## நேர்முகத் தேர்வு புள்ளியிடல் நுட்பம்

வடக்கின் அவல நிலுமையைக் காட்டி சுகாதாரத் தொண்டர்களின் நிலைமைக்கு புறம்பாக விதவைகள், போரினால் பாதிக்கப்பட்டோர், விசேட தேவையுடையவர்களிற்கு என விசேட புள்ளி என ஒரு கணக்கிடப்பட்டது. இதனால் ஆரம்பத்தில் இருந்த 630 பேரும் அன்றி, பின்னர் இருந்த ஆயிரம் பேருமன்றி, மூன்றாவதாகப் புகுந்த பலர் தகுதிப் பட்டியலில் இடம்பிடித்தனர்.



நேர்முகத் தேர்விற்கு தோற்றிய தொண்டர்கள், வெளிவாரி அடிப்படையில் கடமையாற்றியவர்கள் [illegible]
தொடர்பான விபரம்

| மாவட்டம் | நேர்முகத் தேர்விற்கு தோற்றிய தொண்டர்கள் | நேர்முகத் தேர்விற்கு தோற்றிய வெளிவாரி அடிப்படையில் கடமையாற்றியவர்கள் | நேர்முகத் தேர்விற்கு தோற்றிய தொண்டர் மற்றும் வெளிவாரி அடிப்படையில் கடமையாற்றியோர் | மொத்தம் | தெரிவு செய்யப்பட்ட தொண்டர்கள் | | தெரிவு செய்யப்பட்ட வெளிவாரி | | மாற்றுத்திறனாளிகள் | தெரிவு செய்யப்படாத தொண்டர்கள் வெளிவாரியாக கடமையாற்றிய சேவைக்காலம் (வருடங்களில்) | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ஆண் | பெண் | ஆண் | பெண் | | 10 | 9 | 8 | 7 | 6 | 5 | 4-[illegible] |
| யாழ்ப்பாணம் | 540 | 53 | 8 | 601 | 46 | 155 | 20 | _ | 4 | - | - | 14 | 14 | 12 | 41 | 28 |
| வவுனியா | 210 | 42 | 112 | 364 | 10 | 39 | 12 | 2 | 2 | 3 | 2 | 9 | 5 | 16 | 15 | 13 |
| மன்னார் | 184 | 27 | 43 | 254 | 6 | 40 | 11 | – | 0 | | | 1 | 6 | 9 | 15 | 12 |
| கிளிநொச்சி | 203 | 22 | 191 | 416 | 6 | 33 | 11 | – | 3 | – | – | – | – | – | – | 17 |
| முல்லைத்தீவு | 208 | 21 | 59 | 288 | 11 | 34 | 4 | – | 5 | 1 | 2 | 3 | 7 | 15 | 22 | 12 |
| மொத்தம் | 1345 | 165 | 413 | 1923 | | | | | | | | | | | | |
| | 1510 | | | | | | | | | | | | | | | |

தயாரித்தவர்: S. [illegible]
பரிசீலித்தவர்: [illegible]

செயலாளர்
சுகாதார அமைச்சு

இதில் உண்மையைக் கூறவேண்டும். 21 வயதானவர்களுக்கும் 5 வருட அனுபவம் எனக் குறிப்பிட்டுப் புள்ளி இடப்பட்டு, பட்டியலிடப்பட்டு, அவசர அவசரமாக நியமனக் கடிதங்களும் வழங்கப்பட்டன.

அவ்வாறு நியமனம் பெற்றோர் பலர் ஆளுநர் செயலகத்தின் ஓர் பணியாளரால் சிபார்சு செய்யப்பட்டதாகப் பாதிக்கப்பட்ட தொண்டர்கள் அடையாளம் காட் டியமையோடு இவர்களை கடமையைப் பொறுப்பேற்க விட்டால் நாம் தீ குளிப்போம் என்ற உச்சக் கட்ட மனக்குமுறலை வெளிப்படுத்தி, ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கதவுகளையும் தட்டினர்.

இதனால் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவசரமாக ஆளுநரைத் தொடர்பு கொண்டமையால் மீள் நேர்முகத் தேர்விற்கு உத்தரவிடப்பட்டது. நியமனக் கடிதங்களை பெற்றவர்களோ தாம் கடமையை பொறுப்பேற்க வேண்டும் என்றனர். ஆனால், நியமனக் கடிதம் பெற்றவர்களில் அநேகம் பேர் ஆரம்பத்தில் இருந்த 632 பேரிலோ அல்லது இரண்டாவது பட்டியலில் இருந்த 922 பேர் கொண்ட பட்டியலிலும் இல்லாதவர்களாகக் காணப்பட்டனர். இதனால், மீண்டும் பலர் முன்னிலையில் நேர்முகத் தேர்வு இடம்பெற்று முடிந்த போது, நாடாளுமன்றத் தேர்தலால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. புதிய அரசோ ஒரு லட்சம் வேலை வாய்ப்பிற்கு செயலணி என்றது. அதனால் தொண்டர்கள் வீதிக்கு வந்தனர். இதன்போது ஆளும் கட்சியின் இருவரில் ஒருவர் தனது முயற்சியினால் விடயம் அமைச்சரவைக்குச் சென்று விட்டது, இதோ அனைவருக்கும் வேலைவாய்ப்பு என்றார். மற்றுமொருவர் இதோ அனைவருக்கும் வேலை வாய்ப்பிற்கு எழுத்தில் உறுதிமொழியைப் பெற்று விட்டேன், அனைவருக்கும் நியமனம் என்றார். அவ்வாறு கூறியும் 4 மாதங்கள் கடந்து விட்டன. இருந்தபோதும் நேற்று இது தொடர்பான கூற்றுக்களும் மீண்டும் கீதம் மீட்கப்படுகின்றது.

இவை அனைத்திற்கும் மத்தியிலேயே புதிய ஆளுநர் பொறுப்பேற்றுள்ளார். இத்தனை இடியப்பச் சிக்கலையும் அவிழ்த்து நியமனத்தை எத்தனை பேருக்கு, எதன் அடிப்படையில் அவர் வழங்க ஏற்பாடு செய்வார் என்பதனைக் காணப் பலரும் ஆவலாய் உள்ளனர்.

# நாமும் ஒரு நாள் அடக்கமாகும் சேமக்காலைகளை நாம் வாழுகின்றபோதே அழகுற மிளிரச் செய்வோம்



**கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள்**
(ஊடக வருகை விரிவுரையாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர், பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

உலகக் கத்தோலிக்க திருச்சபையானது நவம்பர் மாதம் 2ஆம் திகதியை மரித்த விசுவாசிகளின் நினைவு தினமாக அனுசரித்து வருகிறது. இறப்பு என்பது மனித வாழ்வில் தவிர்க்கப்பட முடியாத ஒன்று. மனிதராகப் பிறந்த அனைவரும் இறப்பை சந்தித்தே ஆகவேண்டும். இது அனைவரும் அறிந்த - அதே வேளை ஏற்றுக் கொண்டுள்ள - ஓர் உண்மையாகும். ஆனால் இறப்பு என்பது எங்கு, எப்போது, எப்படி நிகழும் என்பதே இங்குள்ள கேள்வியாகும்.

கத்தோலிக்க ஆலயங்களில் முன்பு பாடப்பட்டு இப்போது சற்று மறக்கப்பட்ட பின்வரும் பாடல் இதனைத் தெளிவாக விளக்குகிறது.

**"இன்றைக்கோ நாளைக்கோ கொல்லும் சாவு -**
**உன்னையோ என்னையோ யாம் அறியோம்**

**இங்கேயோ எங்கேயோ வரும் சாவு -**
**நன்மைக்கோ தீமைக்கோ யாம் அறியோம்."**

எம்மோடு வாழ்ந்தவர்கள் - அன்பைப் பகிர்ந்தவர்கள் - சொல்லாமலே எம்மை விட்டுப் பிரியும் போது, அந்தப்பிரிவு எம்மால் தாங்கிக் கொள்ள முடியாததாகிற போது, அவர்கள் விட்டுச் செல்லும் வெற்றிடம் என்றுமே எவராலுமே நிரப்பப்பட முடியாத ஒன்றாக அமைகிற போது, அந்தப் பிரிவு வேதனைமிக்கதாகிறது தாங்கிக்கொள்ள முடியாததாகிறது. எவ்வளவு ஆறுதல் சொன்னாலும் அது போதாமலே போய்விடுகிறது. இறப்பின் பிரிவைச் சம்பந்தப்பட்டவர்கள் மட்டுமே தனித்து நின்று அனுபவித்து முடிக்க வேண்டும். அவ்வேளைகளில் காலம் தான் பதில் சொல்ல வேண்டும். காலம் செல்லச் செல்லவே கவலை மறக்கப்படுகிறது. கண்முன் இல்லாதவர்கள் கனதூரம் போய் விடுகிறார்கள். ஆனால் மனதை விட்டு முழுமையாகவே நீங்கிப் போய் விடுவதேயில்லை. இறந்தோர் நினைவு தினங்கள் அவர்களை நம் மனதுகளுக்கு மீண்டும் கொண்டு வருகின்றன. இறந்தவர்களை நினைத்துச் செய்யப்படும் நற்செயல்கள் மற்றும் அன்புப்பணிகள் அவர்கள் விட்டுச்சென்ற பணிகளைத் தொடர்வதாகவும் தேவையில் இருப்போர் அவர்கள் பெயரால் வாழ்வைத் தொடர வழிசெய்வதாகவும் இருப்பதே சிறந்தது.

கத்தோலிக்க திருச்சபை தருகின்ற போதனையை இங்கு நினைவு கூர்வது பொருத்தமானது.

இறப்பவர்களுக்கு வாழ்வு மாறுபடுகிறதேயன்றி அழிக்கப்படுவதில்லை. இந்த மண்ணக வாழ்வு முடிந்ததும் விண்ணகத்தில் நித்திய வீடு ஆயத்தமாக உள்ளது. இந்த நம்பிக்கையிலே இவ்வுலக வாழ்வை நல்லதாக - மறு உலகிற்கு நன்மை பயப்பதாக - வாழ அழைக்கப்படுகிறோம். இங்கு வாழும் போது வைத்திருந்த அனைத்தையும் விட்டு நாம் வாழ்ந்த நல்ல வாழ்வின் பயன்களை மட்டும் நம்முடன் எடுத்துச் செல்கிறோம்.

கடந்த காலக் கொடிய போரில் தம்மை அர்ப்பணித்து, இறந்து போனவர்களையும் நவம்பர் மாதத்தில் நினைவு கூருகிறோம். இறந்து போனவர்களை எரிப்பதைக் காட்டிலும் புதைப்பது, அவர்களை ஆண்டு தோறும் என்றாலும் நினைவு கூர - தரிசிக்க - அவர்களுக்காக வேண்ட - வழிசெய்கிறது. இறந்தவர்கள் தாம் இவ்வுலகில் தெரிந்தும் தெரியாமலும் செய்த தவறுகளுக்காகத் தண்டனை பெற்றபின் இறைவனுடைய இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாறுகிறார்கள் என்பதே கத்தோலிக்க நம்பிக்கையாகும். இறந்தவர்களை தூற்றுவதோ அவர்களின் மனிதப் பலவீனங்களை மிகைப்படுத்துவதோ அவர்களின் நற்பெயரைக் கெடுக்கும் செயற்பாடுகளைத் தொடர்வதோ செய்யத்தகாத செயல்களாகவே கருதப்படுகின்றன். இறந்தவர்களின் படங்கள் மாலையிடப்பட்டு மரியாதையுடன் பேணப்படுகின்றன - அவர்களின் கல்லறைகள் மதிப்புடன் பாதுகாக்கப்படுகின்றன - அவர்கள் ஆற்றிய நற்செயல்கள், அவர்கள் பெயரால் தொடரப்படுகின்றன - இந்த நல்ல செயல் அன்று முதல் இன்றுவரை பேணப்படுவது சிறப்பானதாகும்.

இரண்டாம் உலகப்போரின் போது இறந்த அந்நியர்களின் கல்லறைகள் இன்றும் நம் நாட்டில் திருகோணமலையில் பேணிப்பாதுகாக்கப்படுகின்றமை பாராட்டப்பட வேண்டியதாகும். ஆனால் உள்நாட்டுப் போரில் இறந்து போனவர்களின் கல்லறைகள் கிளறி எறியப்பட்டமை வேதனை மிக்கதாகும்.

வெறும் கல்லறைகளை அழிப்பதால் அவர்களின் வாழ்வையும் பணியையும் அழித்து விட முடியாது. சரித்திரத்தையும் சாதனைகளையும் மூடி மறைத்து விட முடியாது. இறந்தவர்கள் அனைவரும் பூஜிக்கப்பட வேண்டியவர்கள். புனிதர்களாகப் பேணப்பட வேண்டியவர்கள். இனம் - மதம் - நிறம் - என்ற வேறுபாட்டைக் கடந்து மதிக்கப்படவும் மரியாதையுடன் பேணப்படவும் வேண்டியவர்கள்.

யாழ் புனித மரியன்னை பேராலய சேமக்காலை யாழ். மறைமாவட்டத்தின் பல பங்குகளுக்குச் சொந்தமானதாகும். இது யாழ் புனித மரியன்னை பேராலயப் பங்கு, குருநகர் பங்கு, யாழ் அடைக்கல அன்னை ஆலயப் பங்கு, சுண்டிக்குழி யுவானியார் ஆலயப் பங்கு, பண்டியன்தாழ்வுப் பங்கு, பாசையூர்ப் பங்கு, நல்லூர் ஆசீர்வாதப்பர் ஆலயப் பங்கு ஆகிய ஒன்பது பங்குகளுக்குமான பொதுவான சேமக்காலையாகும்.

இங்குதான் இறந்து போன குருக்களின் உடல்களும் அடக்கம் செய்யப்படுகின்றன. இறந்த ஆயர்களின் உடல்கள் புனித மரியன்னை பேராலயத்தில் அடக்கம் செய்யப்படுகின்றன என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய தகவலாகும். ஏறக்குறைய 4 ஆயிரம் கல்லறைகளைக் கொண்ட (ஒரு கல்லறையில் உறவினர்களின் உடல்களும் அடக்கம் செய்யப்படுகின்றன) புனித மரியன்னை பேராலய சேமக்காலையானது இட நெருக்கடி காரணமாக கடந்த பத்து ஆண்டுகளுக்குள் பொதுக் கல்லறைக்குள் அடக்கம் செய்யும் திட்டம் ஒன்றை அமுல்படுத்தி வருகிறது. அதாவது கல்லறை இல்லாதவர்களுக்கு பொதுக்கல்லறைகள் வழங்கப்பட்டு கிட்டத்தட்ட 7 ஆண்டுகளின் பின்னர் புதியவர்களை அங்கு புதைக்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. ஏற்கனவே இங்கு 100 பேருடைய உடல்கள் இங்கு அடக்கப் செய்யப்பட்டுள்ளன.

மைக்கல் சவுந்தநாயகம் அடிகளார் பேராலயத்தில் பங்குத்தந்தையாக பணியாற்றிய காலத்தில் இராஜசிங்கம் வீதிப்பக்கமான சுற்று மதிலை உயர்த்திக் கட்டி எழுப்பியுள்ளார். அது மட்டுமல்லாமல் குருக்களின் கல்லறைகளை ஒரே அளவிலான ஒரே ஒழுங்கு முறை கொண்ட கல்லறைகளாக மாற்றியமைத்த பெருமைக்குரியவர் ஆவார். இவ்வாறு செய்வதனால் உள் வீதிகள், இறந்தவர்களைக் கொண்டு செல்வதற்கு வசதியாகவும் அழகாகவும் அமைக்கப்படலாம். குருக்களின் கல்லறைகள் அழகுற அமைக்கப்பட்டிருக்கும் விதத்தைப் பார்த்து இறைமக்களும் தமது உறவினர்களின் கல்லறைகளைத் தோண்டி மாற்றி அமைக்க சம்மதம் தெரிவிக்கும் பட்சத்தில் மேற்படி பணிக்குத் தேவையான பெருந்தொகைப் பணம் கிடைக்குமானால் அப்பணியினை அழகுற மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கிறார்.

வெளிநாடுகளில் சேமக்காலைகள் அழகு மிகுந்த பூங்கா போல் அமைக்கப்பட்டு, மலர்ச் செடிகள் ஆங்காங்கு நடப்பட்டு, பனிதமான இடமாகக் காட்சி தருகின்றன. அமைதியாகச் சென்று செபிக்கவும் இளைப்பாறவும் ஏற்ற இடமாக அவை இருக்கின்றன. எமது நாடுகளில் சேமக்காலைகள் அவ்வாறு இல்லாதிருப்பது வேதனை மிக்கதே. இங்கிருக்கும் சேமக்காலைகளுக்கு அருகில் செல்லவே பயமாக இருக்கிறது. சேமக்காலைகள் அழகாகவும் அடிக்கடி பயமின்றி விரும்பிச் செல்லத்தக்க இடங்களாவும் இருக்கின்றனமை மரணம் பற்றிய பயத்தையும் உளவியல் ரீதியாகக் குறைக்கத் துணை புரியலாம்.

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்

வெளிநாடுகளில் இருந்து தம் இறந்துபோன உறவினர் பெயரால் நற்பணிகளை மேற்கொள்ள விரும்புவோர் யாழ் புனித மரியன்னை பேராலய சேமக்காலையைப் புதுப் பொலிவுடன் அமைக்கும் பணிக்கு உதவ முன்வருவது இன்றைய காலத்தின் தேவையாகும். இங்கிருப்போரும் பொது நன்மை கருதியும் யாழ் புனித மரியன்னை பேராலய சேமக்காலையின் எதிர்காலம் கருதியும் தம் உறவினர்களின் கல்லறைகளைத் தோண்டி மாற்றி அமைக்கும் பணிக்குச் சம்மதம் தெரிவிக்கவும் தம்மால் இயன்ற பண உதவியைச் செய்யவும் முன்வர வேண்டும்.

சேமக்காலைகளின் கல்லறைகளைத் துப்புரவு செய்து, தூய்மையாகவும் அழகாகவும் வைத்திருக்க அனைவரும் முயல்வோம். ஒரு நாள் நாமும் அடக்கம் செய்யப்படவுள்ள சேமக்காலைகள் நாம் வாழும் போதே நம் கண் முன்னேயே அழகுற மிளிரச் செய்வோம்.



# திருமணக் குற்றமும் மீளமைக்க முடியாத உறவு முறிவும்

திருமணங்களை வாழ்வின் ஓர் அம்சமாக ஏற்றுக்கொள்ளும் அதேவேளைகளில் திருமண முறிவுகளையும் வாழ்வின் அம்சமாக ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டு விடுகின்றது.

ஆகவேதான் திருமணங்கள் சட்டரீதியாக நடைபெறுவது போல் விவாகரத்தும் சட்டரீதியான ஒன்றாகவே பார்க்கப்படுகின்றது. அந்தவகையில், இலங்கையைப் பொறுத்த வரைக்கும் இது ஒரு குடியியல் செயல்முறையாக மாவட்ட நீதிமன்றங்களின் ஊடாகக் கொண்டு நடத்தப்படுகின்றது.

விவாகரத்தை திருமணத் தீர்வையாகப் பெற வேண்டுமென்றால் அதற்குச் சோரம் போதல், வன்ம குடியறுப்பு, மலட்டுத்தன்மை ஆகியவற்றில் ஒன்றை நிரூபித்தல் மூலமே விவாகரத்தைத் தீர்வாகப் பெறக் கூடிய நிலை இன்றைக்குக் காணப்படுகின்றது.




ஆனால், இருதரப்பிலும் திருமணக் குற்றம் இல்லாவிடின் விவாகரத்து இலங்கையில் இன்றைய சட்டப்பரப்பில் சாத்தியமில்லை.

இருந்தபோதிலும் சில இடங்களில் தொடர்ச்சியான அடக்குமுறைகளையும் துன்புறுத்தல்களையும் வன்கொடுமைகளையும் அனுபவித்துக்கொண்டு வரும் பெண்களையும் சில ஆண்களையும் கூடக் கண்டிருக்கின்றோம்.

இவ்வாறான கொடுமைகளை அனுபவித்து இருந்தபோதிலும் மேற்கூறிய மூன்றில் ஒரு குற்றத்தை நிரூபிக்காவிட்டால் விவாகரத்துப் பெற முடியாத நிலை இருக்கின்றது என்பது இன்று விவாதத்துக்குத் திறந்துவிடப்பட்ட ஒரு தலைப்பாகியது.

இலங்கையில் இருக்கும் ஆள்சார் சட்டமான முஸ்லிம் சட்டத்தில் கூட திருமணக் குற்றங்கள் நிரூபிக்கப்படாமல் துணை இருவருமாக சேர்ந்து தமது விவாகரத்தை நடத்திச் செல்ல முடியும். இவ்வாறான நேரங்களில் திருமணத்துக்குப் பின்னரும் கணவன் – மனைவிக்கு இடையிலான பிரச்சினைகள் மற்றும் பழிவாங்கல் மேலும் சமூகத்தில் ஏற்படும் பழிச்சொல் என்பன இல்லாது போகும் என்ற விடயம் தெட்டத் தெளிவானதாகும்.




ஆனால், இன்று இருக்கும் சட்டத்தின் அடிப்படையில் சோரம் போதல் என்பது ஒரு தரப்பினர் நிரூபிக்கப்பட்டால் அதன் பிறகு சமூகத்தின் வாழ்வியலானது ஆகப்பெரிய நெருக்கடியாகவே மாறி விடுகின்றது. விவாகரத்து என்பதற்காகத் திருமணக் குற்றம் ஒன்றை வெளிப்படையாக்கல் ஒரு பிற்போக்கான சிந்தனையாகும்.

ஆகவேதான், இலங்கையிலே வாழுகின்ற முஸ்லிம்களுக்கு இருக்கின்ற ஒரு சலுகையானது பொதுச்சட்டத்தில் இருப்பவர்களுக்கு இல்லை என்பது நிச்சயமாகக் கவலைக்குரியது.

மேலும், சர்வதேச பார்வையை எடுத்து நோக்கினால், சமகால உலகம் இன்று மீளமைக்க முடியாத அளவு உடைவு பெற்ற (**Irretrievable Break down marriages**) திருமணப் பந்தத்தை திருமணக் குற்றம் என்ற எண்ணக்கருவைத் தாண்டி சட்ட ரீதியாக முறிவு பெற அனுமதிக்கின்றது.

இதன் நியாயப்பாடு என்னவெனில் திருமணக் குற்றங்கள் எதுவும் இல்லாத போதிலும் தம்பதியினர் இருவரினதும் திருமண நம்பிக்கை அல்லது பந்தம் முற்றாக மீளமைக்க முடியாதவாறு உடைவு பெற்றிருப்பின் அதன் பின்பும் அந்தத் திருமணத்தைச் சட்டப்படி செல்லுபடியற்றதாக்குவதில் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய பிரச்சினைகளை இல்லாதொழிக்கலாம்.

மீளமைக்க முடியாத – உடைவு பெற்ற உறவைத் தீர்வாக வழங்குவதால் நீதித்துறை வெறுமையாகக் கட்டுக்களை அவிழ்த்து தனி மனித சுதந்திரத்துக்கு வலுச்சேர்க்கின்றது.



**பஸ்றி ஸீ.ஹனியா**
**LL.B (Jaffna)**


ஆனாலும், இறுக்கமான சமூக கலாசாரத்தைத் திருமணத்தில் கொண்டுள்ள இலங்கையரால் இன்று வரை திருமணக் குற்றம் எனும் எண்ணக்கருவைத் தாண்டி தீர்வு கொடுக்க இயலவில்லை. இதனாலேயே இருபக்க சம்மதம் (**Mutual Consent**) மூலம் விவாகரத்துக் கோர முடியாது என்பதும் குறிப்பிடக்கூடியது.

இறுதியாக இலங்கையில் திருமணத் தீர்வுகளாக விவாகரத்து மற்றும் நீதிமுறைப் பிரிவு என்பன காணப்படுகின்றன. இதில் நிவாரணம் பெற விரும்பும் பகுதி மற்றைய தரப்பின் திருமணக் குற்றத்தை நீதிமன்றின் முன் நிரூபிப்பதை விட மீளமைக்க முடியாத உறவு முறிவு என்பதன் மூலம் விரைவான தீர்வைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் விவாகரத்துக்குப் பின்னான முரண்பாடுகளில் இருந்து பாதுகாத்தல் நடைமுறையைக் கொண்டுவரலாம்.

மேலும், எமது நாட்டிலே நாம் ஒரு பகுதியினருக்கு அதாவது முஸ்லிம் சட்டத்தால் ஆளப்படும் பகுதியினருக்கு அவ்வாறான ஒரு சட்டத்தைக் கொடுத்திருக்கின்றோம். இதிலிருந்து எமது நாட்டிலேயே இதற்குச் சிறந்த உதாரணங்கள் இருக்கின்றமை தெளிவாகின்றன.

வழக்குகளில் இலங்கையின் சட்டக்கோட்பாடுகளின் கீழே திருமணக் குற்றம் நிரூபித்தலுக்கு உட்பட்டே ஆகவேண்டும் என்பது விதியாகியதன் காரணம், இலங்கையின் சட்டமானது அன்றைக்கு இருந்த கலாசாரத்தில் சூழப்பட்டிருந்ததாகும். ஆனால், கலாசாரங்களும் மாற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் உட்படுபவை என்பதன் காரணமாக சட்டங்களும் சில மாற்றங்களுக்கு உட்பட வேண்டும். அவ்வாறு ஏற்படுவதன் மூலமே காலத்துக்கு ஏற்றால் போல் சட்டங்களை உருவாக்கி மக்களை அசௌகரியங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ளலாம்.

# வட ஐரோப்பிய நாடுகளில் வெள்ளப்பெருக்கும் காலநிலை மகாநாடும்



எஸ். அன்ரனி நோர்பேட்
(முன்னாள் சிரேஷ்ட
பேராசிரியர்
கொழும்புப் பல்கலைக்கழகம்)

**ஐக்கிய இராச்சியத்தின் அனுசரணையுடன் ஸ்கொட்லாண்டின் கிளாஸ்கோ பசுமை நகரில் (Green City) COP26 காலநிலை உச்சி மகாநாடு நாளை (நவம்பர் முதலாம் திகதி முதல்) இடம்பெற இருக்கின்றது. அதையொட்டி இக்கட்டுரை பிரசுர்மாகின்றது**

(நேற்றைய தொடர்ச்சி)

2002 இல் நிலைபேண் அபிவிருத்தியின் தோற்றம் பற்றிப் பரிசீலனை செய்வதற்கு தென்னாபிரிக்காவின் ஜொகானர்ஸ்பேர்க்கில் சர்வதேச மகாநாடு ஒன்று நடைபெற்றது. இம் மகாநாட்டில் புதிய உடன்படிக்கைகள் எதுவும் கைச்சாத்தாகவில்லை. ஆனால் புதிய இலக்குகள் உருவாக்கப்பட்டன. 1992 இல் றியோ புவி உச்சி மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளில் காலநிலை மாற்றம் பற்றிய சமவாய வரைச் சட்டகம் **(Framework Convention on Climate Change - FCCC)** என்பது ஒன்றாகும். பச்சைவீட்டு வாயுக்களின் வெளி



யேற்றத்தினைக் குறைப்பதற்கு ஐரோப்பிய யூனியனையும் 37 கைத்தொழில் நாடுகளையும் ஏற்றுக்கொள்ளக் கூடிய இலக்கு ஒன்றுக்கு இணங்க வைப்பதற்கான பிரதான அம்சத்தினை இவ் உடன்படிக்கை கொண்டிருந்தது.

1990 இல் காணப்பட்ட பச்சைவீட்டு வாயு வெளியேற்ற மட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு நாடும் எவ்வளவு குறைப்பினை **(Reductions)** மேற்கொள்ள வேண்டும் என்பதை கியாட்டோ பின்னேடு உறுதி செய்தது. ஏறக்குறைய 55 நாடுகளுக்குக் குறையாத அரசாங்கங்களினால் பின்னுறுதிப்படுத்தப்பட்ட **(Ratified)** பின்னர் இது அமுலுக்கு வரும். வளிமண்டலத்தில் தற்பொழுது காணப்படும் அதிகளவான பச்சைவீட்டு வாயுக்களின் வெளியேற்றத்திற்கு விருத்தியடைந்த நாடுகளில் கடந்த 150 வருடங்களுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்ட கைத்தொழில் நடவடிக்கைகளே காரணமாக இருந்தன. இதனால் அந்நாடுகளே அதிகளவான பொறுப்பை ஏற்க வேண்டும் எனப் பின்னேடு எடுத்துக் கூறியது. இந்த ஒப்பந்தம் 1997 டிசெம்பர் 11 ஆம் திகதி ஜப்பானில் உள்ள கியாட்டோ என்னும் நகரில் கைச்சாத்திடப் பட்டதுடன், ரஷ்யக் கூட்டரசு பின்னுறுதிப்படுத்தியதன் பின்னரே 2005 பெப்ரவரி 16 இல் அமுலுக்கு வந்தது. இதனை அமுலாக்குவதற்கான விதிகள் மரக்காஸ் **(Marrakesh)** என்னுமிடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதனால் மரக்காஸ் ஒப்பந்தம் என அழைக்கப்பட்டது. பூகோள ரீதியாகப் பச்சைவீட்டு வாயுக்களின் வெளியேற்றத்தினைக் குறைத்து உறுதி நிலையில் பேணுவதற்கு முதற்படியாக இந்த ஒப்பந்தம் அமைந்திருந்தது.

ஆனால், கியாட்டோ ஒப்பந்தத்தின் பின்னர் சில பிரச்சினைகள் ஏற்பட்டன. இரு நூற்றாண்டுகளுக்கு மேலாக கட்டுப்பாடற்ற முறையில் இடம்பெற்று வந்த சுவட்டு எரிபொருள் குறிப்பாக, நிலநெய், நிலக்கரி ஆகியவற்றின் பயன்பாட்டினால் ஏற்பட்டுள்ள தாக்கங்களைக் குறைப்பதற்கு இந்த ஒப்பந்தம் போதுமானதாக இருக்கவில்லை. அத்துடன் சூழல் மீதான தாக்கங்களைத் தடுப்பதற்கு புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தலாம் என்பதினால் அமெரிக்க ஜனாதிபதி அதற்கு எதிர்ப்பைத் தெரிவித்தார். அதேவேளை, 2009 இல் கொப்பனேகனில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் பற்றிய மகாநாடு ஒரு வரலாற்று நிகழ்வாகக் கருதப்பட்டது. ஏறக்குறைய 115 அரசத் தலைவர்கள் இதில் பங்கு பற்றிய அதியுயர் மகாநாடாக இது அமைந்தது. ஆனால் மகாநாட்டின் போது மண்டபத்திற்கு வெளியே குழப்பம் செய்தோர் பெருமளவு




கைது செய்யப்பட்டனர். கோடிக்கணக்கான மக்களின் எதிர்பார்ப்பிற்கு மாறாகப் பேச்சு முற்றாகவே கற்றோர் உயர்குழாமைச் சேர்ந்ததாகவே அமைந்திருந்தது. மகாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகளும் தமது அரசுகளின் தேசிய (சுய) நலன்களிலேயே அக்கறை கொண்டிருந்தனர். எதிர்காலப் பேச்சுகளை சனநாயகப் பாங்கான ஐக்கிய நாடுகளிடமிருந்து நீக்கி, ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆதிக் கம் செலுத்தும் உலக வங்கியிடம் எடுத்துச் செல்லப் பரிந்துரை செய்யப்பட்டது. அத்துடன் பேச்சுகள் தொடங்குவதற்கு முன்னரே ஐக்கிய அமெரிக்கா பல தடை களை ஏற்படுத்தியது.

இதன் பின்னர், 2015 நவம்பர் 13 தொடக்கம் டிசெம்பர் 12 வரை பிரான்ஸில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகளுக்கான காலநிலை மாற்றம் பற்றிய மகாநாட்டில் 200 நாடுகள் பங்கு பற்றி சட்டரீதியான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. வெப்பநிலை உயர்வினை மட்டுப்படுத்தக் கூடிய பேரார்வம் மிக்க இலக்குகளை இந்நாடுகள் தீர்மானித்தன. இந்த இலக்குகளை அடைந்து கொள்வதில் நாடுகளே பொறுப்புக் கூற வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. சுவட்டு எரிபொருள் நிலையிலிருந்து விலகித் தெளிவான சக்தி வலுப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட விரைவானதொரு நிலைமாற்றம் நோக்கி நகர்வதற்கு இது வழிவகுத்ததாக அரசுகளும் தொழிலதிபர்களும் தெரிவித்தனர்.




ஆறு ஆண்டுகளுக்கு முன்னர், 2009 இல் 2 பாகை செல்சியஸ் என ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம், இம் மகாநாட்டில் 1.5 பாகை செல்சியஸ் என இலக்கு வைக்கப்பட்டது.

பச்சை வீட்டு வாயுக்களின் வெளியேற்றங்களைச் சில தசாப்தங்களுக்குள் தேறிய பூச்சிய நிலைக்குக் கொண்டு வருதல் என்பதனைப் பாரிஸ் ஒப்பந்த வாசகங்கள் குறிப்பிட்டு நிற்கின்றன. எனவே கியாட்டோ ஒப்பந்தமானது முற்றாகவே இதிலிருந்து வேறுபடுகின்றது. இந்த 1997 ஆம் ஆண்டு ஒப்பந்தமானது செல்வந்த நாடுகளுக்கும், வளர்முக நாடுகளுக்கும் இடையேயான கடப்பாடுகளில் பல வேறுபாடுகளைக் கொண்டிருந்தமையுடன் வெளியேற்றங்களைக் குறைப்பதிலும் தோல்வி கண்டது. பாரிஸ் ஒப்பந்தம் அரசியல் விருப்பிலேயே பெரிதும் தங்கியிருந்தது. இதனால் நாடுகள் தமக்கெனக் காலநிலைக்கான செயற்பாட்டுத் திட்டங்களைக் கொண்டிருந்தன.

இவ்வாறு காலத்திற்குக் காலம் இடம்பெற்று வந்த உச்சி மகாநாடுகள் மூலம் மனிதனால் உருவாக்கப்பட்ட காலநிலை மாற்றத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. வெள்ளப்பெருக்குகளையும் வெப்ப அலையையும் கட்டுப்படுத்த அரசியல்வாதிகள் தவறி விட்டனர் என விஞ்ஞானிகள் குற்றம் சாட்டினர். வட ஐரோப்பாவில் இடம்பெற்ற மோசமான அழிவுகளுக்குச் சில நாள்களுக்கு முன்னர் சுவட்டு எரிபொருள்களிலிருந்து அடுத்து வரும் 9 வருடங்களுக்கு விலகிச் செல்வதற்கான பூர்வாங்கத் திட்டமொன்றை ஐரோப்பிய யூனியன் அறிவித்தது. 2050 இல் காபன் - நடுநிலை **(Carbon - Neutrality)** அணியாக 27 நாடுகளை உருவாக்குவதே இத்திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. இதன் பின்னர் சூழலியல்வாதிகளும், அரசியல்வாதிகளும் வெள்ளப்பெருக்கு மற்றும் காலநிலை மாற்றத்தின் தாக்கத்திற்கு இடையில் ஓர் இணைப்புக் கோட்டினை உருவாக்கத் துரிதமாக முனைந்தனர்.

2021 நவம்பர், 1 இல் ஐக்கிய இராச்சியத்தின் அனுசரணையுடன் கிளாஸ்கோ பசுமை நகரில் **(Green City) COP26** காலநிலை உச்சி மகாநாடு இடம்பெற இருக்கின்றது. மனித இனத்திற்கு ஒரு திருப்பு முனையாக அமையப் போகும் இக்காலநிலை உச்சி மகாநாடு வெப்பநிலையைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு முயற்சியாகும். அரசுத் தலைவர்கள், அமைச்சர்கள், கைத்தொழிலதிபர்கள், மாற்றத்தினை ஏற்படுத்துவோர் எனப் பலதரப்பட்ட அறிஞர்கள், இரு நூறுக்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து இக் காலநிலை உச்சி மாநாட்டில் பங்குபற்ற இருக்கின்றனர். இவ்வருடம் ஐரோப்பா, அமெரிக்காவுக்கு மேலாகப் பேரழிவை ஏற்படுத்திய காட்டுத் தீ, வெள்ளப்பெருக்கு மற்றும் மத்திய கிழக்கு, ஆபிரிக்கா போன்றவற்றின் சில பகுதிகளில் ஏற்பட்ட மோசமான வறட்சி ஆகியவற்றிலிருந்து எதிர்காலத்தில் எமது கோளைப் பாதுகாப்பதற்கும், பூகோள வெப்பமடைதலை 1.5 பாகை செல்சியஸில் கட்டுப்படுத்த வேண்டிய தேவையும் உள்ளது. காலநிலைப் பிரச்சினையைக் கையாள்வதற்கான காலம் கடந்து விட்டாலும், உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இம் மாநாடு உதவும்.

(28 பக்கம் பார்க்க)



# 300 இற்கும் மேற்பட்ட தென்பகுதி சிங்களக் குடும்பங்கள் வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவினுள் பதிவு!

## ஜனாதிபதியின் உத்தரவு என்கிறார் சிவசக்தி ஆனந்தன்

ஜனாதிபதியின் உத்தரவின் பெயரால் இதுவரையும் 300 இற்கும் மேற்பட்ட தென்பகுதியைச்சேர்ந்த சிங்களக்குடும்பங்கள் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தினுள் பதிவு செய்யப்பட்டுள்ளனர் என வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியா வடக்கில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றத்தைக் கண்டிக்கும் வகையில் போராட்டத்தை நடத்துவதற்காக வவுனியா நகரசபை மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர் –

வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவினுள்ளே அரசாங்கம் 1, 500 இற்கும் மேற்பட்ட பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்களைக் குடியேற்றுவதற்கான ஆரம்ப வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இந்த வேலைத்திட்டம் ஜனாதிபதி வவுனியாவிற்கு வருகை தந்தபோது, ஏற்கனவே திட்டமிட்டு குடியேற்றப்பட்ட நாமல்கம மற்றும் பொகஸ்வேவ கிராமத்தைச் சேர்ந்த சிங்கள மக்கள் நிர்வாக ரீதியாக அநுராதபுரத்துக்கு சென்று தமது கடமைகளைச் செய்யமுடியாத காரணத்தால் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துடன் தம்மை உள்வாங்குமாறு கேட்டுக் கொண்டதற்கு அமைவாக ஜனாதிபதியின் உத்தரவின் பெயரால் இதுவரையும் 300 இற்கும் மேற்பட்ட தென்பகுதியை சேர்ந்த சிங்களக் குடும்பங்கள் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தினுள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இன்னும் மேலதிகமாக 1500 இற்கும் மேற்பட்டவர்களை குடியேற்றம் செய்யப்படவுள்ள காரணத்தால் இது இன விகிதாசாரத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும்.

நெடுங்கேணி பிரதேசசபை பறிபோகும் ஆபத்து உள்ளது. வவுனியா வடக்கு பிரதேசசெயலாளராககூட பெரும்பான்மை இனத்தவரை கொண்டுவர உள்ளார்கள். ஏற்கனவே இந்த அரசாங்கம் மகாவலி எல் வலயத்தின் ஊடாக மாமடுவில் இருந்து கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருணாட்டுக்கேணி வரை திட்டமிட்டு குடியேற்றத்தை விஸ்தரிப்பு செய்வதால் வடக்கு மாகாணத்தில் இன விகிதாசாரத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும்.

எனவே, இந்த விடயங்களை முன்னிலைப்படுத்தி எதிர்வரும் வாரம் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்பு போராட்டத்தை நடத்தவுள்ளோம். நாட்டில் விவசாயிகளுக்கான விவசாய உரம் நிறுத்தப்பட்டுள்ளது. எனவே இரசாயன உரத்தை அரசாங்கம் உடனடியாக வழங்க வேண்டும். அதிபர் ஆசியரியர் சம்பள முரண்பாடுகள் உள்ளன. அந்த விடயங்களையும் வலியுறுத்துவதோடு மாகாணசபைக்குரிய அதிகாரங்களையும் மத்திய அரசாங்கம் சுவீகரிக்கவுள்ளது. ஆகவே, எமது பிரதான நோக்கம் சிங்களக் குடியேற்றத்தை மையப்படுத்தியதாக இருந்தாலும் அதனோடு இணைந்து குறித்த விடயங்களையும் கவனத்தில் எடுத்து கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெறும் எனத் தெரிவித்தார்.



# வட ஐரோப்பிய ..........

(27ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதில் நிலக்கரி, கார்கள், பணம், மரங்கள் ஆகிய நான்கு விடயங்கள் கருத்தில் கொள்ளப்படும். புதிதாக நிலக்கரி வெப்ப அனல் மின் நிலையங்களை கட்டமைக்கப் போவதில்லை என சீனா உறுதியளித்துள்ளது. உலக பச்சைவீட்டு வாயுக்களின் வெளியேற்றத்தில் சீனா 28 சதவீதத்தைக் கொண்டுள்ளது. ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் போரிஸ் ஜோன்சன் பச்சைவீட்டு வாயுக்களினால் ஏற்படும் பூகோள வெப்பநிலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு தொடர்ச்சியான அழைப்பினை விடுத்து வருகின்றார்.

2021 காலநிலை மாற்றம் பற்றிய அரசாங்கங்களுக்கு இடையிலான குழுவின் (IPCC) அறிக்கையில் மனித நடவடிக்கைகளினால் மோசமான வெப்ப அலைகள், கடுமையான படிவு வீழ்ச்சி, வறட்சி, அயனச் சூறாவளிகள் என்பன தொடர்ச்சியாக ஏற்படும் என்ற எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. அத்துடன் இதற்கெதிராகச் செயற்படுவதற்கான காலம் இன்னும் இருக்கின்றதனால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது. சுவட்டு எரிபொருள்களை எரிப்பது போன்ற மானிட நடவடிக்கைகளினால் ஏற்படும் பச்சை வீட்டு வாயுக்களின் வெளியேற்றத்தினை உறுதியாகக் குறைப்பதன் மூலமே காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்த முடியும். எனவே, இது தொடர்பான கொள்கைகளை முன்வைப்பதுடன், தேறிய பூச்சிய மட்டத்தினை உலகம் அடைந்து கொள்வதற்கான ஏது நிலையை ஏற்படுத்துவதே **COP 26** இந்த உச்சி மகாநாட்டின் பிரதான இலக்காக உள்ளது.

2040 இல் உலகில் இச்சிய – வெளியேற்றத்தினைக் கொண்ட வாகனங்களை மட்டும் விற்பனைக்கு விடுதல், ஒவ்வொரு நாடும் 2030 இல் தமது காபன் வெளியேற்றத்தினை 68 வீதமாகக் குறைத்தல், இந்நூற்றாண்டின் மத்தியில் தேறிய பூச்சிய நிலையை அல்லது காபன் நடுநிலையை (Carbon Neutrality) அடைதல், நிலக்கரி அனல் மின்சக்திப் பயன்பாட்டினை 2040 இல் வளர்முக நாடுகளும், 2030 இல் விருத்தியடைந்த நாடுகளும் முடிவுறுத்த வேண்டும். மரங்களின் இழப்பு நிறுத்தப்பட்டு மீள்நிலைக்குக் கொண்டு வரப்படுவதினால் 2030 இல் உயிர்ப்பல்வகைமை மீளவும் நிலைநிறுத்தப்பட வேண்டும். இதற்குப் பூகோளச் சராசரி வெப்பநிலை 1.5 பாகை செல்சியஸ் ஆகக் குறைக்கப்பட வேண்டும்.

2015 இல் இடம்பெற்ற பாரிஸ் உடன்படிக்கையின் ஒரு பகுதியாகக் காலநிலை நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு உதவும் வகையில் வருடாந்தம் 100 பில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்த உடன்பாடு நிறைவேற்றப்படவில்லை என்பது தான் உண்மை. உலகின், ஏறக்குறைய 60 பாரிய வங்கிகள் பாரிஸ் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்பு சுவட்டு எரிபொருள் தொடர்பான செயற்பாடுகளுக்கு 3.8 ட்றில்லியன் (Trillion) டொலர்களை வழங்கியிருந்தன என்ற அதிர்ச்சி தரும் புள்ளி விவரங்கள் அண்மைய அறிக்கையில் வெளியிடப்பட்டன. அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளே இதற்குக் காரணமெனக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

கிளாஸ்கோவில் இடம்பெறவிருக்கும் இம்மகாநாட்டின் மூலம் அரசாங்கங்கள், வர்த்தகர்கள், சிவில் சமூகம் மற்றும் இளைஞர்களை ஒன்றிணைத்துக் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பிரச்சினைகளில் துரிதமான முன்னேற்றத்தை அடைந்து கொள்ள ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் போரிஸ் ஜோன்சன் மிகவும் ஆவலாக உள்ளார். காலநிலை மாற்றத்தின் மோசமான தாக்கங்களுக்கு ஏற்ப மக்கள் இயைபாக்கம் பெறுவதற்கும், தாக்குப் பிடிக்கவும் உதவுதல், கோளத்தின் உயிர்ப்பல்வகைமையைப் பேணிப் பாதுகாப்பதற்கு இயற்கையான வாழிடங்கள் மற்றும் சூழல் தொகுதிகளைப் பாதுகாத்தல், மலிவான, புதுப்பிக்கக் கூடிய சக்திப் பயன்பாட்டினை ஊக்குவிப்பதன் மூலம் சக்தியின் நிலைமாற்றத்தினைத் துரிதப்படுத்தல், பூச்சிய வெளியேற்றத்தினைக் கொண்ட வாகனங்கள் மூலம் எமது வளியைச் சுத்தமாக வைத்திருப்பதற்கான பூகோள நிலைமாற்றத்தினை (Transition) விரைவுபடுத்தல், பசுமை வேலைகளுக்கான சந்தர்ப்பங்களை உருவாக்கவும் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் எமது நிதி முறைமைகளை ஊக்கப்படுத்தல் ஆகியன இக்காலநிலை உச்சி மாநாட்டின் இலக்காக உள்ளன. எனவே, உயிர்ச்சுவட்டு யுத்தத்தில் முடிவினை எட்டுவதற்கு அரசுகளுக்குக் காத்திரமான அரசியல் ஈடுபாடு தேவைப்படுகின்றது. காலநிலை மாற்றத்தின் நெருக்கடிகளைப் பல்வேறு தரப்பினது ஒத்துழைப்பு மூலம் இம்மகாநாடு எவ்வளவு தூரம் தணிக்கும் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

# இவ்வாண்டின் சூரன்போர் எப்போது 09 ஆம் திகதியா? 10 ஆம் திகதியா?

## பஞ்சாங்கங்களில் குழப்பம்


**கௌசிகர்**

*தமிழ் நாட்டில் திருச்செந்தூரிலும் ஏனைய அனைத்து ஆலயங்களிலும் சூரசம்காரம் செவ்வாய்க்கிழமை 09.11.2021 அன்று இடம்பெறுகின்றது.*

*சகல தமிழகப் பஞ்சாங்கங்களிலும் ஸ்கந்தஷ்டி விரதம் செவ்வாக்கிழமை 09 - 11 - 2021 அன்றுதான். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலிலும் சூரன் போர் 09 - 11 - 2021 செவ்வாய்க்கிழமையே.*

*சைவத் தமிழர்கள் அனுஷ்டிக்கும் முக்கிய விரதம் ஸ்கந்தஷ்டி. இந்த விரதம் 05-11 - 2021 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது. மாலையில் சூரியன் அஸ்தபிக்கும் நேரத்தில் சூரன் போர் நிகழும். அந்த நேரத்தில் ஷஷ்டி இருக்க வேண்டும். இவ்வாறு உள்ள 09-11-2021 செவ்வாய்க்கிழமை ஸ்கந்தஷ்டி விரதம் சூரசம்காரம் என்று தமிழகப் பஞ்சாங்கங்கள் அனைத்திலும் உள்ளன.*

*திருச்செந்தூர் உட்பட அனைத்துத் தமிழக முருகன் ஆலயங்களிலும் 09-11-2021 அன்று சூரன் போர் நிகழ உள்ளது. மகாராஜஸ்ரீ து.ச. இரத்தினசபாபதிக் குருக்களின் மாவிட்டபுரத்தில் 09-11-2021 செவ்வாய்க்கிழமை சூரன் போர் நிகழ உள்ளது.*


29 14 5 19 வெள் - கார்த்திகசுத்த பிர 48-28 (01-23இ), சுவா 01-43 (06-41கா), விசா 56-08 (04-27அகா), ஆயு 08-21, கிமு 21-16, பவ 27-10, தி 14-49, இஷ்டி, விருச் சந் 43-49
30 15 6 20 சனி - துவி 42-36 (11-02இ), அனு 53-44 (03-30இ), சௌ 00-45, சோப 52-12, பால 15-33, கௌ 27-03, தி 07-27, சந்-தரி, யமதுவிதியை, கரிநாள்
1 16 7 21 ஞாயி - திருதி 36-44 (08-42இ), கேட் 49-40 (01-52இ), அதி 45-13, தை 09-39, கர 27-05, தி 06-47, திரிலோசனஜீரக கௌரீவிரதம், தனுசு சந் 49-40, துலா உற்சவ ஆரம்பம்
2 17 8 22 திங் - சதுர் 31-00 (06-24மா), மூல 45-46 (12-18இ), சுகர் 37-36, வணி 03-49, பத் 27-11, பவ 58-00, தி 08-22, சதுர்-விர, நாகசதுர்த்தி, மணவாளமாமுனிகள்
3 18 9 23 செவ் - பஞ் 25-32 (04-13ப), பூராட 42-09 (10-52இ), த்ருதி 30-12, பால 25-32, கௌ 27-22, தி 08-19, திருச்செந்தூர் சூரசம்ஹாரம், ஸ்கந்தஷஷ்டி, மகர சந் 56-24
4 19 10 24 புத - ஷஷ் 20-33 (02-13ப), உத்ரா 39-09 (09-40இ), சூல 23-13, தை 20-33, கர 27-45, தி 01-09, 48-46
5 20 11 25 வியா - ஸப் 16-18 (12-31ப), திருஓ 36-51 (08-44இ), கண் 16-47, வணி 16-18, பக் 28-09, தி 46-37



தமிழக பாம்பு வாக்கிய பஞ்சாங்கத்தில உள்ள 2021 சூரன் போர்

*ஆனால், இங்கு ஒரு பஞ்சாங்கத்தில் 10-11-2021 புதன்கிழமை சூரன் போர் என்று பிழையாகக் குறிக்கப்பட்டுளளது. அன்று சூரன் போர் நடக்கும் மாலை நேரத்தில் ஷஷ்டி இல்லை.*

*பிழையான நாளில் சூரன் போர் செய்தால் மக்களிடம் உள்ள அசுர குணம் நீங்காது.*

*இது வாள் வெட்டுக் கலாசாரம், போதை வஸ்து வியாபாரம் போன்றவற்றையே வளர்க்கும். எனவே இப்பிழையைத் திருத்த வேண்டியது அந்தப் பஞ்சாங்கத்தினரது கடமை. இலங்கைச் சைவர்கள் சரியான நாளில் விரதம் அனுஷ்டிக்க வேண்டும்.*

*ஆலயங்களில் சரியான நாளில் சூரசம்காரம் செய்ய வேண்டியது ஆலய நிர்வாகத்தினரது கடமை.*

*திருச்செந்தூர் ஆலய தொலைபேசி எண்: 91- 4639 - 242 221*
**http://tiruchendur.org/tiruchendurdinamalar.htm**

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர்களின் தலைவனாக சம்பந்தன் பெயரளவிலேயே!

## பிள்ளையான் கிண்டல்

பெயரளவிலேயே தமிழர்களின் தலைவன் என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற சம்பந்தனின் திருகோணமலை மாவட்டம் தமிழர்களின் அடையாளமே இல்லாமல் போகின்ற துர்ப்பாக்கிய நிலையில் இருக்கின்றது என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியுதவியில் பொது அமைப்புகளுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பில் நடைபெற்றது.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்–

இந்த மாவட்டம் கிராமிய பொருளாதாரம், விவசாயத்தில் தங்கியுள்ள மாவட்டம். இந்த நாட்டின் உணவுத் தேவைக்கான பெருமளவான அரிசியை வழங்கும் மாவட்டம். மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்கம் கொள்கை ரீதியான ஒரு முடிவை எடுத்தால் அந்த முடிவால் மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு என்ன நன்மை, அந்த முடிவால் பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதையே நாம் பார்க்க வேண்டும்.

யூரியா பாவனையால் நீரிழிவு நோய் ஏற்படுகின்றது, மலட்டுத்தன்மை ஏற்படுகின்றது. மருத்துவ சங்கத்தின் ஆய்வின்படிபாடசாலைச்சிறுவர்களுக்கு 20வீதமளவில் சிறுநீரகம் செயலிழப்பதற்கான சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. இன்னும் இருபது வருடங்களில் சிறுநீரகங்கள் செயலிழந்துவிடும்.

சேதனப் பசளை திட்டத்தால் சில பிரச்சினைகள் உள்ளன. அதனை நாம் வெல்வோம். வயலுக்குள் குலைகளை வெட்டி மாட்டெரு, ஆட்டொரு என்பவற்றை போட்டு கடின உழைப்பை செய்தால் நான்கைந்து வருடங்களுக்கு நல்ல விளைச்சளைப் பெறமுடியும். அதனால் நோய்களும் ஏற்படாது. சுகாதாரச் செலவுகள் குறைவடையும். ஆயுளும் அதிகரிக்கும்.



அதனை விடுத்து அசேதனப்பசளைகளால் நாற்பது வயதிலேயே நீரிழிவு, சிறுநீரகம் செயலிழப்பு ஏற்படுகின்றது. நூறு, இருநூறு ஆண்டுகளில் இது பெரும் சமூக அழிவாக மாறும்.

இப்படியான சூழலில் தமிழ்த் தேசியம் பேசுபவர்களும்புலம்பெயர்ந்தவர்களும் இயற்கைக் கழிவுகளையும் ஆட்டெரு, மாட்டெரு, இலைகுலை கழிவுகளை பயன்படுத்தி சேதனப் பசளையை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை ஆரம்பித்து அதன் மூலம் வேலைவாய்ப்புகளையும் வழங்கி முழு இலங்கைக்கும் சேதனப் பசளையை விநியோகிக்க முடியும்.

அதனை விடுத்து இந்த போலித் தேசியவாதிகள் விவசாயிகளை கொல்லாதே, குழிதோண்டி புதைக்காதே என கைகளில் பதாகைகளுடன் கோஷமிடுகின்றனர். உண்மையான தேசியம் என்பது அரச கொள்கையோடு சேர்ந்து மக்களை வாழவைப்பதாகும். போலித் தேசியம் பேசுகின்றவர்கள் தங்களால் முடிந்தால் வெளிநாட்டில் உள்ளவர்களுடன் பேசி நாங்கள் இங்கு வழங்குகின்ற பத்து ஏக்கர் காணிகளை பயன்படுத்தி சேதனப் பசளையை உற்பத்தி செய்யும்படி கூறுங்கள், இங்கிருக்கின்ற பிள்ளை களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும்படி கூறுங்கள். முழு நாட்டுக்கும் உரத்தை வழங்கக்கூடிய நிறுவனமாக மாற்றினால் நாங்கள் மட்டக்களப்பில் தீர்மானிக்கின்ற சக்தியாக வர்த்தகத்தில் மேம்பட முடியும்.

உரத்தை போடாமல் செய்து மக்களை நாளை பட்டினிச் சாவிற்குள் தள்ள வேண்டாம். நல்ல முடிவுகளை எடுக்கின்ற போது அதிலிருக்கும் கசப்பான விடயங்களை மாத்திரம் எடுக்காமல் அதனை தாண்டி சமுதாய நலன் பற்றி சிந்திக்க வேண்டும்.

ஒட்டுமொத்தமான தேச நலனோடு ஒட்டி மட்டக்களப்பை, கிழக்கு மாகாணத்தை வாழவைக்க வேண்டும். நாங்கள் வரலாறுகளையும் இனிய தமிழையும் பேசுவதால் தொடர்ந்தும் கிழக்கு மாகாணத் தமிழர்களை மேம்படுத்த முடியாது. நடைமுறைச் சாத்தியமான பொருளாதார ரீதியான கல்வி ரீதியான மாற்றத்தைச் செய்ய வேண்டுமானால் மட்டக்களப்பு தமிழர்களின் ஒத்துழைப்பு மிகமிக அத்தியாவசியமாக இருக்கின்றது. அதற்கு அரசியல் தீர்மானங்கள் மிக முக்கியமாக இருக்கின்றன.

இன்று பெயரளவிலே தமிழர்களின் தலைவன் என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற சம்பந்தனின் திருகோணமலை மாவட்டம் தமிழர்களின் அடையாளமே இல்லாமல் போகின்ற துர்ப்பாக்கிய நிலையில் இருக்கின்றது. அவர் இறக்கின்றபோது விட்டுச்செல்கின்ற விடயம் யாதெனில் திருகோணமலையை அழித்துவிட்டுச் சாகின்றேன் என்பதாகும். தமிழர்களை வாழவைத்து விட்டுச் செல்கின்றேன் என அவரால் நிச்சயம் சொல்ல முடியாது.

முதலமைச்சராக நான் இருந்தபோது நூறு ஏக்கர் காணியை பெற்று மாகாண சபையை மட்டக்களப்பிற்கு மாற்ற இருந்தேன். பின்னர் ஒரு கட்டத்தில் அது தேவையில்லை என்ற முடிவிற்கு வந்தேன். மாகாணசபையை மத்திய மாவட்டமாகிய திருகோணமலையிலிருந்து நகர்த்திவிட்டால் அங்கு சம்பந்தனின் வீடுகூட இல்லாமல் போகக்கூடிய சூழல் இருக்கின்றது.

சிங்கள மக்கள் ஆட்சியமைக்கின்றார்கள் என்பதற்காக இதனை சொல்லவில்லை. தமிழர்களுக்கான வேலைத் திட்டம் அங்கில்லை. விவசாயிகளுக்கோ மீன்பிடியாளர்களுக்கோ நம்பிக்கை தரக்கூடிய தலைவர்கள் அங்கில்லை. காணிபிடித்துவிற்பவர்களும்போதைக்கு அடிமையாகி உழைப்பவர்களுமே அங்கும் இருக்கின்றார்கள்.

ஆகையால் போலியாக இயங்காமல் உண்மையாக நேர்மையாக இயங்க வேண்டும் இல்லாவிட்டால் விட்டுவிட்டு வெளிநாடுகளுக்கு சென்று தங்கள் பேரப்பிள்ளைகளோடு வாழ வேண்டும்.

இந்த மண்ணில் நாங்கள் வாழ்கின்றோம் என்ற அடிப்படையில் இந்த மண்ணிலிருந்துதான் வருமானத்தை ஈட்ட வேண்டும். எங்கள் பிள்ளைகளுக்கு நம்பிக்கைஊட்டிசிறந்தபொருளாதாரம், கல்வியை கொடுப்பதற்கான சூழலை உருவாக்க நாம் பாடுபடவேண்டும். இங்கு குடும்ப பிணக்குகள் அதிகமாக இருக்கின்றன.

இவற்றையெல்லாம் குறைக்கக் கூடிய அறிவு சார்ந்த மாற்றங்களை உருவாக்கி தனித்துவமாக வாழக்கூடிய பொருளாதாரக் கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு உங்களோடு இணைந்து நானும் பாடுபடுவேன். எங்களால் எடுக்கப்படுகின்ற முடிவுகளுக்கு நீங்கள் ஒத்துழைப்பு வழங்குவதுபோல எங்களால் வழங்கப்படுகின்ற பொருள்களும் சரியாக பயன்படுத்தப்பட வேண்டும். – எனத் தெரிவித்தார்.

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பிலான விவரங்களை அரசாங்கம் விரைந்து வெளிப்படுத்த வேண்டும்

## ரஞ்சித் மத்துமபண்டார கோரிக்கை

ஈஸ்டர் தாக்குதல் நடந்து 30 மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இது தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தனது அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்து ஏறக்குறைய ஒரு வருடமாகிறது. இந்தத் தாக்குதலில் பலர் பலியாகினர்.அது ஒரு மதப் பிரிவினரையோ அல்லது இனக்குழுவையோ மட்டும் பாதிக்கும் பிரச்சினையும் அல்ல. இது முழு நாட்டையும் பாதிக்கும் விடயம். எனவே, இந்த தாக்குதல் தொடர்பான சரியான தகவல்களையும், பதில் சொல்ல வேண்டியவர்களையும் வெளிப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.அதைத் தாமதப்படுத்துவது என்பது நீதியை தாமதப்படுத்துவதற்கு சமனானது.

– இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார.

இது தொடர்பில் அவர் வழங்கியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

சூம் தொழிநுட்பத்தின் ஊடாக வெளிநாட்டில் உள்ள இலங்கையர்கள் குழுவொன்றுடன் நடத்திய கலந்துரையாடல் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக அருட்தந்தை சிறில் காமினி குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு அழைக்கப்பட்டமை பாரதூரமான விடயமாகும்.அரச புலனாய்வுப் பிரிவின் பிரதானியால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது அவரது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியதாக எழுந்த குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இந்த முறைப்பாட்டை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் அறிவித்துள்ள காரணம், இலங்கை தண்டனைக் கோவைச் சட்டம் மற்றும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் கீழ் தண்டிக்கப்படக் கூடிய குற்றம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். அவதூறு என்ற விடயம் ஒரு குற்றவியல் குற்றமோ அல்லது ஐ.சி.சி.பி. ஆர் சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட வேண்டிய ஒரு குற்றமோ அல்ல.

அரச புலனாய்வுப் பிரிவின் தலைவரின் பிராதன பொறுப்பாக அமைவது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரனைகளைப் பற்றி கேள்வி எழுப்புகின்றவர்கள் மற்றும் அது தொடர்பில் தகவல்களை வெளியிடுகின்றவர்களுக்கு எதிராக குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடுகளை மேற்கொண்டு அவர்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதை விட ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உயிர்த்த ஞாயிறுதாக்குதல்தொடர்பானஜனாதிபதிஆணைக்குழு முன்வைத்துள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டுவிசாரணைகளைமேற்கொண்டுதாக்குதலின் பிரதான சூத்திரதாரி மற்றும் அதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களைக் கண்டறிந்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்குத் தேவையான ஒத்தாசைகளை வழங்க வேண்டும். அதுவல்லாமல் வீணாக காலத்தை கடத்துவதில் பலனில்லை.

ஈஸ்டர் தாக்குதலில் கத்தோலிக்க திருச்சபையின் தலையீட்டைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் அல்லது அச்சுறுத்தும் முயற்சியாகவே அவரது நடவடிக்கைகள் பார்க்கப்படுகின்றன.

பாதிக்கப்பட்டவரின் சார்பாக கத்தோலிக்க திருச்சபை முறைப்பாடளித்ததாக குற்றம் சாட்டி விசாரணையை முழுவதுமாக திசை திருப்புவதே அடிப்படை நோக்கமாக இருக்கலாம். அரசாங்கத்தின் சமீபகால நடவடிக்கைகளை நோக்கும் போது குற்றம் சாட்டப்பட்டவர்களை முற்றாக விடுவித்து, விசாரணை களை மேற்கொண்ட அதிகாரிகள் மீது வழக்குத் தொடரப்பட்டதையுமே பார்த்தோம். அதிகாரத்தைப்பெறுவதற்காக ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் உணர்ச்சி கரமான கருத்துக்களைத் தெரிவித்து மக்களைத் தவறாக வழிநடத்திய வன்னம், தேசிய பாதுகாப்பு மற் றும் இறையாண்மைக்காகக் குரல் எழுப்பிய அர சாங்கம், அவர்கள் கொடுத்த வாக்குறுதி தொடர்பில் கேள்வி எழுப்பும் போது தற்போது இப்படி நடந்து கொள் வது கேவலமாக உள்ளது.

வணக்கத்துக்குரிய அருட்தந்தை சிறில் காமினி, குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு அழைக்கப்பட்டதை ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அரசாங்கத்தின் பணிவிடையாளர்களுக்கு துப்பாக்கிச் சூடு மேற்கொள்ள உத்தரவு விடுப்பதை விட்டுவிட்டு, அதிகாரத்துக்காக வாக்குறுதி அளித்ததன் பேரில் ஈஸ்டர் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்குமாறு கேட்கிறோம்.அதிகாரத்துக்காக நியாயம் தொடர்பில் உயர்வாகப் பேசியவர்களால் இன்று அநியாயம் தலைவிரித்தாடுவது நாட்டு மக்களை அவமதிக்கும் செயல் என்பதைச் சுட்டிக்காட்டுகிறோம். – என்றுள்ளது.

# அரசில் நம்பிக்கையில்லை; சர்வதேசமே தீர்வைக் கொடு!

## யாழ்ப்பாணத்தில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம்




**(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)**

**காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கொட்டும் மழைக்கு மத்தியிலும் யாழ்ப்பாணம் - கோயில் வீதியில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் அலுவலக முன்றலில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.**

**யாழ்ப்பாணம் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

**உலக நாடுகள் தமது பிள்ளைகளை மீட்டுத்தர வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கேட்டுக்கொண்டனர்.**

**அவர்கள், இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும், இந்த அரசில் நம்பிக்கையில்லை, சர்வதேசமே! நமக்கு தீர்வைக் கொடு போன்ற கோஷங்கள் எழுப்பியவாறு கொட்டும் மழையிலும் குடை பிடித்தவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

தாம் நடத்தும் போராட்டங்களுக்கு புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல் இருக்கின்றது என யாழ். மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் தலைவி தெரிவித்தார்.

கடத்தப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளைப் பெற்றுத் தாருங்கள் எனக் கோரியே தாம் போராட்டங்களை மேற்கொள்கிறோம் எனவும், போராட்டங்கள் நடத்தப்படும்போது புலனாய்வாளர்கள் ஏன் அச்சுறுத்தும் விதமாகச் செயற்படுகின்றார்கள் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

### இலங்கையின் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் நேற்று சனிக்கிழமை ஊடகங்களுக்கு வழங்கிய கேள்வி – பதில் அறிக்கையில் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் அதில் தெரிவித்தவை வருமாறு:–

கேள்வி:– இலங்கையில் இறுதி யுத்தம் தொடர்பில் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட முன்னாள், இந்நாள் முக்கிய பிரமுகர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி பாதிக்கப்பட்ட 200 தமிழர்கள் சார்பில் Global Rights Compliance LLR (GRC) என்ற சட்ட நிறுவனம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் வழக்கு நடத்துநருக்கு சமர்ப்பித்துள்ள ஆவணம் தொடர்பாக உங்கள் கருத்து என்ன? இது சாத்தியமா?

பதில்:– இலங்கையில் இறுதி யுத்தத்தின்போது நடைபெற்றது இனப்படுகொலை தான் என்று மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண சபை தீர்மானம் ஒன்றை இயற்றியுள்ளது.

இந்த இனப்படுகொலை தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணையை வலியுறுத்தி எல்லாத் தமிழ் கட்சிகளுமே கடந்த காலத்தில் வலியுறுத்தி வந்துள்ளன. அத்துடன், இலங்கையை சர்வதேச நீதிமன்றத்துக்கு பாரப்படுத்த வேண்டும் என்றும் எல்லா தமிழ் தேசிய கட்சிகளும் கூட்டாகக் கடிதம் ஒன்றில் கையொப்பமிட்டு ஐ.நாவுக்கு அனுப்பியுள்ளன.

ஆகவே, இந்த பின்னணியில், Global Rights Compliance LLP (GRC) செய்திருக்கும் இந்த நடவடிக்கை மிகவும் சரியானதும் அத்தியாவசியமானதும் காலத்துக்குப் பொருத்தமானதும் ஆகும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தைத் ஸ்தாபித்த ரோம் சாசனத்தில் இலங்கை கையொப்பமிடவில்லை என்ற போதிலும், ஏன், எவ்வாறு, எதற்காக இலங்கை தொடர்பில் பாதிக்கப்பட்ட 200 பேர் முறைப்பாடு செய்துள்ளார்கள் என்பதை 200 பேரின் சாட்சியங்களின் அடிப்படையிலும் மற்றைய சாட்சியங்களின் அடிப்படையிலும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இலங்கை தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும்.

அவ்வாறான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று உரிய சட்டக் கொள்கைகள், கோட்பாடுகள், வாதங்களுடன் இந்த முதலாவது தொடர்பாடலுக்கான ஆவணத்தை முறையாக Global Rights Compliance LLP (GRP) சமர்ப்பித்துள்ளது என்று நான் நம்புகின்றேன்.

கேள்வி:– இந்த சமர்ப்பணத்தின் அடிப்படையில் அடுத்து என்ன நடைபெறும்?

பதில்:– இலங்கை மீது விசாரணை நடைபெறுமா என்பது தொடர்பில் இப்பொழுது எந்த எதிர்வு கூறலையும் செய்ய முடியாது. ஆனால், சர்வதேச நீதிமன்றம் இந்த ஆவணத்தை பரிசீலித்து எடுக்கவிருக்கும் முடிவிலேயே அது தங்கி இருக்கின்றது. சட்டக் கோட்பாடுகளின் அடிப்படையிலும், எதிர்காலத்தில் மீண்டும் ஓர் இனப்படுகொலை இலங்கையிலோ அல்லது உலகின் வேறு எந்த நாட்டிலுமோ நடக்கக்கூடாது என்பதை கவனத்தில் கொண்டும் சர்வதேச குற்றவியல் நீதிமன் றம் இந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்யும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கேள்வி:– இந்த சமர்ப்பணத்தை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

பதில்:– அவசியமாக செய்யப்பட வேண்டிய ஒரு விடயத்தை நல்ல முறையில் Global Rights Compliance LLP (GRP) செய்திருக்கின்றது. பாதிக்கப்பட்ட 200 பேரின் சாட்சியங்களின் அடிப்படையில் சர்வதேச நீதிமன்றத்திடம் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டிருப்பதாக சொல்லப்படுகின்றது.

ஆகவே, இந்த ஆவண சமர்ப்பணம் வலுவானதாக செய்யப்பட்டிருப்பதாகவே நான் உணர்கின்றேன்.மேலும் இவ்வாறான நடவடிக்கைகள் இந்தக் கால கட்டத்தில் அவசியமாகின்றன. இங்கு எமது வடகிழக்கு நிலங்கள் பறிபோகின்றன. பௌத்தர்கள் இல்லாத இடத்தில் பௌத்த வணக்கஸ்தலங்கள் பலாத்காரமாக நிர்மாணிக்கப்படுகின்றன. தொல்பொருளியலைத் திரிபுபடுத்தி தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்த இடங்களை சிங்கள பௌத்தர்கள் வாழ்ந்த இடங்களாக எடுத்துக் காட்டி, பல ஏக்கர் காணிகளை தொல்பொருள் திணைக்களமும் வேறு காரணங்களை முன்வைத்து மற்றும் அரசாங்க திணைக்களங்கள் பலவும் எமது காணிகளைக் கையேற்று வருகின்றன.

அங்கு வாழும் தமிழ் மக்கள் இராணுவ ஒத்துழைப்புடன் விரட்டி அடிக்கப்படுகின்றனர். சிங்கள குடியேற்றம் தமிழர் தாயகத்தில் துரிதமாக நடைபெறுகின்றன. இனப்படுகொலையின் பல்வேறு பரிமாணங்கள் இவை. இவ்வாறான விசாரணைகளின் போது தற்போது இங்கு நடைபெறும் விடயங்களும் உண்மையை உலகம் உணர உதவி புரியும். நான் இந்த நடவடிக்கையை முற்றும் வரவேற்கின்றேன். – என்று உள்ளது.

### மஹிந்தானந்தவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார் என வியாழனன்று அளுத்கமகே வெளியிட்ட கருத்துக்கே பிரதமர் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்.

தனக்கும் சீனத் தூதுவருக்கும் இடையில் கடந்த புதனன்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவ்வாறான கருத்துக்கள் எதனையும் தாம் வெளிப்படுத்தவில்லை எனவும், இந்தச் சந்திப்பில் அமைச்சர் மஹிந்தானந்த பிரசன்னமாகியிருக்காத நிலையில் ஏன் தான் தெரிவிக்காத கருத்தை தான் தெரிவித்தார் என்று கருத்து வெளியிட்டார் எனவும் பிரதமர் கேள்வி எழுப்பியுள்ளார்.

சீனாவிடம் இருந்து இலங்கைக்கு கடன் வழங்குவது தொடர்பில் இந்த சந்திப்பில் பிரதான கவனம் செலுத்தப்பட்டதாகவும், உர விவகாரம் தொடர்பில் சீனத் தூதுவருடன் மீண்டும் கலந்துரையாடப்படும் எனவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

### தமிழ் மக்களாட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மக்களாட்சி செயற்குழு அறிவித்துள்ளது.

அவ்வேலைத்திட்டத்திற்கான கேள்விக் கொத்துக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மிக விரைவில் அவற்றை மக்கள் மத்தியில் சமர்ப்பித்து அவர்களிடம் அபிப்பிராயங்கள் பெறப்படுமென செயற்குழு சார்பில் சட்டத்தரணி எவ்.எஸ்.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை கருத்தொருமிக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ள தமிழ் மக்களாட்சி செயற்குழுவின் செய்தியாளர் மாநாடு நேற்று சனிக்கிழமை திருகோணமலையில் இடம் பெற்றது.

அங்கு விளக்கமளித்த போதே சட்டத்தரணி விஜயகுமார் இதனை தெரிவித்தார்.

தமிழ் மக்களாட்சி செயற்குழுவின் செயற்திட்ட இணைப்பாளராக அவர் ஊடகவியலாளர் மாநாட்டில் பங்கெடுத்திருந்தார்.

அவருடன் சட்டத்தரணிகள் யாழினி கௌதமன் மற்றும் வீ.எஸ். தனஞ்சயன் ஆகியோரும் தமிழ் மக்களாட்சி செயற்குழுவின் சார்பில் ஊடகவியலாளர் மாநாட்டில் பங்கெடுத்திருந்தனர்.

முன்னதாக தமிழ் மக்களாட்சி செயற்குழுவின் ஏற்பாட்டாளர்களான தென்கையிலை ஆதீனத்தின் குரு முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் மற்றும் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்திற்குரிய கலாநிதி நோயல் இமானுவேல் ஆண்டகை , ஆகியோரும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு ஆசி மற்றும் அறிமுக உரையை வழங்கியிருந்தனர்.

தமிழ்மக்களின் அரசியல் அபிலாஷைகள் மற்றும் தமிழ் தேசியத்தை மக்களின் இயல்பான கருத்துக்கள் ஊடாக வெளிப்படுத்தி அவற்றை ஆவணப்படுத்த வேண்டும். தமிழ்த் தேசிய கோரிக்கைகளை முன்வைக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தக் கோரிக்கையில் தெளிவான நிலைப்பாட்டில் இருக்கும் வகையில் மக்களின் கருத்துக்கள் கேள்விகள் மூலமாக உறுதிப்படுத்தப்படும். இவ்வேலைத்திட்டம் தொடர்பாக பத்திரிகை ஆசிரியர்கள், அரசியல் பத்தி எழுத்தாளர்கள், ஊடக நிறுவனங்களின் செய்தியாசிரியர்கள் ஆகியோருடனும் தொடர்ச்சியாக கலந்துரையாடி இருப்பதாகவும் சட்டத்தரணி விஜயகுமார் தெரிவித்தார்.

இதனிடையே ஊடகவியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த செயற்குழு உறுப்பினர் விஜயகுமார் , தமிழ் தேசிய நிலைப்பாட்டில் மக்கள் தெளிவாக இருக்கின்றனர் எனவும், அதனைச் செம்மைப்படுத்தி ஆவணப்படுத்துவதே தமது நோக்கம் என்றும் தெரிவித்தார்.

எந்த அரசியல் கட்சிகளையும் ஒற்றுமைப்படுத்தும் அல்லது அவர்களை ஒரே கூட்டமைப்பாக செயற்பட வைப்பது தமது நோக்கம் அல்ல எனத் தெளிவுபடுத்திய அவர், தமிழ்த் தேசியக் கருத்தியலை ஒருமித்த குரலில் பேச வைப்பதே தமது நோக்கம் என்றும் தெரிவித்திருந்தார்.